

கல்கி
KALKI 9.4.1972
அன்பே, அகிலா!
சித்திரத் தொடர் கதை
ஏப்ரல் 16-ல் இளைஞர் மலரில் ஆரம்பம்
45
காசு



for that millionaire look
Century
for 100% cotton
textiles
CENTURIZED
PRESHRUNK FABRIC
THE
CENTURY
SPG. & MFG. CO. LTD.,
BOMBAY 25 DD
Century's
Cosy-Cot
cotton SHIRTINGS
with Rich Woollen Feel
For Fashion Fabrics choose
Century Shirtings!
NPS-CM 16

விரோதிக்ருத், பங்குனி 27 — ஏப்ரல் 9, 1972

கல்கி

பொருளடக்கம்



''கல்கி''யில் வெளியாகும் கதை களில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங் களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை(இலங்கைநாணயப்படி)	ரூ. 27-00	ரூ. 13-50

வயிற்றுக் கோளாறு?

வாயுவா?
அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?





2 ரென்னி மாத்திரைகளை மெல்லுங்கள்...
விரைவிலேயே நிவாரணம் பெற

பெப்பர்மின்ட் சுவையுள்ள ரென்னியை கைவசம் வைத்திருங்கள்.

நிக்கோலஸ் Ⓝ தயாரிப்பு

mcm/ni/4 tam

தமிழ்த் திருநாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
--- பாரதியார்

முதலையுடன் விளையாடாதீர்!

ராஜாஜி

பாண்டிய நாட்டு நகரங்கள் ஒன்றில் பெரிய பள்ளிக்கூடத்துக்குத் தலைமை தாங்கும் வாத்தியார் எனக்குச் சமீபத்தில் எழுதிய கடிதம், தமிழ்த் தம்பிமார் எல்லாரும் படிக்க வேண்டிய கடிதம்:

பெருமைக்குரிய மேதகு ஐயா அவர்களுக்கு,

தங்கள் பாதங்களைப் பணிவன்புடன் வணங்குகிறேன். இந்த முதுமைப் பருவத்திலும் நீங்கள் மதுவின் கொடுமைகளை எதிர்த்துச் செய்து வரும் பெரும் போரினை எண்ணி எண்ணி நெஞ்சம் நெகிழ்கிறேன்.

நிற்க, குறுகிய காலமாக, கடந்த ஓராண்டு காலமாக மதுவருந்தி மயங்கிக் கிடந்தேன். கொழுங்கனிச் சாறு என்றும் சுவை தரும் தேறல் என்றும் பருகினேன். மன்னியுங்கள். இன்று வெட்கமும் வேதனையும் அடைகிறேன். 'கல்கி'யின் வழியே தங்கள் கருத்துரைகள் கண்டு அவற்றைப் பசுமரத்தாணிபோல் உள்ளத்தில் பதித்துக் கொண்டேன்.

இன்று ஸ்ரீ இராம நவமி. பச்சைவண்ணன் திருக்கழல் மீதும், மதுவின் கொடுமைகளை எண்ணித் துடிக்கும் தங்களின் தூய உள்ளத்தின் மீதும் ஆணையிட்டுச் சொல்கிறேன். இனிமேல் சாகுமளவும் இதைத் தீண்டேன். இது உறுதி.

எனது முடிவை உடனடியாக உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்னும் பெருவேட்கையினால் எழுதுகிறேன். தங்களைத் தவிர இதனை நான் வேறு யாரிடம் சொல்லி மகிழ முடியும்?

தங்கள் மலரடிகளுக்கு மீண்டும் என் வணக்கங்கள். இயலுமாயின் என்னை ஆசீர்வதித்துத் தங்கள் திருக்கரத்தால் மடல் எழுதுங்கள். சிரமத்திற்கு மன்னியுங்கள்.

தங்கள் அன்புச் சிறுவன்,

மூளையைத் தின்னும் மதுபானம் முதலில் விளையாட்டாகத்தானிருக்கும். பிறகு உயிரைக் குடிக்கும் விஷமாகும். விவேகம் தலையெடுத்துச் சில நாட்கள் கழித்த பின் மறுபடியும் குழியில் விழும் மனத் தடுமாற்றம் ஏற்படும். பகவான் அருளைக் கொண்டு தான் காப்பாற்றிக் கொள்ள முடியும். திடமான தீர்மானமும் பகவான் அருளை நாடிப் பிரார்த்தனையும் வேண்டும்.

முதலை வாயில் சிக்காமல் தப்ப ஆண்டவன் அருளைப் பக்தியுடன் நாட வேண்டும். அதுவே எல்லா பலத்துக்கும் மூலம்.

சமூக நீதியா, சோஷலிஸமா?

சுதந்திரக் கட்சியின் கொள்கைகளில் சர்க்கார் சர்வாதிபத்தியத்தை எதிர்ப்பது எவ்வளவு முக்கியமானதோ, அவ்வளவு முக்கியமான இன்னொரு கொள்கை, சமூக சம நீதியை ஏற்படுத்துவது. 1950ல் அமலுக்கு வந்த மூல அரசியல் சாஸனத்தில் சமூக சமநீதி தேசிய லட்சியங்களில் ஒன்றாகக் கூறப்பட்டிருக்கிறது. எந்த நல்ல அரசாங்கமும் சமூகத்தில் சமநீதி நிலவுவதை ஒரு மகத்தான, முறையான நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

சோஷலிஸம்தான் சமூக சமநீதியை எய்துவதற்கான உபாயம் என்று தவறாகக் கருதப்படுகிறது. உண்மையிலோ சமூக சம நீதிக்கு உதவாமல் தேசிய உற்பத்தியைக் குலைக்கும் நடவடிக்கைகளுக்கும், கொள்கைகளுக்கும்தான் சோஷலிஸம் என்ற பெயர் தரப்பட்டுள்ளது. சோஷலிஸம் என்பது சர்க்கார் சர்வாதிபத்தியமாகவே இருக்கிறது. மக்களின் சுதந்திர வாழ்முறையை அழித்து, அவர்கள் மீது அரசாங்கம் பூரண ஆதிக்கம் செலுத்த வகை செய்வதே சோஷலிஸமாக இருப்பதைக் காண்கிறோம். சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கிற சோஷலிஸக் கொள்கைகளும் நடவடிக்கைகளும் சமூக சமநீதியை நிலைநாட்டச் சிறிதும் உதவா. சமூக சமநீதிக்கு முதல் ஆதாரம் உற்பத்திப் பெருக்கம். இதைத் தடுக்கிற சோஷலிஸம் சமூக சமநீதி ஏற்படுவதையும் தள்ளி வைக்கிறது. சர்க்காரின் பறிமுதல் திட்டங்கள், சொத்து வரம்புச் சட்டங்கள், கடும் வரி விகிதம் இவற்றால் உழைப்பையும், உற்பத்தியையும் நலிவுறச் செய்த பின் சமநீதி நடவடிக்கை எடுப்பதற்கு இடமே இல்லை.

நல்ல நோக்கங்களை எய்தவும் கூடத் தரும விரோதமான காரியத்தை அல்லது வன்முறையை மேற்கொள்ளக் கூடாது என்பது காந்திய நெறி. தவறான வழியால் நல்ல இலட்சியத்தை அடைய முடியாது என்று சாதாரணப் பகுத்தறிவுள்ள எவரும் உணரலாம். வெறும் ஆத்திரத்திலும் அசூயையிலும் பிறந்த சோஷலிஸக் கொள்கைகளின் மூலம் முதலீட்டாளர்களை அடித்து நொறுக்கியும், இது போன்ற மற்ற நடவடிக்கைகளைச் செய்தும் சமநீதியை ஏற்படுத்தப் பார்ப்பது அடியோடு தவறாகும். உற்பத்தி உயர்வுக்கு அவசியமான முதலீட்டைத் தடுக்கிற ஒரு கொள்கை சமநீதியை அடைய வழியாகாது. தவறுகளில் மிகப் பெரும் தவறாக இப்போது நிலவும் கடும் வரி விகிதத்தால் உற்பத்தியாளர்களின் உற்சாகம் அடியோடு குன்றிவிட்டது. இந்த வரி விதிப்புக் கொள்கையில் காந்திய தருமத்தின் பெயரை இழுக்க வேண்டிய அவசியம் இல்லை. எந்த நன்னெறிக் கோட்பாட்டையும் இழுக்காமல் பட்சபாதமின்றி யதார்த்த உண்மைகளை உள்ளபடி புரிந்து கொண்டு சாமானிய கணக்கு அறிவுடன் வரி விதித்தாலே போதும். — இதுவே இன்று தேசத்துக்குத் தேவை. சாமானியக் கணக்கறிவுகூட அரசாங்கத்துக்கு மறந்துவிட்டிருக்கிறது. பிரிட்டனைப் பின்பற்றி நமது நீதி பரிபாலன முறையை அமைத்துக் கொண்டிருப்பது போல் பிரிட்டனிடமிருந்து வரி விதிப்பிலும் நமது அரசு பாடம் பெற வேண்டியிருக்கிறது. ஒரு வரம்புக்கு மேல் வரி விகிதத்தை உயர்த்தினால் அதன் பின் சர்க்காரின் வருமானம் குறையத்தான் தொடங்கும். கடும் வரியால் முதலீடும் உற்பத்தியும் குறையும்போது, சர்க்கார் வருமானமும் குறைய வேண்டியதுதான். பிரிட்டனில் வரி விகிதங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டிருப்பது நமக்குப் படிப்பினையாகும்.

சமூக நீதிக்குப் பாடுபடும் சுதந்திரக் கட்சி பணக்காரர்களின் கட்சி என்று வெகுவாகப் பொய்ப் பிரசாரம் செய்யப் பட்டிருக்கிறது. சுதந்திரக் கட்சியானது முதலாளிகள், முன்னாள் மன்னர்கள் ஆகியோருக்காகவே ஏற்படுத்தப்பட்டது என்ற புரளி விரிவாகப் பரப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பொய்ப் பிரசாரத்தைச் சமாளிப்பதற்கான ஒரு நடவடிக்கையாகச் சுதந்திரக் கட்சியின் பெயரை மாற்றி விடலாம் என்று சமீபத்தில் என்னைக் காண வந்த ஸ்ரீ தாண்டேகர் யோசனை கூறினார். அந்த யோசனையை ஆதரிக்கலாம் என்றே அப்போது எனக்குத் தோன்றியது. ஆனால் பிற்பாடு சிந்தித்ததில் பெயர் மாற்றத்தால் பலன் இராது எனக் கண்டேன். சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் திரித்துக் கூறிப் பிரசாரம் செய்பவர்கள், அந்தக் கட்சியின் பெயர் மாறினாலும் இந்தப் பிரசாரத்தைத் தொடர்ந்து செய்வார்கள். மக்களை ஏமாற்றவே கட்சியின் பெயரை மாற்றித் தந்திரம் செய்கிறோம் என்று பரிகாசமும் செய்வார்கள். எனவே நம் கொள்கைகளின் உண்மைகளை மக்களுக்கு விளக்குவதில் நாம் முயற்சியை அதிகமாக்குவதொன்றே கட்சிக்குப் பலன் தரும். எவ்வளவு தெளிவாக முடியுமோ அவ்வளவு தெளிவாக எழுதியும் பேசியும் கட்சியின் இலட்சியங்களை மக்களுக்கு விளக்க வேண்டும். பிரதமரும் அவரது கட்சியும் சாஸனத்தைத் தகர்த்து, ஜனநாயகத்தையும், சுதந்திர வாழ்வையும் அழித்து, கம்யூனிஸ நாடுகளில் உள்ளதுபோல் மக்களைச் சர்க்காரின் பூரண ஆதிக்கத்தின் கீழ் அடிமைகளாக்குவதற்கு முயலுகிறார்கள். இதற்கு மக்கள் அநுமதியும் உதவியும் தருவதன் ஆபத்தை விளக்கி நாம் தளராமல் எச்சரிக்க வேண்டும். அதுவே நம் கடமை.

ராஜ்ய சர்க்கார்களும் மூல சாஸனத்தை வெறும் காகிதத் துண்டாகக் கருதி எடுக்கிற நடவடிக்கைகளைத் தினந்தோறும் கண்டு வருகிறோம்.

கம்யூனிஸ்ட் சீனத்தின் ஏகாதிபத்தியத்துக்கு இந்தியா பலியாகிற பெரிய ஆபத்து உள்ளது. இன்று போகிற போக்கு இந்த முடிவுக்குத்தான் அழைத்துச் செல்லும். இதை நீடிக்க விட்டால் இந்தியா — சோவியத் உடன்படிக்கைகூட நம்மைக் காப்பாற்ற முடியாத நிலையே ஏற்படும்.

(அடிப்படை: **ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.**)

ராஜாஜியின் கருத்துக்கள்

ஸ்தாபன காங்கிரஸின் கடமை

உற்பத்தி உயர்வைவிட சோஷலிஸ லட்சியத்துக்கே ஸ்ரீமதி இந்திரா காந்தியின் அரசாங்கம் முக்கியத்துவம் தரும் என்பது புதுதில்லி பத்திரிகை நிருபர்களின் மதிப்பீடு. அதாவது சமூக சமநீதி ஏற்படுத்துவதைக் காட்டிலும், சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துவதிலேயே இந்திரா அரசு முனைப்பாக உள்ளது என்று பொருள். மக்களின் சுதந்திரத்துக்கு ஒரே காப்பாக இருந்தது சாஸனம் தந்த அடிப்படை உரிமைகள். இதை அழிப்பதில் ஆள்கிற கட்சிக்கு ஸ்தாபன காங்கிரஸும் ஆதரவு தந்துவிட்டது. இப்போதேனும் ஸ்தாபன காங்கிரஸ்காரர்கள் தாங்கள் செய்த தற்கொலைக்கு ஒப்பான தப்பிதத்தை உணர வேண்டும். ஜனநாயகத்தை அழிக்கும் குற்றத்துக்குத் தாங்களும் உடந்தையாக இருக்கக் கூடாது என்று ஸ்தாபன காங்கிரஸ் தலைவர்கள் விரும்புவராயின், தங்களது போக்கை மாற்றிக் கொண்டு, மூல சாஸனத்தைக் காக்கும் பணியில் இறங்க வேண்டும். மூல சாஸனத்தைக் காப்பதையே உறுதியான லட்சியமாகக் கொண்டுள்ள மற்ற அனைவருடனும் ஸ்தாபன காங்கிரஸ் கை கோத்துப் பணிபுரிய வேண்டும். எல்லோருமாகச் சேர்ந்து அந்தரங்க சுத்தமாகவும், விடா முயற்சியுடனும் சமூக சமநீதிக்குப் பாடுபட வேண்டும்; சோஷலிஸம் என்னும் சர்க்கார் சர்வாதிகாரத்தை அகற்ற முயல வேண்டும்.

ஏமாற்றமே விளையும்

சர்க்கார் துறையில் ரெனல்ட் கார்களை உற்பத்தி செய்யத் தொடங்கக் கூடும் என்ற செய்தியைப் படித்து மிகவும் வேதனை அடைந்தேன். இவ்வித உற்பத்தியால் நமது நாட்டின் ஏற்றுமதி நிலைமையை அபிவிருத்தி செய்து கொள்வதற்குத் துளிக்கூட வாய்ப்பு இல்லை. இதுவரை நாம் அடைந்த பல ஏமாற்றங்களோடு இன்னொர் ஏமாற்றமும் கூடும். சர்க்கார் துறை செலவழிப்பதற்காக நாடு தருகிற நிதி வசதிகளைக் கொண்டு இதைக் காட்டிலும் எவ்வளவோ நல்ல நோக்கங்களுக்காக முதலீடு செய்ய வேண்டும்.

மிதமாகக் குடிப்பவன் கதி!


முதலைக் குட்டி அழகாக இருக்கிறதென்று வளர்த்த மனிதன் முடிவில் முதலைக்கே ஆகாரமாகின்ருன்.

அதுபோல, மிதமாய்க் குடிக்கத் தொடங்கும் எவரும் முடிவில் பெருங் குடிகாரராகி-குடிக்கே இரையாகி நாசமடைவது நிச்சயம்.


ஆகையால்

சகோதரனே! **கள்ளு சாராயம்** குடியாதே!
மனைவி மக்களுக்குத் துரோகம் செய்யாதே!

(விமோசனம் 1929)



தலைநகரில் ஒரு தனிமனிதர்



ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்க ஆடிட்டர்களின் பணி மிக முக்கியமானது என்பதை எவ்வளவு வலியுறுத்தினாலும் போதாது. அரசாங்கங்கள் சரியான முறையில் செய்யும் செலவுகளை அங்கீகரிப்பதுடன் அநாவசியச் செலவுகளை அவ்வப்போது சுட்டிக்காட்டி மக்கள் மன்றத்தில் வைக்கும் கடமை அவர்களுடையது. இதனால் மக்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த அரசு தாங்கள் வைத்த நம்பிக்கைக்குக் குந்தகமில்லாமல் செயல்படுகிறதா என அறிய முடிகிறது. அரசுக்கும் ஊதாரித்தனமான செலவு செய்யப் பயமும் தயக்கமும் ஏற்படும்.

இந்தப் பயமும் தயக்கமும் இந்திய ஜனநாயகத்தில் நம்மை ஆள்வோருக்கு ஏற்பட்டிருக்கிறதோ இல்லையோ, நமது ஆடிட்டர்கள் தங்கள் கடமையை அவ்வப்போது கருத்துடன் நிறைவேற்றி வந்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவின் ஆடிட்டர் ஜெனரலாகச் சமீப காலம் வரை இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற திரு எஸ். ரங்கநாதன் ஆடிட் தொழிலுக்கே கௌரவம் கூட்டியவர்.

1932ம் ஆண்டில் இந்திய அரசாங்கப் பணியில் சேர்ந்த இவர் கடந்த நாற்பது ஆண்டுகளாகப் பல துறைகளில் அரும்பணி ஆற்றி வந்துள்ளார். ஆனால் அவரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு பெற்ற எவரும், 'இவரா? இவ்வளவு எளிமையாகக் காட்சி தரும் இவரா அத்தனை உயர் பதவிகளையும் வகித்தவர்?' என்று எண்ணுவார்கள். அதிலும் அந்த நாளைய ஐ.ஸி.எஸ். வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இயல்பாகவே வந்து சேருகிற மிடுக்கு கிஞ்சித்தும் இல்லாதவர். அடக்கமும் சாந்தமும் நிரம்பி, அவரைப் பற்றி ஏதாவது கேட்டால் சற்றுக் கூச்சமடைந்தவர் போல் தலையை ஒருபுறமாகத் திருப்பிக் கொண்டு மிருதுவான குரலில்தான் பதிலளிப்பார்.

'இப்படிப்பட்ட ஒருவர் வாழ்க்கையில் எப்படி முன்னேற முடியும்? கொஞ்சம் வாசாலகமாகப் பேசித்தானே காரியங்களைச் சாதித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது?' என்று எண்ணுபவர்களுக்கு, உண்மையான உழைப்பும் கடமையில் கருத்தும் கொண்டிருந்தால் முன்னேற்றம் தடைப்படாது என்று ரங்கநாதனின் வாழ்க்கை பதிலளிக்கிறது.

1932-ம் ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் பணியாற்றத் தொடங்கியவர் முப்பத்தைந்தில் புதுதில்லிக்கு வந்து சேர்ந்தார். அன்று முதல் அங்கேயே இருந்து படிப் படியாகப் பல பதவி உயர்வுகளைப் பெற்றார். வர்த்தகத் தொழில் மந்திரி சபையில் பத்து வருஷங்கள்

இரு கோயில்களில் இறைபணி

சுமார் அறுபதாண்டுகளுக்கு முன் லால்குடிக்கு அருகே உள்ள சிறுதையூரில் புதையுண்டு கிடந்த ஒரு புராதன மகாலிங்கம் கண்டெடுக்கப்பட்டு, மறுபடியும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கைலாசநாதர் என்ற பெயரில் பெருமான் அநுக்கிரகம் செய்து வருகிறார். இவ்வாலயத்தில் பழுது பார்த்துத் திருப்பணி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதோடு நீண்ட காலமாகப் பல குடும்பங்களின் குலதெய்வமாக அருகே எழுந்தருளியுள்ள ஸ்ரீ இளமாடிச்சி அம்மன் கோயிலுக்கும் திருப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மகா கும்பாபிஷேகம் உள்பட இரு ஆலயங்களிலும் திருப்பணி முடிக்க ரூ. 50,000 தேவைப்படுகிறது. ஆஸ்திக அன்பர்களின் பொருளுதவி கீழ்க்காணும் முகவரிக்குக் கோரப்படுகிறது. பொருளாளர்: ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத் திருப்பணிக் குழு, சிறுதையூர், லால்குடி, திருச்சி மாவட்டம்.

காரியதரிசியாகப் பணியாற்றினார். அமரர் லால்பகாதூர் சாஸ்திரியின் மதிப்புக்குப் பாத்திரரானார். கடைசியாக இந்தியாவின் ஆடிட்டர் ஜெனரலாகவும் விளங்கினார்.

திரு ரங்கநாதன் எந்த ஒரு பிரச்னையையும் சட்டென்று கிரகித்துக் கொண்டு துரிதமாகச் சரியான முடிவெடுத்துச் செயலாற்றும் திறன் படைத்தவர். சிறந்ததோர் அரசாங்க அதிகாரியிடம் நாம் எதிர்பார்ப்பது இதைத் தானே? அதோடு புதுதில்லி முழுவதும் அலசித் தேடினாலும் ரங்கநாதனைப் பற்றிக் குறை சொல்லக்கூடிய ஓர் ஆசாமியைப் பார்க்க முடியாது. இந்த அளவில் அவர் தலைநகரில் வாழும் ஒரு தனித்துவம் பெற்ற தனிமனிதர் ஆவார். இவர் எவ்வளவு உயர்ந்த மனிதர் என்பதைப் புரிந்து கொள்ள வேறென்ன கூற வேண்டும் ?

தமது தகப்பனார் திரு சௌரிராஜன் போலவே கல்வி போதிக்கும் துறையில் இறங்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் ரங்கநாதன், ராஜதானி கல்லூரியில் பி.ஏ.ஆனர்ஸ் பட்டம் பெற்றபின் ஒரு கல்லூரிக்கு விரிவுரையாளர் பதவியில் அமர மனுப் போட்டார். அதற்குப் பதிலே இல்லை. அது இந்திய அரசுக்கு யோகம் அடித்ததாகியது !

உதகமண்டலத்தில் சில நாட்கள் தங்கியிருந்தபோது யாரோ பராபரியாகச் சொன்னார்கள், 'என்டா எத்தனையோ பேர் ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தராகப் படாதபாடுபடுகிறார்களே, நீயும்தான் முயன்று பாரேன்' என்று.

ரங்கநாதன் 'சரி, நாமும்தான் பரீட்சை கொடுத்துப் பார்ப்போமே' என்று ஓரளவு அலட்சியபாவத்துடனேயே அக்காரியத்தில் இறங்கினார். வெற்றி கிட்டியது. இங்கிலாந்தில் பயிற்சி பெற்றுத் திரும்பினார்.

ஆடிட்டர் ஜெனரலாகக் கடந்த ஐந்தரை வருஷங்களாகப் பணியாற்றிவிட்டு உரிய காலத்துக்கு ஐந்து மாதங்கள் முன்னதாகத் தாமாகவே ஓய்வு பெற்றுக் கொண்டார். ராஜ்யங்கள் முழுவதிலும் தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள அரசியல் மாறுதல்களால் மத்திய அரசிலும் மாறுதல்கள் நிகழக்கூடும் என்று எதிர்பார்த்து. அதனால் தமக்குப் பின்னால் ஆடிட்டர் ஜெனரலாகப் பதவி ஏற்கப் போகிறவர் இப்போது முதலே அப்பதவியில் இருந்தால் அவருக்கு வசதியாக இருக்கும் என்று கருதி இவ்வாறு ரங்கநாதன் உரிய காலத்துக்கு முன்பு தாமாகவே ரிடையரானார். இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மையை அபூர்வமாகத்தானே நாம் காண முடிகிறது இன்றையச் சூழலில்?

பல முறை அயல்நாடுகள் சென்று திரும்பியுள்ள ரங்கநாதன், அயல்நாட்டு ஆடிட்டர்கள் பலரைப் புதுதில்லியில் வரவேற்று உபசரிக்கும் வாய்ப்பு தமக்குக் கிட்டியதை நினைத்து மகிழ்கிறார். காமன்வெல்த் ஆடிட்டர்கள் மகாநாட்டைப் புதுதில்லியில் நடத்தித் தமக்கு மட்டுமின்றி நாட்டுக்கும் பெருமை தேடித் தந்தார்.

ஐ. நா. ஆதரவில் கனடா, மாண்ட்ரியால் நகரில் நடந்த ஓர் ஆடிட்டர்கள் மகாநாட்டுக்கும் அண்மையில் சென்று பங்கு பற்றித் திரும்பினார்.

சமீபத்தில் சென்னை வந்திருந்த ரங்கியை (நண்பர்கள் 'ரங்கி' என்றுதான் அவரை அழைக்கிறார்கள்), ''ரிடையராகிவிட்டதால் இனி சென்னையில்தானே வாசம்?'' என்று கேட்டபோது, ''இல்லை என் மகன் தில்லியில் வாழ்வதால் அங்குதான் இருப்பேன். இங்கே என் தமையன் மகள் கல்யாணத்துக்கு வந்திருக்கிறேன்'' என்றார்.

புது தில்லியை வாசஸ்தலமாகக் கொள்ளவிருக்கும் ரங்கநாதனைத் தலைநகர் வாளாவிருக்க விடாது என்றும் அவரது பரந்த அநுபவத்தையும் நிர்வாக ஆற்றலையும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் என்றும் எதிர்பார்ப்போம்.



இசை வழியே ஈசுவரானுபவம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

கல்வித் தெய்வமான சரஸ்வதி கையிலே வீணை வைத்திருப்பது எல்லோருக்கும் தெரியும். பரமேசுவரனின் பத்தினியான சாக்ஷாத் பராசக்தியும் கையிலே வீணை வைத்திருப்பதாகக் காளிதாஸர் 'நவரத்னமாலா' ஸ்தோத்திரத்தில் பாடுகிறார். அம்பாள் விரல் நுனியால் வீணையை மீட்டிக் கொண்டிருப்பதாகவும், ஸரிகம பதநி என்ற ஸப்த ஸ்வரங்களின் மாதுரியத்தில் திளைத்து ஆனந்திப்பதாகவும் பாடுகிறார்.

ஸரி கம பதநி ரதாம் தாம்
வீணா ஸங்க்ராந்த காந்த ஹஸ்தாந்தாம்

இப்படி சங்கீதத்தில் முழுகியுள்ள **சிவகாந்தா** (சிவனின் பத்தினி), **சாந்தாவாக**வும் (அமைதி மயமாகவும்), **ம்ருதுள ஸ்வாந்தாவாக**வும் (மென்மையான திருவுள்ளம் படைத்தவளாகவும்) இருக்கிறாள் என்கிறார் காளிதாஸர். அவளை நமஸ்கரிக்கிறேன் என்கிறார்.

சாந்தாம் ம்ருதுள ஸ்வாந்தாம்
குசபாரதாந்தாம் நமாமி சிவகாந்தாம்

அவர் சுலோகத்தைச் செய்து கொண்டு போயிருக்கிற ரீதியைக் கவனித்தால், அம்பிகை ஸங்கீதத்தில் அமிழ்ந்திருப்பதாலேயே அவள் சாந்த ஸ்வரூபிணியாக ஆகியிருக்கிறாள் என்று தோன்றுகிறது. அதே போல ஸங்கீத அநுபவத்தினால்தான் அவளுடைய உள்ளம் மிருதுளமாக — புஷ்பத்தைப் போல் மென்மையாக — கருணாமயமாக ஆகியிருக்கிறது என்று தொனிக்கிறது.

சாக்ஷாத் பராசக்தியை இப்படி ஸங்கீத மூர்த்தியாகக் காணும் போது அவளுக்கு **சியாமளா** என்று பெயர். ஸங்கீதத்தில் தோய்ந்து ஆனந்த மயமாகவும், சாந்தமயமாகவும், குழைந்த உள்ளத்தோடும் உள்ள சியாமளா தேவியைத் தியானித்தால், அவள் பக்தர்களுக்குக் கருணையைப் பொழிவாள். அவளது மிருதுவான இருதயத்திலிருந்து கருணை பொங்கிக் கொண்டே யிருக்கும். தெய்விகமான ஸங்கீதம் ததும்பும் சந்நிதியில், சாந்தமும் ஆனந்தமும் பொங்கும். சிவகாந்தாவிடம் சரண் புகுந்தால் நமக்கும் அந்த சாந்தமும் ஆனந்தமும் கைகூடும்.

இந்த சுலோகத்திலிருந்து ஸங்கீதமானது ஆனந்தம், சாந்தம், மிருதுவான உள்ளம், கருணை, அன்பு ஆகிய எல்லாவற்றையும் அளிக்கும் என்று தெரிகிறது.

வேத அத்தியயனம், யோகம், தியானம், பூஜை இவற்றைக் கஷ்டப்பட்டு அப்பியசிப்பதால் கிடைக்கிற ஈசுவராநுபவத்தைத் தெய்விகமான ஸங்கீதத்தின் மூலம் சுலபமாகவும் சௌக்கியமாகவும் பெற்று விடலாம். நம் மனசைத் தெய்விகமான ஸங்கீதத்தில் ஊற வைத்து, அதிலேயே கரைந்து போகச் செய்தால் கஷ்டமில்லாமல் ஈசுவரனை அநுபவிக்கலாம். சங்கீதம் என்ற மார்க்கத்தின் மூலம் தங்கள் இருதயங்களைப் பரமேசுவரனிடம் சமர்ப்பணம் செய்த தியாகராஜர் போன்ற பக்தர்கள், சங்கீதமே சாக்ஷாத்காரத்தைத் தரும் என்பதற்குச் சாட்சிகளாக இருக்கிறார்கள்.

அம்பாள்தான் பிரம்மத்தின் சக்தி. சங்கீதம் அல்லது நாதம்தான் ஈசுவரன் அல்லது பிரம்மம். அம்பாள் சங்கீதத்தில் சொக்கி ஆனந்தமா யிருக்கிறாள் என்றால் பிரம்மமும் சக்தியும் வேறு வேறாக இல்லாமல் ஒன்றிய அத்வைத ஆனந்தத்தையே குறிக்கும். அத்வைத நிலையிலும் அம்பாள் தன் இயற்கையான கருணையைப் பொழிவதால், ஸங்கீதத்தின் மூலம் அவளை உபாஸிப்பவருக்கு அநுக்கிரகம் புரிந்து அவர்களது ஆத்மா பரமாத்மாவிலேயே கரைந்திருக்குமாறு செய்கிறாள்.


ULKA CTP-34 Tam
அந்த நாள் ஒய்யாரம் குடும்பத்துக்கு
கொண்டு தந்தது எதுவோ ?
Binaca
அதுவோ பினகா !
அதன் புதிய ஸாண்டல்வுட் டால்க்மூலம்
பினகா, சந்தனத்தின் சாறெடுத்து,
சத்தெடுத்து, சருமப் பராமரிப்பு
சாதனம் கலந்தெடுத்து படைத்துள்ளது.
சுழல் வண்ணப் பெட்டியினில் அடைத்து
அளித்துள்ளது. அந்நாள் ஒய்யாரத்
தன்னில், குடும்பத்தினரைக் கொலுவேற்ற,
சந்தன மயமான புதிய பாதை—இன்றே
ஒரு புதிய பினகா ஸாண்டல் வுட்
டால்க் டின் வாங்கி அளிப்பீர்.
நாட்டம் அவர்க்கு சந்தனத்தில்
இல்லை எனில், நாடிப் பெறுவீர்
பினகா ரோஸ் டால்க்
பினகா
டால்க்—குடும்பம் முழுக்க விரும்பும்
C I B A Cosmetics



அலை ஓசை

அமரர் கல்கி

24. நெஞ்சு விம்மியது!

மோட்டார் வண்டியின் சத்தம் கேட்டதும், சூரியா, "மதராஸ்காரர்கள் வந்து விட்டார்கள் போல் இருக்கிறது, அத்தை! ஐந்து மணிக்குத்தான் வருவதாக இருந்தது. நாலரைக்கேவந்துவிட்டார்களே?" என்றான்.

"ஆமாம், அப்பா! வேளை நெருங்கி வரும்போது எல்லாம் சீக்கிரமாகவே நடந்துவிடும். வேளை வராவிட்டால் ஒன்றும் நடவாது! வா, போகலாம்!" என்றாள் ராஜம்மாள்.

"நாம் அங்கே போய் என்ன செய்யப் போகிறோம்? அவர்கள் ஏதாவது செய்து கொள்ளட்டும். எனக்கு இது ஒன்றும் பிடிக்கவில்லை!" என்று சூரியா அலுத்துக் கொண்டான்.

"நன்றாயிருக்கிறது! குடும்பத்தில் இருபது வருஷத்துக்குப் பிறகு கல்யாணம் நடக்கப் போகிறது. பெண்ணுக்குத் தமையன் நீ! எல்லாவற்றையும் நீயல்லவா நடத்தி வைக்க வேண்டும்? நான் இருந்து ஒன்றும் ஆகப் போவதில்லையென்றாலும், சமயத்தில் இல்லாமற்போனால் யாராவது ஏதாவது நினைத்துக் கொள்வார்கள். புறப்படு, போகலாம்!" என்றாள் ராஜம்.

போகும் வழியில் சூரியா, "அத்தை! பம்பாயிலிருந்து கடிதம் வந்ததே! ஏதாவது விசேஷம் உண்டா? அத்திம்பேர் தானே கடிதம் எழுதியிருக்கிறார்? அவர் இந்தப் பக்கம் இப்போது வரமாட்டாரா?" என்று கேட்டான்.

"விசேஷம் ஒன்றுமில்லை. வடக்கே பாட்னா என்று ஒரு பட்டணம் இருக்கிறதாமே? ஒரு வேளை உத்தியோக காரியமாக அங்கே போகவேண்டியிருக்கும் என்று எழுதியிருக்கிறார். திரும்பிப் போகும்போது இங்கேவந்தாலும்வருவாராம். அதற்குள்ளே சீதாவுக்கு ஒருவேளை கலியாணம் நிச்சயமாகிவிட்டால்...."

"அத்தை! நீகூடப் பட்டிக்காட்டு ஸ்திரீகளைப் போல் ஓயாமல் 'கல்யாணம்' 'கல்யாணம்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறாயே? எதற்காக இவ்வளவு கவலை?"

"கவலைப்பட வேண்டிய காரியம், சூரியா! அதனால்தான் கவலைப்படுகிறேன்!" என்றாள் ராஜம்மாள்.

இருவரும் அக்கிரகாரத்தின் வீதியை அடைந்தபோது மோட்டார் வண்டி சீமாச்சுவய்யரின் வீட்டு வாசலில் நிற்பதைக் கண்டார்கள்.



கிட்டாவய்யரின் வீட்டில் லலிதாவினுடைய அலங்காரத்தின் கடைசிக் கட்டம் நடந்து கொண்டிருந்தது. சீதாவின் பரபரப்பைச் சொல்லி முடியாது. லலிதாவின் ஒரு கை வளையைக் கழற்றி இன்னொரு கையில் போடுவதும் ஒரு விரலில் உள்ள மோதிரத்தைக் கழற்றி இன்னொரு விரலில் போடுவதும் தலையில் வைத்திருந்த பூவை எடுத்து எடுத்துச் சரிப்படுத்தி வைப்பதும் முன் தலையையும் வகிடையும் சீப்பினால் இலேசாக அப்படியும் இப்படியும் வாரி அழகு பண்ணுவதும் நெற்றிப் பொட்டைப் பத்துத் தடவை மாற்றி மாற்றி வைப்பதுமாயிருந்தாள்.

சூரியாவைக் கண்டதும் சரஸ்வதி அம்மாள், "ஏண்டா! இத்தனை நேரம் எங்கேடா போனாய்? அத்தையோடு அரட்டை அடிப்பதற்கு இது தானா சமயம்? அவர்கள் சொன்ன நேரத்துக்கு அரை மணி முன்னதாகவே வந்துவிட்டார்கள். டிபன் கொண்டு கொடுப்பதற்காக உன்னைப் பார்த்தால் ஆளைக் காணோம். சிமாச்சு மாமாவோ 'நேரமாச்சு!' என்று குதிக்கிறார். கடைசியில் பரிசாரகனிடம் கொடுத்தனுப்பிச் சுண்டுவையும் கூடப் போகச் சொன்னேன். இப்போதுதான் போகிறார்கள். நீயும் போ! மாப்பிள்ளைக்கு நீயே கவனித்து டிபன், காப்பி எல்லாம் கொடு! ரவாகேசரி செய்து அனுப்பியிருக்கிறேன். பரிமாற மறந்துவிடப் போகிறான். நீ போய்க் கவனித்துக் கொள்! போ! சீக்கிரம் போ!" என்று விரட்டி அடித்தாள்.

"நான் ஒன்றும் போகவில்லை. எத்தனை பேர் போக வேண்டுமாம்? இதற்குள்ளே இவ்வளவு தடபுடல் எதற்காகப் பண்ணுகிறாய் என்று தெரியவில்லை!" என்றான் சூரியா.

"கேட்டாயல்லவா, பிள்ளையின் சமர்த்தை? அப்பாவைப் போலத்தான் பிள்ளையும்! இவர்களையெல்லாம் வைத்துக் கொண்டு நான் எப்படித்தான் நாளைக்குக் கலியாணம் பண்ணிச் சமாளிக்கப் போகிறேனோ, தெரியவில்லை!"

இதற்குள் சீதா, "சூரியா! அம்மா சொன்னதைக் கேட்டால் என்ன? மாப்பிள்ளையை நீ போய்க் கவனியாமல் பின்னே யார் கவனிப்பார்கள்?" என்றாள்.



''எல்லோருமாகச் சேர்ந்து அதற்குள், 'மாப்பிள்ளை' என்று ஸ்திரப் படுத்திவிடுகிறீர்களே! இன்னும் அந்த மேதாவி வந்து லலிதாவைப் பார்த்ததாக வில்லை!'' என்றான் சூரியா.

''அதுதான் நானும் சொல்கிறேன்!'' என்றாள் லலிதா.

''நீ பேசாமலிரு லலிதா!'' என்றாள் அவள் தாயார் சரஸ்வதி அம்மாள்.

''அம்மாஞ்சி! நீ இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறபட்சத்தில் நான் போய் வந்தவர்களுக்கு டிபன் பரிமாறிவிட்டு வருகிறேன்! நீ போகிறாயா, நான் போகட்டுமா? ஆண் பிள்ளையா, லட்சணமா ஜம்மென்று போக; 'மாப்பிள்ளை, ஸார்! வாருங்கோ!' என்று கையைப் பிடித்துக் குலுக்க! — அதை விட்டு இங்கே என்னத்தைச் செய்கிறாய்?'' என்றாள் சீதா.

''அப்படிச் சொல், சீதா! இந்த வீட்டிலேயே நீ ஒருத்திதான் சமர்த்து. நீ மட்டும் இன்றைக்கு இல்லாவிட்டால் இந்தப் பெண்ணின் தலையை வாரிப் பின்னி விடுகிறதுக்குள்ளே என்னை என்ன பாடுபடுத்தியிருப்பாள், தெரியுமா? உனக்கும் ஒரு வரனைப் பார்த்துக் கலியாணம் நிச்சயம் பண்ணிவிட்டால்தான் எனக்கு மனது நிம்மதியாகும்!''

''அதைப் பற்றி இப்போது என்ன பேச்சு, மாமி! இன்றைக்கு நடக்க வேண்டியதைப் பார்க்கலாம். உங்கள்

பிள்ளை போகிற வழியாகக் காண வில்லையே ?''

''எல்லோரும் இன்றைக்குப் புதிதாக வந்தவர்களைப் பற்றி இவ்வளவு கரிசனம் காட்டுகிறீர்களே தவிர வீட்டு மனுஷனை யார் கவனிக்கிறீர்கள்? எனக்குக் கூடத்தான் பசியாயிருக்கிறது. யாராவது என்னை 'டிபன் சாப்பிடு' என்று சொல்கிறீர்களா? இந்த உலகமே இப்படித்தான்! மகா மோசம்!'' என்று சொல்லிக் கொண்டு சூரியா வெளியேறினான்.

* * *

சீமாச்சுவய்யரின் வீட்டுக்குச் சூரியா போய்ச் சேர்ந்தபோது மதராஸிலிருந்து வந்தவர்கள் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தார்கள். மாப்பிள்ளைப் பையன், அவனுடைய தகப்பனார், தாயார், சுப்பய்யர் ஆக நாலு பேர் வந்திருந்தார்கள் என்பதைச் சூரியா கவனித்துக் கொண்டான். அவர்களோடு உட்கார்ந்து சுண்டுவும் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சீமாச்சுவய்யர் அவர்களையெல்லாம் உபசரிப்பதில் ஈடுபட்டிருந்தார்.

சூரியா தாழ்வாரத்தின் தூணைப் பிடித்துக் கொண்டு மௌனமாய் நின்றான். அவனைக் கவனித்த மாஜி ஸப் ஜட்ஜ் சாஸ்திரியார், ''இந்தப் பிள்ளை யார்?'' என்று கேட்டார்.

''இவன்தான் பெண்ணின் தமையன் சூரியநாராயணன்; எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிறான்!'' என்றார் சீமாச்சுவய்யர்.

சௌந்தரராகவன் எம். ஏ. தலை நிமிர்ந்து பார்த்துவிட்டு, ''எஸ்.எஸ்.எல். சி. தாராளமாய்ப் படிக்கட்டும்; அதற்காக ஏன் இவ்வளவு கோபமாயிருக்க வேண்டும்!'' என்றான்.

சௌந்தரராகவன் ஹாஸ்யமாகச் சொன்னதைச் சூரியா ரஸிக்கவில்லை. ''எனக்கு என்ன கோபம்? நீங்கள்தான் வருகிறபோதே கோபமாய் வந்திருப்பது போலத் தோன்றுகிறது. அதனால்தான் பரிமாற வருகிறதையெல்லாம் 'வேண்டாம், வேண்டாம்' என்கிறீர்கள். கல்யாணம் ஆன பிற்பாடல்லவா கோப தாபமெல்லாம் வைத்துக் கொள்ள வேண்டும்? இப்போது எதற்கு?'' என்றான் சூரியா.

''பலே அப்பா, பலே!'' என்றார் ஸ்ரீ பத்மலோசன சாஸ்திரியார். ''காமாட்சி! பார்த்தாயல்லவா பையனுடைய பேச்சை! இந்தக் காவேரித் தண்ணீரில் ஏதோ மகிமை இருக்கிறது என்று நான் சொன்னது இப்போதாவது உண்மையென்று உனக்குப் படுகிறதா?'' என்று கேட்டார்.

''இந்தக் காலத்திலேயே பிள்ளைக் குழந்தைகள் எல்லாரும் சமர்த்தாகத்தான் இருக்கிறார்கள்!'' என்றாள் காமாட்சி அம்மாள்.

''பெண் குழந்தைகள்மட்டும் இலேசா இருக்கிறார்களா, என்ன? இவன் தங்கையோடு நீங்கள் பேச்சுக் கொடுத்துப் பார்த்தால் தெரியும்! என்ன ஓய்! சுப்பய்யரே! நான் சொல்றது என்ன?'' என்று சீமாச்சுவய்யர் இன்ஷூரன்ஸ் சுப்பய்யரைச் சாட்சிக் கூண்டுக்கு அழைத்தார்.

''எல்லாம் இன்னும் கால்மணியில் தெரிந்துவிடுகிறது!'' என்று பட்டுக் கொள்ளாமல் சொன்னார் சுப்பய்யர்.

* * *

லலிதாவின் அலங்காரம் ஒருவிதமாக முடிவடைந்தது.

''சீதா! இனி மேலாவது நீ போய் முகத்தை அலம்பிப் போட்டு வைத்துக் கொள்ளேன்!'' என்றாள் லலிதா.

''எனக்கென்னடி இப்போது வந்திருக்கிறது! இதோ பார்! காதண்டை இந்தச் சுருட்டை மயிர் இப்படித் தொங்கினால் நன்றாயிருக்கும்!'' என்று சீதா மறுபடியும் லலிதாவின் முகத்தை அழகுபடுத்தத் தொடங்கினாள்.

"எல்லாம் இவ்வளவு போதும்! நீ போகிறாயா? மாட்டாயா? நீ மட்டும் முகம் அலம்பிப் பொட்டு வைத்துக் கொண்டு நல்ல புடவையும் கட்டிக் கொள்ளா விட்டால் நான் காமரா உள்ளுக்குப் போய்க் கதவை இழுத்துத் தான் போட்டுக் கொண்டு விடுவேன். யார் கதவை இடித்தாலும் திறக்கமாட்டேன். பெண் பார்க்க வந்தவர்கள் பார்க்காமலே திரும்பிப் போக வேண்டியதுதான்!''

"சீதா! அவள் சொல்லுகிறதைத் தான் கேளேன்! இவ்வளவு பிடிவாதம் எதற்கு? நீயும் தோழிப் பெண்ணாகப் பக்கத்தில் நிற்க வேண்டுமென்று லலிதா ஆசைப்படுகிறாள் போலிருக்கிறது. முகத்தில் எண்ணெய் வழியக் கந்தலைக் கட்டிக் கொண்டு நின்றால் சரியாயிருக்குமா?'' என்றாள் சீதாவின் பெரியம்மா.

"ஆமாம், சீதா! உன் பெரியம்மா சொல்லுகிறதைக் கேள்!'' என்றாள் சரஸ்வதி அம்மாள்.

"சரி! இப்படி எல்லோரும் சேர்ந்து சொன்னால் நான் என்ன செய்கிறது?'' என்று சொல்லிக் கொண்டு சீதா தன்னுடைய அலங்காரத்தைக் கவனிக்கத் தொடங்கினாள்.

இந்தச் சமயத்தில் சரஸ்வதி அம்மாளின் தாயார் அவளைக் கூப்பிட்டுக் கொல்லைக்கட்டுக்குத் தனியாக அழைத்துக் கொண்டு போனாள். ஏதோ ரகசியமாகச் சொன்னாள். அதற்குச் சரஸ்வதி அம்மாள், "உனக்கு அலாதியாக ஏதேனும் தோன்றும்! பேசாமல் இரு! கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டுபோய்விடாது!'' என்று பதில் சொன்னது எல்லாருடைய காதிலும் ஸ்பஷ்டமாக விழுந்தது.

* * *

சீதா தன் புடவையை மாற்றிக் கொண்டு முகம் கழுவிப் பொட்டு வைத்துக் கொண்டு வந்தாளோ, இல்லையோ, சரஸ்வதி அம்மாள் அவளைப் பார்த்து, "சீதா! சீதா! உன் மாமா வாசலிலேயே நிற்கிறார் பார்! அவரைக் கொஞ்சம் உள்ளே கூப்பிடு! அவர்கள் வருகிற போது குழந்தை என்ன செய்ய வேண்டும் என்று ஒன்றும் சொல்லாமல் இவர் பாட்டுக்கு வாசலிலேயே நின்று கொண்டிருக்கிறாரே!'' என்றாள்.

அப்போது அபயாம்பாள், "அவன் சொல்லுகிறது என்ன? நமக்குத் தெரியாதா? அவர்கள் வந்து உட்கார்ந்ததும் குழந்தை கையில் வெற்றிலைப் பாக்குத் தட்டோடு வரவேண்டியது. தட்டை வைத்துவிட்டு எல்லோருக்கும் சேர்ந்து ஒரு நமஸ்காரம் செய்ய வேண்டியது. பிறகு கூடத்துக்கு வந்து நிற்க வேண்டியது. யாராவது ஏதாவது கேட்டால் கணீரென்று பதில் சொல்ல வேண்டியது!'' என்று சொன்னாள்.

"எல்லாவற்றுக்கும் நீ மாமாவைக் கொஞ்சம் கூப்பிடு, சீதா!'' என்றாள் சரஸ்வதி அம்மாள்.

சீதா வாசற் பக்கம் சென்று பார்த்தாள். மாமாவும் இன்னும் ஊரார் சிலரும் தெருவில் போட்டிருந்த கோடைப் பந்தலில் நின்று கொண்டிருந்தார்கள். மோட்டார் புறப்பட்டு வந்து கொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில் மாமாவைக் கூப்பிடலாமா, கூடாதா என்று யோசித்துக் கொண்டு சீதா வாசற்படியருகில் சிறிது தயங்கி நின்றாள். இதற்குள் மோட்டார் வண்டி வந்து வீட்டு வாசலில் நின்றது. லலிதாவைப் பார்க்க வருகிற மாப்பிள்ளை எப்படியிருப்பான் என்று தெரிந்து கொள்ளச் சீதாவின் மனத்தில் எழுந்த ஆவல் அவளை அங்கே நிற்கும்படி செய்தது.

மோட்டாரிலிருந்து முதலில் ஒரு பெரியவர் இறங்கினார். அடுத்தாற்போல் ஒரு யௌவன புருஷன் இறங்கினான். அவன்தான் மாப்பிள்ளையாயிருக்கவேண்டும். அடடா! எவ்வளவு



களையாயிருக்கிறான்! லலிதா அதிர்ஷ்டசாலிதான்; சந்தேகமில்லை.

சீதாவின் நெஞ்சு விம்மித் தொண்டையை வந்து அடைத்துக் கொண்டது. கண்களில் கண்ணீர் வரும் போலிருந்தது. தலை சுழன்றது. சட்டென்று சமாளித்துக் கொண்டாள். சமாளித்துக் கொண்டு பார்த்த போது அந்த யௌவன புருஷன் தன்னை நோக்குவதைக் கண்டாள். ''என்னைக் கல்யாணப்பெண்என்று நினைத்துக்கொள்ளப் போகிறாரே!'' என்ற எண்ணம் உண்டானதும் வெட்கம் பிடுங்கித்தின்றது. இரண்டே பாய்ச்சலில் உள்ளேஓடிவந்து, ''அவர்கள் வந்தாச்சு!'' என்றாள் சீதா. பிறகு லலிதாவின் அருகில் சென்று அவளைக் கட்டிக் கொண்டு காதோடு, ''அடியே! உனக்கு வந்திருக்கும் அகமுடையானைப் பார்த்து விட்டேன், ரொம்ப அழகாயிருக்கிறார். மாமா சொன்னபடி மன்மதன்தான்!'' என்றாள்.

''சீ! போடி!'' என்றாள் லலிதா.

25. கண்கள் பேசின!

வீட்டு ரேழியில் திடுதிடுவென்று மனிதர்கள் வரும் சத்தம் கேட்கவே பெண்கள் எல்லோரும் காமரா உள்ளுக்கும் சமையல் உள்ளுக்கும் விரைந்து போய் மறைந்து கொண்டார்கள்.

சற்றுப் பொறுத்துச் சரஸ்வதி அம்மாள் மட்டும் வெளியே வந்து, சம்பந்தி அம்மாளாகப் போகிற காமாட்சி அம்மாளை நெருங்கி, ''வாருங்கள்!'' என்று அழைத்தாள்.

தயாராகப் போட்டிருந்த நாற்காலிகளில் வந்த புருஷர்கள் எல்லோரும் உட்கார்ந்தார்கள். சற்று நேரம் வரை மௌனம் குடிகொண்டிருந்தது.

''என்ன ஓய்! குழந்தையை வரச் சொல்கிறதுதானே!'' என்றார் சீமாச்சுவய்யர்.

''நீர்தான் சொல்லுமே ஓய்!'' என்றார் கிட்டாவய்யர்.

சீமாச்சுவய்யர் சடசடவென்று காமரா அறைப் பக்கம் சென்று, ''குழந்தையை வரச்சொல்லுங்கள். வெற்றிலைப் பாக்குத் தட்டை எடுத்துக் கொண்டு வரச் சொல்லுங்கள்! ஐந்தரை மணி முதல் ஆறு மணி வரையில் நல்லவேளை. மணி ஐந்தே முக்கால் ஆகிவிட்டது. சீக்கிரம் வரட்டும்'' என்று இரைந்தார்.

காமரா உள்ளில் ஏதோ வாதப் பிரதிவாதம் நடந்ததாகத் தோன்றியது. சீமாச்சுவய்யர் மறுபடியும், ''அதனால் என்ன? சீதாவும் வரட்டுமே! நீங்களும் வாருங்களேன்! எல்லாரும் வரவேண்டியதுதான். மாப்பிள்ளையும் பெண்ணும் இன்றைக்கே இரகசியம் பேசப் போகிறார்களா? அதற்கெல்லாம் பிற்பாடு நான் இருக்கிறது!'' என்றார்.

இதன் பேரில் லலிதாவும் சீதாவும் அறையிலிருந்து வெளிப்பட்டார்கள். லலிதா கையில் வெற்றிலைத் தட்டுடன் குனிந்த தலை நிமிராமல் நடந்தாள். சீதா அவளுடைய ஒரு கையைத் தன்னுடைய கையில் கோத்துக் கொண்டு ஓரளவு அவளைத் தள்ளிக் கொண்டு வந்ததாகத் தோன்றியது.

சீதா தலையைக் குனிந்து கொண்டு நடக்கவில்லை. வந்திருந்தவர்களைத் தைரியமாக ஏறெடுத்துப் பார்த்துக் கொண்டு வந்தாள். அந்தக் கண்ணோட்டத்தில் மாப்பிள்ளையின் முகத்தையும் பார்த்தாள். தான் எதிர்பார்த்தது போல் அவன் லலிதாவைப் பார்க்காமல் தன்னைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தது அவளுக்கு ரோமாஞ்சனத்தை உண்டாக்கியது.

கனவிலே நடப்பது போல் நடந்து வந்த லலிதா, வந்திருந்தவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தை அடைந்ததும் அவர்கள் எதிரில் இருந்த முக்காலிப் பலகையில் வெற்றிலைத் தட்டை வைத்தாள். பிறகு நமஸ்காரம் செய்தாள்.

லலிதா நமஸ்கரித்தபோது மறுபடியும் மாப்பிள்ளை என்ன செய்கிறான் என்று சீதா பார்த்

தான். மாப்பிள்ளை லலிதாவைப் பார்ப்பதற்குப் பதிலாகத் தன்னைப் பார்ப்பதைக் கண்டாள். வெறுமனே பார்த்ததோடு இல்லை; புன்னகையும் புரிந்தான்! வானத்திலிருந்து நட்சத்திரங்கள் பொலபொலவென்று உதிர்ந்து உலகை ஜோதி மயமாக்கின! — சீதாவின் இதயமாகிய உலகத்தைத்தான்!

லலிதா நமஸ்கரித்துவிட்டு எழுந்தபோது அவளுக்கு மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்ற அடங்காத ஆசை உண்டாயிற்று. மடங்கி யிருந்த கண்ணிமைகளைச் சிரமப்பட்டுத் தூக்கிக் கொண்டு பார்த்தாள். அவளுடைய பார்வையில் பத்மலோசன சாஸ்திரி தட்டுப்பட்டார். ''ஐயோ! இவரா!'' என்ற பீதி ஒரு கணம் உண்டாயிற்று. ''சீ! இவராயிராது; இவர் மாப்பிள்ளையின் தகப்பனார் போலிருக்கிறது'' எனத் தெளிந்து பக்கத்தில் பார்வையைச் செலுத்தினாள். இந்தத் தடவை அவள் பார்த்தது சௌந்தரராகவனைத்தான். ஆனால் சௌந்தர ராகவன் அச்சமயம் இதழ்களில் புன்னகையுடன் வேறு எங்கேயோ அவளுடைய தோளுக்கு மேலாகப் பார்த்துக் கொண்டிருந்தான். லலிதா மறுபடியும் முன்போல் தலையைக் குனிந்து கொண்டாள்.

''எந்தக் குழந்தையை இப்போது பார்ப்பதற்காக வந்திருக்கிறோம்? தலையிலே சடை வில்லையும் திருகுப் பூவும் வைத்து பின்னிக் கொண்டிருக்கிறாளே, அந்தக் குழந்தைதானே?'' என்று பத்மலோசன சாஸ்திரி தமது கம்மலான கன சாரீரத்தில் கேட்டார். அது யம தர்ம ராஜனின் குரலைப் போல் லலிதாவின் காதில் விழுந்தது. அவள் பார்த்திருந்த சத்தியவான் — சாவித்திரி நாடகத்தில் யமதர்ம ராஜன் அத்தகைய குரலில்தான் பேசினான்!

சாஸ்திரியின் சம்சாரம் காமாட்சி அம்மாள், ''அழகாய்த்தான் இருக்கிறது உங்கள் கேள்வி! பார்த்தால் எந்தப்பெண் என்று தெரியவில்லையா? நமஸ்காரம் செய்ததிலிருந்துகூடத் தெரியாமலா போச்சு!'' என்றாள்.

''இல்லேடி! தெரியத்தான் தெரிகிறது! இருந்தாலும் சந்தேகத்துக்கு இடமிருக்கக் கூடாதே என்று கேட்டேன். இருக்கட்டும்; பெண்ணுக்கு எழுத்துப் படிக்கத் தெரியுமோ? எதுவரை படித்திருக்கிறாள்?''

''நன்றாய்க் கேட்டேளே ஒரு கேள்வி? எழுதப் படிக்கத் தெரியுமாவா? அப்பாவின் பட்டாமணியம் வேலையில் பாதி அவள்தானே பார்க்கிறாள்? அவள் படிக்காத கதைப் புத்தகம், நாவல் பாக்கி இல்லை. இங்கிலீஷ் சக்கைப் போடாகப் பேசுவாள். நாளைக்கு மாப்பிள்ளை பேசிப் பார்த்தால் தெரிந்து போய்விடுகிறது!'' என்றார் சீமாச்சுவய்யர்.

. இதைக் கேட்ட சாக்ஷாத் மாப்பிள்ளை சௌந்தரராகவன், ''நாளைக்கு என்று ஏன் ஒத்தி வைக்கவேண்டும்? இன்றைக்கே பேசிப் பார்த்து விட்டால் போகிறது!'' என்றான்.

''அப்படிப் போடுங்க ஒரு போடு, மாப்பிள்ளை! ஆனாலும் நாங்கள் எல்லாரும் பட்டிக்காட்டு மனுஷாள் தானே? அவ்வளவு நாகரிகம் இன்னும் இங்கேயெல்லாம் பரவவில்லை. கல்யாணம் ஆகிப் பெண்ணை அழைத்துக் கொண்டு போனால் பத்து நாட்களில் எல்லா நாகரிகமும் பழகிக்கொள்கிறாள். என்ன ஓய் கிட்டாவய்யரே! நான் சொல்கிறது என்ன?''

அப்போது சப் ஜட்ஜ் சாஸ்திரி ''கிட்டாவய்யரைக் கேட்பானேன்? நானே சொல்கிறேன். எனக்கும் இந்தக் காலத்து நாகரிகம் அவ்வளவாகப் பிடிக்காது. என் சம்சாரம் என்னை விடக் கர்நாடகம், மாட்டுப் பெண் இங்கிலீஷ் படித்துப் பாஸ் பண்ணி உத்தியோகம் பார்க்கவேண்டும் என்று நாங்கள் ஆசைப்படவில்லை. இருந்

தாலும் பிள்ளையாண்டான் இந்தக் காலத்துப் பையன் பாருங்கோ! படித்த பெண்ணாயிருக்க வேண்டுமென்று ஆசைப்படுவது இயல்புதானே! போகட்டும். குழந்தைக்குப் பாடத் தெரியுமா? சிட்சை கிட்சை உண்டா?'' என்றார்.

''என்ன ஓய், கிட்டாவய்யரே! பதில் சொல்லுமே, ஓய்! எல்லாவற்றுக்கும் நான்தானா பதில் சொல்ல வேண்டும்?'' என்றார் சீமாச்சு.

கிட்டாவய்யர் உடனே, ''குழந்தைக்குச் சங்கீத சிட்சையில்லை. கிராமாந்தரத்தில் அதற்கு வசதி கிடையாது. ஆனால் நன்றாகப் பாடுவாள். நானே சொல்லிக் கொடுத்திருக்கிறேன். எனக்குக் கொஞ்சம் சங்கீத ஞானம் உண்டு!'' என்றார்.

''ஓகோகோ! அப்படி வாருங்காணும் வெளியிலே! நீரே பாட்டுச் சொல்லிக் கொடுத்திருக்கிறீரா? தீக்ஷிதர் கிருதி ஏதாவது தெரியுமா?''

''பேஷாகத் தெரியும்!.... லலிதா! 'மாமவ பட்டாபிராமா' பாடு!'' என்றார் கிட்டாவய்யர்.

இத்தனை நேரமும் லலிதா தலை குனிந்தபடியே இருந்தாள். இப்போது அப்பாவின் குரல் வந்த திசையை நோக்கி இரக்கம் ததும்பிய முகத்துடன் பார்த்துவிட்டு மறுபடியும் தலையைக் குனிந்து கொண்டாள்.

''தீக்ஷிதர் கிருதி தெரியாவிட்டால் வேண்டாம். சியாமா சாஸ்திரி கிருதி தெரிந்தால் பாடட்டும்.''

''ஆகா! சியாமா சாஸ்திரி கிருதியும் குழந்தைக்குத் தெரியும். 'ஸரோஜ தளநேத்ரி' பாடு, அம்மா!''

லலிதா அதற்கும் மௌனமாகவே இருந்தாள்.

''இல்லை, பட்டணம் சுப்பிரமணிய அய்யர் கீர்த்தனம், தியாகராஜ கீர்த்தனம் எது தெரிந்தாலும் பாடட்டும்.''

''அதுதானா சரி! தீக்ஷிதர் கிருதி என்றால் அது சேலம் ஜில்லா தாம்பக் கயிறு மாதிரி நீண்டு கொண்டே இருக்கும். உனக்குச் 'சங்கல்பமே மதோ மனஸா' தெரியுமோ, அதைப் பாடு! இல்லாவிட்டால் 'மருகேலரா' கீர்த்தனம் பாடு!'' என்றார் சீமாச்சுவய்யர்.

''இல்லாவிட்டால் தியாகராஜ கிருதியில் பல்லவியும் தீக்ஷிதர் கிருதியில் அநுபல்லவியும் சியாமா சாஸ்திரி கிருதியில் சரணமும் பாடட்டுமே!'' என்றான் சௌந்தரராகவன்.

புருஷர்கள் கோஷ்டியில் சிறு சிரிப்பின் சத்தம் உண்டாயிற்று. ஸ்திரீகளிடையே கசமுச என்ற பேச்சின் ஓசை ஏற்பட்டது. சூரியாவின் கண்ணில் தீப்பொறி பறந்தது.

ஒன்றுக்கும் லலிதா மசிகிற வழியாக இல்லை. சீதா இரகசியம் பேசுகிற குரலில், ''ஏண்டி, இப்படிப் பேசாமல் இருக்கிறாய்! ஒரு பாட்டுப் பாடடி!'' என்று தூண்டினாள்.

அப்படித் தூண்டியும் பயனில்லாமற் போகவே மாப்பிள்ளைப் பையனைப் பார்த்தாள். அவனும் அதே சமயத்தில் அவளைப் பார்த்தான். அவர்களுடைய மனத்தில் இருந்ததை பரஸ்பரம் அவர்களுடைய கண்களின் பேச்சினால் தெரிந்து கொண்டார்கள். ''இந்தப் பட்டிக்காட்டுச் சங்கோசப் பிராணியைக் கல்யாணம் செய்து கொண்டு நான் என்னத்தைச் செய்வது?'' என்று சௌந்தரராகவனின் கண்கள் கூறின. பதிலுக்கு, ''ஆமாம்; உங்களுடைய நிலைமை கஷ்ட

இ இன்முகம் காட்டல்



ள வளைந்து உழைத்தல்



ஞ ஞானம் பெறல்



ர் வீரராய் விளங்கல்



கல்கி ஏப்ரல் 16

இளைஞர் மலர்

● புதிய அம்சங்கள் ● இளைஞர் சமுதாயம் — வாலிப சங்கங்களுக்கு நேரில் விஜயம்செய்து அனைவராலி எழுதப்படும் கட்டுரைகள் ● தெரிந்த விளையாட்டு; தெரியாத விவரம் ● சிறப்புச் சிறுகதைகள் ● இன்றையப்பிரச்சினை — நிபுணர்களுடன் பேட்டி ● அன்பே அமிவா! — புதிய சித்திரத் தொடர்கதை ● வாரம் ஒரு நகைச்சுவைக் கதை ● இளைஞர்களை சர்க்கும் இதர பல விஷயங்கள்.

மானதுதான்! என்னுடைய மனப்பூர்வமான அநுதாபம்'' என்று சீதாவின் கண்கள் தெரியப்படுத்தின.

'' சீதா ! நீயும் லலிதாவோடு சேர்ந்து ஒரு பாட்டுப் பாடேன் ! குழந்தை தனியாகப் பாடக் கூச்சப்படுகிறாள்!'' என்றார் கப்பய்யர்.

'' ஆமாம்; சீதா! நீயும் சேர்ந்து பாடு!'' என்று சரஸ்வதி அம்மாள் பக்கத்தில் வந்து நின்று கூறினாள்.

சீதா பணிச்சென்று, '' எங்கள் இரண்டு பேருக்கும் தெரிந்த பாட்டு ஒன்றும் இல்லையே!'' என்றாள்.

'' அப்படியானால் நீயேதான் ஒன்று பாடேன். அவள் தைரியப்படுத்திக் கொண்டு அப்புறம் பாடட்டும்!'' என்றார் பத்மலோசன சாஸ்திரிகள்.

''யோசித்துப் பார்க்கிறேன். ஏன், லலிதா ! 'நகுமோமு கனலேனி' உனக்குத் தெரியுமல்லவா? இரண்டு பேரும் சேர்ந்து பாடுவோம்! என்ன! பேசாமலிருந்து விடாதே!'' என்று சொல்லிவிட்டுச் சீதா கணீரென்ற குரலில் பாட ஆரம்பித்தாள். லலிதா பல்லவியில் பாதியில் சேர்ந்து கொண்டாள். ஆனால் அவளுடைய 'குரல் எடுபடவில்லை. சீதாவின் குரல்தான் மேலோங்கி நின்றது. சீதா அனுபல்லவியை எடுத்து மேலே ஜம்மென்று போனபோது லலிதாவும் கூடப் பாட முயன்றாள். ஆனால் குரல் 'கிறீச்' என்று அபஸ்வரமாகக் கேட்டது. சட்டென்று நிறுத்திவிட்டுச் சீதாவின் கையை உதறி விடுவித்துக்கொண்டு விடுவிடு என்று காமரா உள்ளை நோக்கிச் சென்றாள் லலிதா.

எல்லாருக்கும் ஒரு மாதிரி ஆகிவிட்டது. கிட்டாவய்யர் கோபக் குரலில், ''இது என்ன லலிதா-?'' என்று அதட்டினார்.

சரஸ்வதி அம்மாள் லலிதாவின் கையைப் பிடித்து நிறுத்தி, ''அசட்டுப் பெண்ணே ! தினம் கச்சேரி செய்வது போல் மூன்று மணி நேரம் பாடுவாயே? இன்றைக்கு என்ன வந்தது ?'' என்றாள்.

லலிதா தாயாரின் கைகளையும் உதறி விட்டு உள்ளே சென்றாள்.


சீதா, பாவம், ஒரு நிமிஷம் இன்னது செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டு நின்றாள். பிறகு மாப்பிள்ளைப் பையனை ஒருதடவை கண்ணைச் சுழற்றிப் பார்த்துவிட்டுத் தானும் உள்ளே போய் விட்டாள்.

எழுந்திருந்த கிட்டாவய்யரைப் பத்மலோசன சாஸ்திரிகள் உட்காரச் செய்தார். ''பரவாயில்லை; குழந்தையைத் தொந்தரவுபடுத்த வேண்டாம். குரல் கேட்டு விட்டது. வெகு இனிமையாயிருக்கிறது. போதும். இன்னொரு நாள் சாவகாசமாகக் கேட்டுக் கொள்ளலாம்!'' என்றார்.

'' பெண் ஊமையில்லை என்று தெரிந்துவிட்டது அல்லவா? அதுவே போதுமானது!'' என்று 'கிருதக்'காகச் சொன்னான் சௌந்தர ராகவன்.

'' அப்படியெல்லாம் சொல்லாதே, அப்பா!'' என்று காமாட்சி அம்மாள் கண்டித்துவிட்டு எழுந்து உள்ளே போனாள். பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் தனித் தனியே சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு சம்பந்திகள் தங்கள் ஜாகைக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். (தொடரும்)

திருடனுக்குத் தேள்!



நீரல்லவோ ரஸிகர்!



பழைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மகாராஜாவின் முன்னிலையில் வித்துவான் மாராரின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்தது. தர்பாரைச் சேர்ந்த பிரமுகர்கள் பலரும், மன்னர் 'ஆகா!' 'பலே!' என்றெல்லாம் ரசித்துப் பாராட்டும்போதெல்லாம் தாங்களும் அவ்வண்ணமே உரத்த குரலில் கூறிப் பாராட்டிக் கொண்டிருந்தனர். கச்சேரி செய்பவருக்கு இது ஓரளவு இடையூறாக இருந்ததை மன்னர் கவனித்தார். தமது பிரீதியைச் சம்பாதித்துக் கொள்ளும் பொருட்டே தாம் ரசித்துப் பாராட்டும் கட்டங்களில் அவைப் பிரமுகர்களும் பாராட்டுக் குரல் எழுப்பி வந்தது மன்னருக்குப் பிடிக்கவில்லை. மகாராஜா அவைப் பிரமுகர்களை நோக்கி, ''யாராவது இனிமேல் பாராட்டுக் குரல் எழுப்பினால் தலையை வாங்கிவிடும்படி உத்தரவு போட்டுவிடுவேன்!'' என்று கட்டளையிட்டார். அவையில் நிசப்தம் குடிகொண்டது. கச்சேரி தொடர்ந்தது. ரசிகப் பெருமக்களின் இடையூறின்றித் தோடி ராகத்தைப் பிரமாதமாக ஆலாபனை செய்து கொண்டிருந்தார் மாரார். மெய்சிலிர்க்கும் படியான ஒரு கட்டத்தில் ரசிகர்களுள் ஒருவர் தம்மையும் மறந்து, ''என் தலையே போனாலும் சரி! சபாஷ்! பிரமாதம்! பிரும்மானந்தம்! ஆஹா!'' என்று வாய்விட்டுப் பாராட்டினார்.

மன்னர் அந்த ரசிகரை நோக்கி, ''நீரல்லவோ உண்மையான ரசிகர்! மற்றவர்களெல்லாம் எனக்காக ரசிக்கிறார்கள்! உமக்கு எந்த ஊர்?'' என்று பரிவோடு விசாரித்தார்.

ரசிகர் எழுந்து நின்று, ''மகாராஜா! அடியேன் திருவையாற்றிலிருந்து வருகிறேன்!'' என்று பதிலளித்தார், பணிவுடன்.

''ஆச்சரியமில்லை: அந்த க்ஷேத்திரத்திலிருந்து வரும் நீங்கள் 'தலை போனாலும் பரவாயில்லை; பாராட்டியே தீருவேன்!' என்று உளமாரப் பாராட்டியதில் வியப்பில்லை!'' என்று ரசிகரைப் பாராட்டினார் மன்னர். (ஸ்ரீவத்ஸ ஜயராம சர்மாவின் உபந்நியாசத்தில் கேட்டவர்: 'பாணன்')



''நான் பொதுக் கூட்டத்தில் பேசும்போது எல்லோரும் ''ஏன் வரியை உயர்த்தினீர்கள்? ஏன் வரியை உயர்த்தினீர்கள் என்று ஏகமாகக் கேள்விகள் கேட்டுக் குடைந்தெடுத்தார்கள். அவை எல்லாவற்றுக்கும் இன்றைக்கு முடிவு கட்டிவிட்டேன்.''

''என்ன செய்தீர்கள்?''

''கட்சி மாறி விட்டேன்!''

- கோட்டா மோகன்!

அ(ன)ர்த்தம்!

சொற்களுக்கு உரிய பொருளைத் தெரிந்துகொள்ளாது அவற்றைக் கையாள்வது, விபரீதமாக முடியும் என்று ஓர் உரையாடலின் போது குறிப்பிட்டார் திரு கி. வா. ஜ.:

''சான்றாக, 'நீங்கள் வந்தது குறித்து இறும்பூதெய்தினேன்' என்று எழுதுகிறார்கள் -- 'மகிழ்ச்சி அடைகிறேன்' என்ற பொருளில். 'இறும்பூதெய்தினேன்' என்றால் 'ஆச்சரியம் அடைந்தேன்' என்று பொருள்!''

-- ரா. பா.





'பிளிமத்'தைச் சேர்ந்த மிஸ் டொரோதி பெர்கின்ஸ் என்ற ஆங்கில மாது 1935ம் ஆண்டிலிருந்து அந்நகரின் அழகு ராணியாக நீடிக்கிறாள். காரணம் அதற்குப் பின் இன்றுவரை இன்னொரு 'அழகுப் போட்டி' அந்நகரில் நடக்கவே இல்லை! - தேஜ்

காணும் இடமெங்கும் கலைமய மாக்கிய
 கலைஞன் யார் சொல்வாய் - தோழி! - காணும்
வான வில்லிலே ஏழு வர்ணமே
 வரைந்த ஓவியன் யார் சொல்வாய்?
கான மூங்கிலின் துளைகளிலே இனிய
 கானம் எழுவதும் ஏன் சொல்வாய்?
தூக்கணாங் குருவிகள் கூடுகட்டும் கலையைச்
 சொல்லிக் கொடுத்தவன் யார் சொல்வாய்?
ஆர்க்கும் அருவியின் ஓசையில் சுதியை
 அமைத்த கலைஞன் யார் சொல்வாய்?

எல்லாம் கலைமயம் ஆக்கிய கலைஞன்
இறைவன் ஒருவன் என்கின்றோம்;
தில்லைக் கூத்தன் சிலையின் தத்துவச்
சிறப்பை எண்ணிப் புகழுகின்றோம்.

- கவிஞர் புத்தநேரி சுப்பிரமணியம்

வணக்கம் சௌக்கியமா?

இவ்வாரம் உரையாடலில் கலந்து கொள்வோர்:

ஸ்ரீமதி ராதா குப்புசாமி
ஸ்ரீமதி ஆண்டாள் கோவிந்தராஜுலு

(நுங்கம்பாக்கம் மேம்பாலத்துக்கு அருகே இருக்கும் ரயில்வே குவார்ட்டர்ஸ். ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலே. தென்பிராந்திய ரயில்வேயில் எஞ்சின் டிரைவராக இருக்கும் திரு சி. குப்புசாமியின் இல்லத்துக்கு லாரி டிரைவர் எம். கோவிந்தராஜுலு நாயுடுவும் அவர் மனைவியும் வந்து சேர்ந்தார்கள்.)

ஸ்ரீமதி ஆண்டாள் கோவிந்தராஜு: ஓயாமல் ஊர் சுற்றுபவர்களைப் பார்த்து, 'காலில் சக்கரம் இருக்கு. அதான் ஒரே இடத்தில் கால் தங்க வில்லே' என்பார்கள் பெரியவர்கள். எங்க வீட்டுக்காரர் காலில் சக்கரரேகை இருக்க வில்லே. ஆனாலும் காலடியில் சக்கரங்கள் உருண்டுக் கிட்டிருக்கு!...

குப்புசாமி





கோவிந்தராஜுலு

ஸ்ரீமதி ராதா குப்புசாமி: அதே சங்கதிதான் எனக்கும்! உங்க வீட்டுக்காரர் காலடியில் உருளுகிற சக்கரங்களாவது காற்றடித்த ரப்பர் டயரால் ஆனது. எங்க வீட்டுக்காரர் காலடியில் இரும்புச் சக்கரங்களே ஓயாமல் உருண்டுக்கிட்டிருக்கு!

லாரி டிரைவரா எத்தனை வருஷமா இருக்கார் உங்க வீட்டுக்காரர்?

ஆண்டாள்: முப்பது வருஷங்களாச்சு. ஆனால் கார், லாரிகளுடன் சிறுவராயிருந்த போதிலிருந்தே தொடர்பு ஆரம்பிச்சுடுத்து. அஞ்சு கிளாஸ் தான் படிச்சாராம். மேலே படிக்க வசதி இல்லாமல் கிளீனரானர். இப்ப மாதிரி முப்பது வருஷங்களுக்கு முந்திக் கார்கள் பெருகல்லே. இத்தனை ஒர்க்ஷாப்களும் முளைக்கல்லே. யாராச்சும் கார் கிளீன் பண்ணக் கூப்பிடுவாங்க. போய்த் துடைப்பாராம். இரண்டணு கூலி கிடைக்குமாம்!

ராதா: சரிதான். என் வீட்டுக்காரரும் இருபத்தேழு வருஷங்களுக்கு முன்னுல் ரயில்வேயில் சேர்ந்தார்.

எங்க மாமனர் பிட்டர் ஆக இருந்ததால் இந்த வேலேக்கு வர முடிஞ்சுது. எடுத்த எடுப்பில் இவரும் கிளீனராகத்தான் சேர்ந்தார்.

நீங்க சொல்லுங்க மேலே.

ஆண்டாள்: செகரடேரியட்டிலே பியூன் வேலே கொஞ்ச நாட்கள் பார்த்துவிட்டு, கார் ஓட்டக் கற்றுக் கொண்டார். வீட்டில் ஒருவருக்கும் தெரியாமல் கார் ஓட்டக் கற்றுக் கொண்டு, பிறகு லேசென்ஸும் வாங்கிவிட்டாராம்.

பதினைஞ்சு வருஷங்கள் கார்டிரைவர் வேலே.

சென்னை மந்திரியாக இருந்த ரோச் விக்டோரியாவுக்கு டிரைவராக இருந்திருக்கிறார். என். சஞ்சீவி ரெட்டிக்கும் டாக்டர் சுப்பராயனுக்கும்கூடச் சில மாதங்கள் டிரைவராக இருந்திருக்கிறார்.

அவங்ககிட்டே நல்ல சர்ட்டிபிகேட்டுகளும் வாங்கி யிருக்கார். இப்போ தனிப்பட்ட ஒரு கம்பெனியில் பதினைஞ்சு வருஷங்களாக லாரி ஓட்டி வருகிறார்.

ரயில் எஞ்சின் டிரைவராகப் பயிற்சி பெறுவது எப்படி?

ராதா: கிளீனராக இருந்த பிறகு பயர்மேன் ஆகணும். அப்புறம் சீனியர் பயர்மேன் ஆகணும். அதற்குப் பிறகு ஷண்டிங் டிரைவர், கூட்ஸ் டிரைவர், பாசஞ்சர் டிரைவர், எக்ஸ்பிரஸ், அல்லது மெயில் டிரைவர் - ஏ,பி,சி (ABC) கிரேட் இப்படி யெல்லாம் ரயில்வேயில் ரூல் வைச்சிருக்காங்க. வருஷா வருஷம் உடல் பரிசோதனையும் உண்டு.

ஆண்டாள்: ஆமாம், இப்பத்தான் எஞ்சினில் எலெக்ட்ரிக், டீஸல் எல்லாம் வந்துக்கிட்டிருக்கே. இப்பக்கூட டிரைவர் வேலேக்குப் பழங் காலம் மாதிரிதான் பழகணுமா?


ராதா: இப்ப எஸ். எஸ். எல். சி. படிச்சு, வைத்தியப் பரிசோதனையிலும் தேறிவிட்டால் பெங்களுரில் பயிற்சி கொடுக்கிறார்களாம்.

ஆண்டாள்: வேங்கடாசலபதியின் அருளால் ஒரு கோழிக் குஞ்சு மீதுகூட இவர் காரையோ, லாரியையோ இதுவரையில் மோதினதில்லே.

உங்கள் கணவர் எஞ்சின் டிரைவராக இருக்கும்போது ஏதேனும் ரயில் விபத்து...?

ராதா: 1955ல் நாங்கள் அரக்கோணத்தில் இருந்தோம்.

இரு இல்லத்தரசிகளின் சந்திப்பு



விஷமச் சிரிப்பு!

விஷமம் செய்வதில் நம் அனைவருக்குமே விருப்பம் உண்டு. ரொம்பச் சாமர்த்தியசாலிகளான விஷமிகளை வியந்து போற்றத் தோன்றும். இதோ சிலர்:

★ ஹோராஸ் எனும் பிரிட்டிஷ்காரர் ஒரு தெருவில் ஒருவனைக் கூப்பிட்டு, "தயவு செய்து இந்தக் கயிற்றின் முனையைக் கொஞ்சம் பிடித்துக் கொண்டு நில். நான் இந்த வீட்டின் மறுபக்கம் வரை சென்று இதன் நீளத்தை அளந்து கொண்டே வருகிறேன்" என்றார். மற்றவரும் உதவும்



நோக்கத்துடன் பிடித்துக் கொண்டார். ஹோராஸ் வீட்டின் மறு பக்கம் போய் மற்றொருவனைக் கூப்பிட்டு அதே மாதிரி சொல்லிக் கயிற்றின் மற்றொரு முனையைப் பிடித்துக் கொள்ளச் செய்தார். அவனும் பிடித்துக் கொண்டான். ஹோராஸ் இடைக் கதவு வழியாக நடையைக் கட்டினார். இருவரும் கயிற்றைப் பிடித்தபடி நிற்கப் போவதை நினைத்துச் சிரித்தவாறே!

★ சார்லஸ் போர்ட்டர் 'எனும் கோமகனாருக்கு இறந்த பின்னரும் தம்முடைய விஷமம் நிலைத்திருக்க வேண்டும் என்று ஆசை. தம்முடைய சொத்துக்களைத் தமது மூன்று மகன்களின் பெயருக்கும் எழுதி வைத்துவிட்டுக் கடைசியாக உயிலில், "என் அறையில் 'ரகசியம்' என்று எழுதப்பட்டிருக்கும் ஒரு பெட்டி இருக்கும். அதை வீட்டின் பின்புறம் எடுத்துச் சென்று சாம்பலாகும் வரை எரித்துவிடவும்" என்று எழுதியிருந்தார். மகன்களும் அவ்வாறே அப்பெட்டியை எடுத்துச் சென்று கொளுத்தினார்கள். அவ்வளவுதான்! 'பட் பட்' என்று பெட்டியிலிருந்து பட்டாசுகளும், பூவாணங்களும் சீறி எழுந்தன. தீ வைத்தவர்கள் அலறி அடித்து ஓடினர்!

★ ரோட் தீவில் தெரு ஓரமாக இருந்த ஒரு பெரிய பாறையின் மேல் "என்னைக் கவிழ்த்து விடுங்களேன், தயவுசெய்து" என்று எழுதியிருந்தது. சிலர் உயிரை விட்டுக் கொண்டு ஆவலுடன் அதைக்



கவிழ்த்துப் பார்த்தார்கள். அதன் மறுபுறம் இப்படி எழுதியிருந்தது: "மறுபடியும் என்னைப் பழைய மாதிரியே வைத்துவிடுங்கள். இன்னும் சிலரையும் நான் இப்படியே ஏமாற்றுவதற்கு உதவியாக இருக்கும்!"

- கே. வி. எம்.

ஆதாரம்: The Complete Practical Joker.

என் கணவர் பம்பாய் மெயிலில் அரக்கோணத்திலிருந்து குண்டக்கல்வரை டியூட்டி பார்த்து வந்த சமயம். மெட்ராஸ் நோக்கி வந்து கொண்டிருக்கும்போது இரவில் கொண்டாபுரம் ஸ்டேஷனில் ஒரு கூட்ஸ் வண்டி நின்றிருந்ததாம்.

மெயில் வண்டி வந்த பாதையில் எதிர்த் திசையில் கூட்ஸ் வண்டி நின்றதைக் கண்டு சமயோசிதமாக இரண்டு பர்லாங் தூரத்திலேயே நிறுத்தி விட்டார்.

விபத்தைத் தடுத்ததற்காக அதிகாரிகள் சிப் டிரைவருக்கு நூறும், என் வீட்டுக்காரருக்கும் இன்னொருவருக்கும் ஐம்பது ஐம்பது ரூபாயும் பரிசு கொடுத்தாங்க...

ஆண்டாள்: பரிசு சின்னதானால் என்ன? பெரிசானால் என்னங்க... பல உயிர்களைக் காப்பாற்றிய புண்ணியம் உண்டே! உயிர்களின் மதிப்புக்கு முன்னாலே பரிசுகளின் மதிப்பைக் கணக்குப் போட முடியுமா?

மழைக் காலம்தான் எனக்குப் பிடிக்காத காலம். லாரி ஓட்டிக் கொண்டு பத்திரமாகப் போய்ச் சேரணுமே, பத்திரமாய் வீடு திரும்பணுமேன்னு கவலைப்பட்டுக்கிட்டிருப்பேன்... தூக்கமே வராது. தெய்வத்தை வேண்டுவேன்.

உங்களுக்கும் இப்படித்தானா?

ராதா: மழை, புயல் அடிச்சால் கதி கலங்கும். எப்பேற்பட்ட மழையானாலும் ட்யூட்டிக்குப் போகணும்.

உங்கள் வீட்டுக்காரர் ஏதாவது மறக்க முடியாத செய்தி சொல்லியிருப்பாரே?

ஆண்டாள்: மூணும் வருஷம். கொடைக்கானலுக்கு லாரி ஓட்டிக் கொண்டு போயிருந்தப்போ ஒரு சம்பவம். சென்னை திரும்பும்போது பட்டப் பகலில், திண்டுக்கல் செல்லும் சாலையில் மாட்டு வண்டியும் ஒரு லாரியும் மோதிக் கொண்டு ஆறுபேர் குற்றுயிராகக் கிடந்தார்களாம். அதைப் பார்த்து விட்டு இவர் தம் லாரியை நிறுத்தி அவர்களையெல்லாம் லாரியில் ஏற்றிக் கொண்டு திண்டுக்கல் போலீஸ் ஸ்டேஷனில் சொல்லி அவர்கள் மூலம் ஆஸ்பத்திரியில் சேர்க்க வைத்து விட்டு வந்தாராம். இதுமாதிரி பல சம்பவங்கள்.

ராதா: இவருக்குக்கூட ஒரு துயர அனுபவம். பெங்களூரிலிருந்து ஜோலார்பேட்டைக்கு வந்து கொண்டிருக்கும்போது, ஒரு லாரி ரயில் கேட்டை மீறி உள்ளே வந்துவிடவே ரயில் மோதிவிட்டதாம். அந்த லாரி டிரைவருக்கு உடனே உதவி செய்ய ஓடினாங்களாம். ஆனால் ஆள் உயிர் பிழைக்கவில்லையாம்!

ஆண்டாள்: சர்க்கஸில் அந்தரத்தில் வித்தையாடறவனுக்குக் 'கரணம் தப்பினால் மரணம்' என்று சொல்லுவாங்க. கார், லாரி, எஞ்சின் டிரைவர்களுக்கெல்லாம் கவனம் தப்பக் கூடாது இல்லீங்களா?

ராதா: பழமொழியைக் கொஞ்சம் மாத்திச் சரியாச் சொன்னீங்க! ஆண்டவனிடம் நம்பிக்கை வெப்போம். அவன் நமக்கு ஒரு குறையும் வராமல் காப்பாத்துவான்.

(இரு பெண்மணிகளும் குடும்ப நிலவரம், குழந்தைகளின் படிப்பு, விலைவாசிகள் முதலிய விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டுப் பிரிந்தனர்.)

உரையாடல் தொகுப்பு: ஏ. சுவாமிநாதன்

7. நீ இருக்க அவன் எதற்கு?

"ஸைக்கோ ஸாரநாதன்"

கொடைக்கானல் ரோடு ஸ்டேஷனில் இறங்கியதும், பக்கத்துக் 'கூப்பே'யில் இருந்த ஜிப்பியின் பெயர் அமிர்தலிங்கம் என்பதை ரயில் பெட்டிக்கு வெளியே ஒட்டப்பட்டிருந்த ரிஸர்வேஷன் பட்டியல் தாளிலிருந்து தெரிந்துகொண்ட பத்மநாபன், பிளாட்ஃபாரத்தில் அவனைக் கண்டதும், ''என்ன மிஸ்டர் அமிர்தலிங்கம்!'' என்று ரொம்ப நாள் பழக்கப்பட்டவர் போல் அழைத்து, ''ரூமெல்லாம் ரிஸர்வ் பண்ணியிருக்கீங்களா?'' என்று கேட்டார்.

''இனிமேல்தான்; மலை ஏறிப் போன பிறகுதான் பார்க்கணும்'', என்றான் அவன். ''உங்க விஷயம் என்ன?''

''நான் பத்து நாளைக்கு முன்னாடியே லெட்டர் எழுதிப் போட்டுட்டேன். ஃபோனிலும் பேசிட்டேன். 'அட்வான்ஸ்' அனுப்புன்னு கழுத்தறுத்தான். 'ஏண்டா நம்பிக்கை யில்லையா'ன்னு கேட்டால் 'அதுதான் வழக்கம்' அப்படீன்னான். சரி, எப்படி இருந்தாலும் கொடுத்து அழப் போறோம்; அதில் ஒரு பங்கை முன்கூட்டியே செலுத்தறதிலே என்ன நஷ்டம்னு தந்தி மணி ஆர்டராகவே அனுப்பிட்டேன், இருநூறு ரூபாய்.''



''என்ன ஹோட்டல் அது? இத்தனை கெடுபிடியுடன்?'' என்றான் அமிர்தலிங்கம்.

''மதுரை, மெட்ராஸிலே யிருந்தெல்லாம் பெரிய மனுஷங்க வந்தா அங்கேதான் தங்கியாகணும். அதனால்தான் அவங்க ஜபர்தஸ்தும் அதிகமாயிருக்கு,'' என்றார் பத்மநாபன், தாம் ஒரு பெரிய மனிதன் என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொள்ளும் விதமாக. ''ஹாப்பி ஹாலிடேன்னு பேரு. உள்ளதிலே டீஸண்ட் ஹோட்டல் அதுதான்னு கேள்விப்பட்டேன். தனியாகப் போனா ஸெகண்ட் ரேட் ஹோட்டலானாலும் பரவாயில்லை. ஃபாமலியோடு

கி. ராஜேந்திரன்



போகறச்சே வசதியா இருக்கணும், பாருங்க.''

''சரி, நானும் அங்கேயே வந்துடறேன்'' என்றான் அமிர்தலிங்கம்.

பஸ்ஸில் போகும்போது தமக்குப் பக்கத்திலேயே அமர்ந்திருந்த அமிர்தலிங்கத்திடம், ''கொடைக்கானலில் எப்படிப் பொழுது போக்குவதாக உத்தேசம்?'' என்று கேட்டார் பத்மநாபன்.

''பொழுதுக்கென்ன, தானாகப் போய் விடுகிறது.''

''யூ ஆர் மிஸ்டேக்கன். இப்போ அப்படித்தான் தோணும். அங்கே போய்ப் பத்துப் பதினைந்து நாட்கள் இருக்கணும்னா ஒரு திட்டம் போட்டுக்கணும் இல்லேன்னா போர் அடிச்சுடும். இப்போ என்னையே எடுத்துக்குங்க. நம்ம ஆபீஸிலே அடுத்தாற்போல் ஒரு நாவல் எழுதச் சொல்லி என்னைக் கேட்டிருக்காங்க. அதுக்கான ஒரு பிளாட்டை இங்கே இருக்கச்சே உருவாக்கிவிடலாம் என்கிற எண்ணத்தோடேதான் வந்திருக்கிறேன்.''

''சரியாய்ப் போச்சு! அங்கே வந்தும் உச்சி மோட்டைப் பார்த்துண்டு உட்கார்ந்திருக்காதீங்கோ; நாலு இடங்களுக்குப் போகணும், வரணும்'' என்றாள் அம்புஜம்.

அமிர்தலிங்கம் சிரித்தான்.

''உச்சி மோட்டை மட்டுமில்லே; மலைச் சிகரங்களை, ஏரியின் நீர்ப்பரப்பை, பசும் புல் தரையை, மரங்களடர்ந்த மலைச் சரிவை எல்லாம் பார்ப்பேன். ஆனால் என்னுடைய கண்களால் உனக்குப் பார்க்க முடியுமானால் அங்கெல்லாம் வெறும் பச்சை நிறத்தை மட்டும் காண மாட்டாய். அந்தக் காட்சிகளைப் பின்புலனாகக் கொண்டு அருமையான புதிய நாடகம் அரங்கேறுவதைப் பார்ப்பாய்!'' — சற்றுச் சூடாகப் பேசினார் பத்மநாபன்.

''உங்களுக்கு இருக்கிறது டெலிவிஷன் கண்களோன்னோ, காங்க்ரீட்டைப் பார்த்தால்கூட சினிமாக் காட்சிதான் தென்படும்!''

''கொடைக்கானலில் எப்படிப் பொழுது போக்கலாம்? நீங்கள்தான் சொல்லுங்களேன்'' என்றான் அமிர்தலிங்கம்.

''இதுதான் உங்களுக்குப் ஃபர்ஸ்ட் டிரிப்பா? அதனால்தான் இப்படிக் கேட்கிறேன். அங்கே இங்கிலீஷ் கிளப் இருக்கு — டென்னிஸ் ஆடலாம்; கால்ஃப் கிளப் இருக்கு; ரைடிங் கிளப் இருக்கு; போட் கிளப் இருக்கு. இதிலே எதிலாவது சேர்ந்துண்டு 'ஆக்டிவ்'வா இருக்கலாம். இதைவிடச் 'சிரம' சாத்தியமான காரியங்களைப் பண்ணணும்னா



மவுண்டனீர்ஸ் கிளப்பிலோ, எக்ஸ்ப்ளோரர்ஸ் கிளப்பிலோ சேர்ந்து மலை ஏறலாம், கானகங்களை ஆராயலாம். இப்படி ஏதாவதொன்றில் சுருசுருப்பாக ஈடுபடவில்லையானால் அலுப்பு ஏற்படுவது மட்டுமல்ல, மனமும் உடலும்கூடக் கெட்டுவிடும்!''

''தாங்க்ஸ்! நான் கால்ஃப் கிளப்பிலே சேரலாம்னு பார்க்கறேன்.''

''முன்னமேயே ஆடிப் பழக்கம் உண்டோ?''

பின்னாலிருந்து அம்புஜம் குறுக்கிட்டாள்: ''இதற்கு என்ன பழக்கம் வேண்டியிருக்கிறது? பந்தை மட்டையால் தட்ட வேண்டியது. அதும் பின்னாடியே நடந்து போய் நிற்க வேண்டியது; மறுபடியும் பந்தைத் தட்டவேண்டியது; மறுபடியும் நடை, தட்டு, நடை, தட்டு நடை! இவ்வளவுதானே!''

''இந்தா அம்புஜம்! நீ பாட்டுக்கு மடிசார் வைச்சுக் கட்டிண்டு கால்ஃப் ஆடப் போயிடாதே, கொடைக்கானலில்!'' என்றார் பத்மநாபன், தம் மனைவியைத் திரும்பிப் பார்த்து. பின்னர் அமிர்தலிங்கத்திடம் தொடர்ந்தார்: ''இவளைப் போல்தான் ரொம்பப் பேர் நினைத்துக் கொள்கிறார்கள் அது ரொம்பச் சுலபம்னு.''

''உண்மையில் நீங்கள் இப்போ சொன்ன அதே காரணத்துக்காகத்தான் நானும் அதைத் தேர்ந்தெடுத்தேன்'' என்றான் அமிர்தலிங்கம். ''மற்றபடி எனக்குக் கால்ஃப் விளையாட்டின் விதிமுறைகள்கூடத் தெரியாது.''



''சோம்பல் பேர்வழிகளுக்கு ஏற்ற சாவகாசமான ஆட்டம்னுதான் தோன் றும். ஆனல் உண்மையில் அது ரொம் பச் சிரமம்!''

''நீங்க ஆடியிருக்கேளா?'' என்று அம்புஜம் கேட்டாள்.

''நெருப்பைத் தொட்டுப் பார்த்துத் தான் தெரிஞ்சுக்கணுமா சுடும்னு? மேம் புல் மேய்பவர்களுக்கு எதுவுமே எளிது; ஆனல் அந்த ஆட்டத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்று தீவிரமாக நினைப்பவர்களுக்குக் கால்ஃப் ஆட்டம் கஷ்டம்தான். நல்ல தேகப்பயிற்சியும் கூட. நீங்க ஆடுங்க ஸார், நல்ல, ஹை கிளாஸ் ஸொஸைட்டியிலே 'மூவ்' பண்ணுகிற வாய்ப்புக் கிடைக்கும், கால்ஃப் கிளப்பிலே!''

இப்படியாகப் பேசிக் கொண்டே வந்த ஞாபகத்தில்தான் பத்மநாபன் இன்று அமிர்தலிங்கத்தைக் கேட்டார், ''என்ன புரோகிராம் உங்களுக்கு? கால்ஃப் ஆடப் போறீங்களா?'' என்று.

ஆனல் பதில் கிடைக்கச் சற்று நேரமாயிற்று. அனசூயாவின் கரங் களில் நெளிந்த கயிறு ஸாரநாத னுக்கு ஏதேதோ நினைவுகளை ஏற்படுத் தின. அவற்றிலிருந்து விடுபட்டு அவன் மீண்டும் அமிர்தலிங்கமாக மாறி, பத்ம நாபனிடம் திரும்பி வரக் கால தாமத மாயிற்று. ''என்ன கேட்டீர்கள்?'' என்று அவன் வினவ இவர் தம் குர லுக்குக் 'கார்பன் காப்பி' எடுத்துக் கொடுத்தார்.

''ம்...இன்னிக்கு இல்லே; இலேசாத் தலே வலிக்கிறது. கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கலாம்னு பார்க்கிறேன்.''

''அது ஒண்ணுமில்லே, சேஞ்ச் ஆஃப் க்ளைமேட் — அவ்வளவுதான். சில பேருக்கு வரும்; ஒரே நாளிலே அட் ஜஸ்ட் ஆயிடும்'' என்று கூறிக் கைகழு விக்கொண்டு வந்தார் பத்மநாபன். ''திடீர்னு எலிவேஷன் ஜாஸ்தியாய்ப் போய் அட்மோஸ்ஃபியரிக் பிரஷர்லே ஒரு வித்தியாசம் ஏற்படுது பாருங்க அதுதான் காரணம்.''

இதற்குள் ஒரு மேஜைக்கு முன்னல் சாப்பிட அமர்ந்திருந்த அமிர்தலிங்கத்தி னிடம் ஒரு ஸர்வர் வந்து குனிந்து, ''நான்வெஜிடேரியன் எல்லாம் அந்த பில்டிங் ஸார்!'' என்று ஜன்னல் வழி யாகத் தெரிந்த ஒரு சிறு கட்டிடத்தைச் சுட்டிக் காட்டினன்.

பத்மநாபன் காதில் இது விழாமல் போகவில்லே. ''இன்னிக்கு ஒரு நாள்— ஃபர்ஸ்ட் டே — சைவச் சாப்பாடே இருக்கட்டும். லேட்டா நிறுத்திக்குங்க. மண்டை கனக்குதுங்கறீங்களே!'' என்று அறிவுரை வழங்கினர், மேல் துண்டில் கையைத் துடைத்தவாறே.

''ஏன்னு! சித்தே இப்படி வாங்கோ'' என்று அவரை இப்பால் அழைத்த அம்புஜம், ''இங்கே அசைவச் சாப் பாடு கூட உண்டா?'' என்று அருவருப் புடன் கேட்டாள். மற்றவர் காதில் விழாதவாறு சம்பாஷணை தொடர்ந்தது.

''அவனிடம்தான் நீ ஜாதகம் கேட் கப் போறுய். உன் நாத்தனர் பெண் ணுக்கு!'' என்று நினைவூட்டினன் மீனு.

''அவன் எப்படியோ போய்த் தொலையட்டும்; நாம் எதுக்கு இங்கே இருக்கணும்?'' என்றாள் அம்புஜம்.


''ஏதாவது உளறுதே! சைவம் அசை வம்னு தனித் தனியாப் பிரிச்சுத்தானே வைச்சிருக்கா?''

''மாமிசத் துண்டத்தை எடுத்துப் போட்டுட்டுச் சாம்பார்னு பரிமாறிட் டான்னு என்ன பண்ணறது?''

''பாபத்தைப் போக்கக் கூவத்திலே ஸ்நானம் பண்ணறது! அம்புஜம், எனக் குக் கோபத்தை வரவழைக்காதே! தனித் தனி சமையல் அறை, தனித் தனி சாப் பாட்டுக் கூடம், தனித் தனி சமையல் காரர்கள் என்று எல்லாம் கச்சிதமாய் இருக்கு. நான் பார்த்துட்டேன்; மேலே பேசாதே! மீனு! உனக்குந்தான் சொல் றேன். லோகத்திலே அசைவச் சாப் பாடு சாப்பிடுகிறவர்களை யெல்லாம் வெறுத்துட முடியுமா என்ன? வீ ஆர் லிவ்விங் இன் நைன்டீன் ஸெவன்டீஸ்!''

அப்போது சாப்பாட்டுக் கூடத்தின் வாசல் வழியாக ஹோட்டல் முதலாளி தனராஜ் ஒருவரை மரியாதையாகவும் அதே சமயம் ரொம்பப் பெருமையுட னும் அழைத்து வருவதைப் பத்ம நாபன் பார்த்தார். அந்த ஒருவரின் பின்னலேயே ஏறத்தாழ அவரைப் போலவே தோற்றம் அளித்த ஓர் இளை ஞன் வந்தான்.

முன்னவரிடம் அதிகாரத் தோரணை யுடன் அநுபவத்தின் விளைவாகப் பக்கு வமும் படர்ந்திருந்தது. பின்னவனிடம் இளமை மிடுக்குடன், 'நான் சிறியவன்' என்ற அடக்கமும் மிகுந்திருந்தது. இரு வரிடமும் காணப்பட்ட அகன்ற மார்பு அடங்கிய வயிறு வைரமேறிய கைகள் ஆகியவை நன்கு தேகாப்பியாசம் செய்து உடலைக் கட்டுமஸ்தாக வைத்துக்கொள் வதில் சிரத்தை காட்டுபவர்கள் என் பதை விளம்பரப்படுத்தின. உயர்ந்த பர்மாத் தேக்கினல் செதுக்கப்பட்டு நன்கு பாலிஷ் ஏற்றப்பட்ட பதுமை களைப் போல் அவர்கள் ஒரு தேஜஸைப் பரப்பினர்கள். இளைஞனிடம் இல்லாத சில முதுமைக் கோடுகளும் நரையும் முதியவரிடம் இருந்தன. முதியவ





DC.G.49 TH

கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள் !

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய் துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.

அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையேதனி—கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...

உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

பூரண பல் பராமரிப்பிற்கு
கால்கேட் டூத் பிரஷ்
உபயோகியுங்கள்.
ஒவ்வொருவரின் தேவைக்கேற்றவாறு அமைய—15 ரகங்கள்.



Criterion CO 2697 TM B

ரிடம் காணப்பட்டாத மகிழ்ச்சியும் குறுகுறுப்பும் இளைஞனிடம் இருந்தன. இளைஞன் ஆள்காட்டி விரலால், மேல் உதட்டின் அடிவாரத்தில் வெகு சிரத்தையாகக் கத்தரித்து விடப்பட்டிருந்த மீசையை அடிக்கொரு தடவை தடவி விட்டுக் கொண்டான். பெரியவருக்கு மீசை இல்லை. மிக அதிகமான வித்தியாசத்தை அவர்கள் கண்களிலேதான் பளிச்சென்று காண முடிந்தது. வயதானவர் கண்களில் அலுப்பும் களைப்பும் குடி கொண்டிருந்தன. வாலிபனோ, வாழ்க்கை என்னும் பாதையில் எதிர்ப்பட்ட யௌவனம் என்ற மாளிகையின் வாயில் கதவுகளை அப்போதுதான் திறந்திருந்தான். உள்ளே சென்றால் என்னென்ன அற்புதங்கள், புதிர்கள், திகைப்புக்கள், இன்பங்கள் காத்திருக்குமோ என்ற ஆவல் குறுகுறுப்புடன் அவன் கண்கள் பளபளத்துக் கொண்டிருந்தன. வசதி மிக்கவர்கள், விடுமுறையை அனுபவிக்க வந்தவர்கள் என்பதை அவர்கள் உடை தெளிவாக்கியது. கருநீல டெர்ரிகாட் பேண்ட்டும் பெரிய பெரிய மஞ்சள் பூக்கள் போட்ட பச்சை நிற புஷ் ஷர்ட்டுகளும் அணிந்திருந்தனர். பழுப்பு நிறத்தில் காஷுவல் ஷூஸ்தான் அணிந்திருந்தனர் என்றாலும் அதுவும் பளபளக்கத்தான் செய்தது.

அவர்களின் எடுப்பான தோற்றமும் அத்தருணத்துக்கு ஏற்றாற்போல் உடை அணிந்திருந்த விதமும் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் மணியையும் நிமிஷத்தையும் விநாடியையும் ரசிப்பவர்கள் என்ற எண்ணத்தை உண்டாக்கின. அந்த ரசனை மனம் போன போக்கில் வாழ்வதால் ஏற்பட்டதல்ல; ஒரு நியதிக்கும் கட்டுப்பாட்டுக்கும் கடமை உணர்வுக்கும் உட்பட்டிருப்பதாலேயே உண்டான ஒன்று.

தனராஜுடன் வந்த அந்த முதியவர் யார் என்பது பத்மநாபனுக்குப் பார்த்தவுடனேயே தெரிந்து போயிற்று. பத்திரிகையாளர் அல்லவா அவர்? "டி. ஐ. ஜி.ன்னு சொன்னானே அம்புஜம், அரைகுறையா! டி. ஐ. ஜி., ஸி. ஐ. டி.ன்னு சேர்த்துச் சொல்லியிருக்கணும்! பேர், நடராஜன்" என்று அவர் தம் மனைவிக்கு விளக்கினார். அவர்கள் வரும் வழியிலேயே சற்று ஒதுங்கினாற்போல் தனராஜ் தம்மை அறிமுகப்படுத்துவார் என எதிர்பார்த்தவராகக் காத்திருந்தார்.

ஆனால் டி.ஐ.ஜி., ஸி. ஐ. டி.யை முழுக்க முழுக்கத் தமக்கே உரியவராக்கிக்கொள்வதில் தனராஜ் முனைந்திருந்தார். அவர் பகிர்ந்து கொள்ள முன்வரா

விசாரணைக்குத் தயார்!



விட்டால் என்ன? பத்மநாபனா விடுகிறவர்? அவர்கள் இவரைத் தாண்டி அப்பால் செல்ல இருந்த தருணத்தில் பத்மநாபன், ''நமஸ்காரம் ஸார்! நைஸ் டு ஸீ யூ ஹியர்'' என்றார்.

நடராஜன் இவரை இன்னாரென்று புரிந்துகொள்ள முடியாமல் புருவங்களை நெரிக்கத் தொடங்கியதும் ''ராஜரத்தினம் ஸ்டேடியத்திலே நடந்த ஸ்போர்ட்ஸ் மீட் பற்றிப் படங்கள் போட்டு எழுதியிருந்தோமே 'அன்னம்' பத்திரிகையிலே, பார்த்தீங்களா? நல்ல ஆக்ஷன் ஷாட்ஸா சிலது கிடைச்சுது; சில படங்கள் டிராமாடிக்கா இருந்தனன்னுகூடச் சொல்லலாம்'' என்று நாசூக்காகத் தம்மைப் பற்றிச் சொல்லிக்கொண்டார் பத்மநாபன்.

''ஓ யெஸ்! நீங்க அன்னிக்கு பிரஸ் கான்ஃபரன்ஸுக்குக்கூட வந்திருந்தீங்களே?'' என்று கேட்டு மலர்ந்த முகத்துடன் கை குலுக்கினார் நடராஜன். ''எக்ஸ்கியூஸ் மீ! பெயர் என்னன்னு சொன்னீங்க?''

''பத்மநாபன், அப்பா!'' என்று இடைமறித்துக் கூறினான் இளைஞன். ''ஜர்னலிஸ்ட் மட்டுமில்லே நாவலிஸ்ட்டும்கூட. பத்மம் என்கிற புனை பெயரிலே எழுதறீங்க இல்லையா? ரொம்ப நாவலாசிரியர்களுடைய பெயர் நமக்குப் பழக்கமாகி யிருக்கும்; ஆட்களை அடையாளம் தெரிஞ்சுக்க முடியாது. ஆனால் இவருடைய நூல் ஒன்றைச் சமீபத்திலேதான் நான் படிச்சேன். 'சோலைக்குயில்'னு டைட்டில். ஜாக்கெட்டிலே இவர் படத்தையும் போட்டிருந்தார்கள்.''

''ஓ! என் புஸ்தகத்தை நீ படிச்சிருக்கியா? அப்போ உன் கிட்டே ஜாக்கிரதையாகத்தான் இருக்கணும்'' என்றார் பத்மநாபன், உடம்பெல்லாம் கிளுகிளுப்பதை மறைத்துக் கொண்டு.

தந்தை மகன் இருவருமே சிரித்துவிட்டனர். ''பயப்படுவதாக நடிக்கக்கூட வேண்டியதில்லை நீங்க. ரொம்பப் பிரமாதமாக இருந்தது.''

'அலமாரியில் அடுக்கி வைச்சிருக்குன்னு கேலி பண்ணுவியே, பார்த்தியா? விஷய ஞானமுள்ளவர்கள் விரும்பிப் படிக்கிறார்கள்' என்று தமது மனைவிக்குச் சொல்கிற பாவனையில் கண்களால், அவளை ஒரு வெட்டு வெட்டினார் பத்மநாபன். அதே சமயத்தில் அந்த இளைஞன் தொடர்ந்து கூறியவற்றால் அவருக்குச் சுரத்துக் குறைந்து போக, அம்புஜத்தின் முகத்தில் விஷமப் புன்னகை அரும்புவதைக் கண்டு பல்லைக் கடித்துக்கொண்டார். இளைஞன் சொன்னான்: ''உங்கள் புத்தகத்தின் தலைப்பு மட்டும்தான் எனக்குப் பிடிக்கவில்லை. சப்புன்னு போச்சு. இன்ஃபாக்ட் ஒரு நண்பன் சிபாரிசு பண்ணி யிருக்கலேன்னா நான் அந்தப் புத்தகத்தை வாங்கியே இருக்க மாட்டேன். தலைப்பிலே கவர்ச்சி இல்லாததுதான் காரணம்.''

இப்போது அம்புஜம் பத்மநாபனைப் பார்த்த பார்வை, 'இந்த லட்சணத்தில் புத்தகங்களை அலமாரியில் அடுக்காமல் என்ன பண்ணுவது?' என்று கேட்பது போலிருந்தது.

''ரங்கன் எப்பவுமே மனசில் உள்ளதைப் பளிச்சுன்னு சொல்லிடுவான். ஒளிவு மறைவு இல்லாமல் ஃப்ராங்கா பேசணும்னு கத்துக் கொடுத்தே பழக்கிட்டேன். நீங்க ஒண்ணும் தப்பா நினைச்சுடாதீங்க'' என்றார் தந்தை.

''அதனாலென்ன? ஐ வெல்கம் கிரிடிஸிஸம்'' என்றார் பத்மநாபன். ''நல்லதையும் சொன்னான், குறையையும் குறிப்பிட்டான், அவ்வளவுதானே?''

''சாப்பாடு ஆச்சா அல்லது பத்திரிகைக்கு 'அன்னம்'னு பேர் வைச்ச தோடே திருப்தி அடைஞ்சுட்டீங்களா?'' என்று புன்முறுவலுடன் கேட்டார் நடராஜன்.

''எங்களை அன்னக்காவடிகள்னு யாராவது நினைச்சுடக் கூடாதேங்கறதுக்காகத்தான் அட்டைப் படத்தில் மட்டுமின்றி உள்ளேயும் இரண்டு இடங்களிலே வாராவாரம் அன்னப் பட்சியின் பொம்மை போட்டுக் காட்டறோம்'' என்று சிரித்துக் கொண்டே சொன்ன பத்மநாபன், ''நீங்க உட்காருங்க; நாங்க சாப்பிட்டுக் கையலம்பியாச்சு'' என்றார்.

''தண்ணீர் கலந்த பாலானாலும் நீரை விலக்கிப் பாலை மட்டும் உண்ணும் ஆற்றல் அன்னத்துக்கு உண்டாம்; அதுபோல் அப்பாவும் நல்லதை மட்டுமே பிரசுரிப்பதாகச் சொல்லிக்கொள்கிறார்'' என்றாள் மீனு.

''உங்க மகளா? ரொம்ப கேர்ஃபுல்லா பேசறாளே! 'சொல்லிக்கொள்கிறார்' உங்க அப்பா!''

''இவங்க சொல்றதிலேயும் ஒரு பாயிண்ட் இருக்கு அப்பா!'' என்று மீனுவின் கூற்றுக்கு விரிவுரை வழங்க முன் வந்தான் ரங்கநாதன். ''அன்னம் பாலை மட்டும் தனியே பிரிக்கும் என்பதை விஞ்ஞான ரீதியாக ஒப்புக்கொள்ள முடியாது; அதே போல் இவங்க நல்லதை மட்டுமே பிரசுரிக்கிறாங்க என்பதையும் முழுக்க முழுக்க ஒப்புக்கொள்ள முடியாது. பத்மநாபன் ஸார் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் ஏதாவது அபத்தம் வந்து அவரையும் அறியாமல் ஓரிரு சமயங்களில் புகுந்து கொள்ளும். ஒண்ணுமில்லேன்னா ஆபா

சப் படத்துடனும் அசங்கியமான வாசகத்துடனும் ஒரு விளம்பரம் வந்து சேரும். அதைப் போடவும் முடியாமல் நிராகரிக்கவும் இயலாமல் இவர் கிடந்து அவஸ்தைப்படுவார்!''

''பத்திரிகைத் துறையிலே பத்து வருஷ அனுபவம் உள்ளவன் போல் பேசுகிறான் ஸார், உங்க மகன்!'' என்று நிஜமாகவே வியந்து போற்றும் முகமாகக் கூறினார் பத்மநாபன்.

''இந்தாப்பா ஸாருக்கு ரசம் கப்பிலே போடு'' என்று உபசாரம் செய்துவிட்டுப் பத்மநாபன் தொடர்ந்தார்: ''நீங்கள் எங்கே இவ்வளவு தூரம்? ஏதாவது இன்வஸ்டிகேஷன் சம்பந்தமாய்க் காம்ப் போட்டிருக்கேளா?''

''பத்திரிகைக்காரர் வேலையைக் காட்டாதீங்க, ஸார்! நான் இங்கே ஓய்வுக்காக ஹாலிடேயில் வந்திருக்கேன். போலீஸ் வேலையை யெல்லாம் பதினைஞ்சு நாளைக்கு மூட்டை கட்டி வைச்சாச்சு.''

''ஒரு சேஞ்ச் வேண்டியதுதான். அதிலும் நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வந்திருக்கேளே அதுதான் ரொம்ப சந்தோஷமா இருக்கு. இந்தக் காலத்தில் அப்பாவும் பிள்ளையுமாச் சேர்ந்து விடுமுறையில் கிளம்பறது என்கிறதே ஓர் அபூர்வக் காட்சி. காலேஜ் நண்பர்களோடுதான் புறப்படுவேன் என்று சொல்லாமல் ரங்கன் உங்களுடன் வந்திருக்கிறானே, பெரிய விஷயம் ஸார், அது!''

''நீங்கள் மட்டுமென்ன? குடும்பத்தோடுதானே வந்திருக்கீங்க?'' என்றான் ரங்கன், மீனாவை விழுங்கியபடியே. அவள் முகம் ஜிவ்வென்று சிவந்துவிட்டது. ஆயினும் தலை குனியக் கூடாது என்று பிடிவாதத்துடன் உட்கார்ந்திருந்தாள். நரம்புகளிலெல்லாம் இனியதொரு நடுக்கம் பரவியது.

பத்மநாபன் நடராஜனை நோக்கினார்: ''நாம் குடும்பச் சூழலிலிருந்து ஓர் அடி விலகினால் பிள்ளைகள் பத்தடி அப்பால் போய் விடுவார்கள். அப்புறம் அவர்களை மறுபடியும் இந்த வட்டத்துக்குள் கொண்டு வந்து சேர்க்கிறது பெரும் பாடாகப் போயிடும்.''

''வாஸ்தவம்'' என்றார் நடராஜன். ''ஆனால் ரங்கனுக்கு நான் சரியான கம்பெனியாக முடியுமா என்று சில சமயம் எனக்கே சந்தேகமாகப் போய்விடுகிறது. பாசம் வேறே, தோழமை என்கிறது வேறே இல்லையா?''

''அதைப் பற்றிக் கவலைப்படாதீங்க. இவன் வயது வாலிபன் ஒருத்தனை நேற்றுத்தான் சந்திச்சேன். இவனுக்காகவே நான் அவனை அறிமுகம் செய்துண்ட



''கால்கோள் விழாவில் கல் ஊன்றப் போனேனே; போன இடத்தில் கால் ஊன்றுறபோது கல் கால்மேல் விழுந்து....''

மாதிரி இருக்கு. இன்டலிஜண்ட் சாப். அமிர்தலிங்கம்னு பேரு. இருவரும் நல்ல நண்பர்களாய் விளங்கலாம்.''

இவ்வாறு கூறியபடியே பத்மநாபன் அமிர்தலிங்கம் அமர்ந்திருந்த இடத்தைப் பார்த்தார். நாற்காலி காலியாக இருந்தது. தமது அறிவுரையை ஏற்காமல் அவன் அசைவ உணவு உட்கொள்ளப் போய்விட்டான் என்று புரிந்தது. ''சற்று முன் இங்கேதான் இருந்தான்'' என்றார்.

''வி. ஐ. டி. வரார்ன்ன உடனே அந்த ருத்திராட்சப் பூனை ஓடிப் போய்ப் பதுங்கியிருக்கும்'' என்றாள் மீனா.

ரங்கன் குபீரென்று சிரித்தான். நடராஜன் புன்னகையுடன், ''என்ன சொல்கிறாள் உங்கள்மகள்?'' என்று கேட்டார்.

''அது ஒன்றுமில்லை ஸார். அவன் கொஞ்சம் ஹிப்பி பாணியில் உடை அணிந்திருந்தான். அது இவளுக்குப் பிடிக்கவில்லை.''

''உடையை மட்டுமில்லை, அந்த ஆளையும் பிடிக்கவில்லை'' என்றாள் மீனா.

''மீனா!'' என்றார் பத்மநாபன் அன்புடன் எச்சரிக்கிற குரலில்.

''திஸ் இஸ் எ ஃப்ரீ கண்ட்ரி டாடி!'' என்றாள் மீனா. ''பிரிட்டனில் பிறந்திருந்தால் எனக்கு இன்று ஓட்டுரிமை கூட உண்டு!''

''போட்டியே ஒரு போடு!'' என்று வாய் விட்டுப் பாராட்டி, ரங்கன் அவளைப் பார்த்ததானது, 'நீ என் எதிரே இருக்கும்போது என்னுடன் நட்புரிமை பூண எவனோ அமிர்தலிங்கத்தைப் போய்ச் சிபாரிசு பண்ணுகிறாரே உன் அப்பா?' என்று கேட்பதுபோலிருந்தது.

(தொடரும்)


இடுக்கண்
களைந்திடும் நட்பு போல்

வலியைப் போக்கிடும் 'ஆஸ்ப்ரோ'

வலியால் அவதிப்படும்போது விரைவில் நிவாரணம் பெற 'ஆஸ்ப்ரோ'வை நம்புங்கள். 'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோ-ஃபைன் செய்யப்படுகிறது. அதாவது, அது அதிவேகமாகக் கரைந்து அதிவேகமாகக் கிரகிக்கப்பட்டு, வலியை அதிவேகமாக வெளியேற்றிவிடுகிறது. சாதாரண வலிநிவாரணிகளைவிட இரு-மடங்கிற்கும் அதிகமான வேகத்துடன் 'ஆஸ்ப்ரோ' வேலை செய்கிறது என்பதை விஞ்ஞானரீதியான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன!

எனவே, வலியால் அவதிப் படும்போது, நீங்கள் நம்பக்கூடிய நண்பனை நாடுங்கள்—மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிட்டு உடனடி நிவாரணம் பெறுங்கள்.

கீழ்க் கண்டவைகளுக்கு மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளு • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி.

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப்பட்டால் மீண்டும் சாப்பிடவும்.

குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி.





தாமத நிவாரணம்
பெரிய அணுக்கூறுகள் மெதுவாகக் கிரகிக்கப்படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அடைய அதிக நேரமாகிறது. நீங்கள் அனாவசியமாக வலியால் அவதிப்படுகிறீர்கள்.



துரித நிவாரணம்
நுண்ணிய அணுக்கூறுகள் விரைவில் கிரகிக்கப்படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. வலியை அதிவேகமாகப்போக்கி விடுகின்றன.

'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன் செய்யப்படுகிறது
அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக

நிகோலஸ் (N) தயாரிப்பு

A.G.43 TH

பஞ்சாபிக் கதை

புதிய திருப்பம்

ஸுக்பீர்



கிராமத்தில் எத்தனையோ சாவுகள் நிகழ்ந்திருக்கின்றன — குழந்தைகள், கிழவர்கள், கட்டிளங் காளைகள், ஆண்கள், பெண்கள் என்று. அவை அனைத்தும் ஒன்று போன்ற சாவுகள். பொதுவாக அன்றாடம் நிகழ்வது போன்ற சாவுகள்!

ஆனால் அந்தச் சாவு கிராமத்தில் நிகழவில்லை. முற்றிலும் புது மாதிரியான சாவு. அந்தச் சாவுக்கு வருந்தியது போல் வேறு எந்தச் சாவுக்கும் கிராமம் அப்படி வருந்தியதில்லை.

இறந்தவன் ஜீவியின் மகன். போர்க்களத்தில் போரிட்ட வண்ணம் வீர மரணம் அடைந்திருந்தான்.

ஜீவியின் மகன் இறந்து போன செய்தி தந்தியாக வந்தது. ஜீவியோடு சேர்ந்து கிராமம் முழுதுமே அழுதது. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளையின் சாவாக அல்ல; பல அன்னைகள் பெற்ற பிள்ளைகள் இறந்துவிட்டாற்போன்ற உணர்வோடு கிராமமே கண்ணீர் விட்டுக் கதறியது.

ஒருசில பிள்ளைகளுக்கு ஒரு தாய் அல்ல; பல தாய்கள் உண்டு என்பது அன்றுதான் ஜீவிக்குத் தெரிந்தது. அத்தகைய பிள்ளைகள் மரித்தால் பல தாய்மார்களின் துயரமாக உருப்பெற்றுவிடும் என்பதும் புரிந்தது. அத்தனை அன்னைகள் துயரத்தில் பங்குகொள்ளவே, ஓர் அன்னையின் மனத்துயரம் சற்றுக் குறைந்துவிட்டாற் போலவே தோன்றியது.


மகன் இறந்த தந்தி வந்ததும் ஜீவி கதறித் தீர்த்து விட்டாள். கிராமமே கண்ணீர் விட்டுக் கதறியதைக் கண்டபொழுது அவள் அழுகை மேலும் வலுத்தது. பிறகு சட்டென்று அழுகையை ஒய்த்து அவள் மௌனமானாள். தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஒரு கேலி முறுவல் உதடுகள்வரையில் வந்து விட்டு அப்படியே அடங்கியது. மனம் மிகக் கசந்து போய் ஜீவியின் மகன் ஒரு நாள் கிராமத்தை விட்டே வெளியேறினான். இது ஜீவிக்கு நன்கு தெரியும். அப்படி வெளியேறியவன் இன்று கிராமம் முழுவதற்கும் எப்படிச் சொந்தமாகி விட்டான்? ஒரு நாள் அவனை ஒதுக்கித் தள்ளிய கிராமம் இன்று அவனை எப்படி அரவணைத்து ஏற்றுக் கொண்டு விட்டது! நினைக்க நினைக்க மனித இயல்பு — மன இயல்பு வியப்பாக இருந்தது.

ஜீவிக்கு அவன் ஒரே பிள்ளை. அவனை விட்டால் உலகத்தில் ஜீவிக்கு யாருமே கிடையாது. இந்தப் பிள்ளை மட்டும் பிறக்காமல் இருந்தால், ஒருவேளை ஜீவியேகூட மரித்திருப்பாள். ஆனால் அவள் மகனுக்காக உயிர் வாழத் தொடங்கினாள். அவள் அரும்பாடுபட்டு அவனை வளர்த்து ஆளாக்கினாள். அவள் குடும்பமே மிக ஏழைக் குடும்பம். இருந்த ஒரு புருஷத் துணையும் பறிபோய் விடவே அவள் நிலை அவலமாகி விட்டது. இரண்டு வேளை வயிறாரச் சோறு கிடைப்பதே அரிதாகி விட்டது.

ஜீவியின் கணவன் கிராமத்துக் குடியானவர்களிடம் கூலிக்கு வேலை செய்து வந்தான். அன்றாடம் காய்ச்சி அவன். அவனுக்கென்று ஏதும் நில புலன் கிடையாது — ஒரு சிறு குச்சிலைத் தவிர. அதுதான் அவனுடையதென்று சொல்லக் கூடிய சொத்து. முன்னோர் வழி வழி வந்த சொத்து. செத்த பின் அதையே அவன் தன் பிள்ளைக்கு விட்டுப் போயிருந்தான். ஜீவிக்கு வெய்யில் மழைக்குக் குந்த ஒரு குடிசை விட்டுச் சென்றிருந்தானே, அது போதாதா? 'அவளுடைய மகன் ஒரு நாள் பெரியவன் ஆவான். ஆகி அவளைச் சீரும் சிறப்புமாகக் காப்பாற்றுவான்' என்ற நம்பிக்கையில் ஜீவி காலத்தை ஓட்டலானாள். மகன் பெரியவனாகி விட்டால் அப்புறம் எதற்கும் கவலை இராது. அவன் நாலு காசு சம்பாதிக்கத் தொடங்குவான். புது வீடு— பக்கா வீடு கட்டிக் கொள்ளலாம். முடிந்தால் கொஞ்சம் நிலபுலனும் வாங்கலாம். அப்புறம் யாருக்கும் கைகட்டி வாழ்ந்து ஈனத் தொழில் புரிய வேண்டியதில்லை. அவள் மகனுமே கூட எந்தக் குடியானவர்களுக்கும் அடிமைத் தொழில் புரிந்து கூலிக்கு மார

டிக்க வேண்டியிராது.' இவ்வளவுதானா ஜீவி ஆசைக் கோட்டை கட்டினாள்? இல்லை, இல்லை! அவள் மகன் பெரியவன் ஆனதும் அவனைப் போலீசில் சேர்த்து விடத் திட்டமிட்டிருந்தாள் அவள். போலீஸ்காரர்களுக்குத்தான் எத்தனை அதிகாரம்! மிடுக்கு! போலீசைக் கண்டால் யாருமே அஞ்சுகிறார்கள். அவள் மகன் போலீசில் சேர்ந்து விட்டால் அவள் யாருக்கும் பயப்பட வேண்டியிராதல்லவா? குடியானவர்களிடம் சிக்கி இடி, உதை பெற வேண்டியிராது. அவர்களையே கூட அவள் அச்சுறுத்திக் கிலி கொள்ளச் செய்யலாம்.

எப்படியோ வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி ஜீவி ஓர் எருமைக் கிடாரி வாங்கினாள். அதைத் தன் மகனுக்கும் மேலாக வளர்த்தாள். அதற்காக அவள் வயல் வரப்புகளிலிருந்து புல் வெட்டி வருவாள். பகல் முழு



வதும் வெய்யில் அவள் தலையில்தான். வயற்காட்டைச் சுற்றிக் கிடாரியின் வயிற்றை வளர்க்கும் முயற்சிதான். கடைசியில் அந்தக் கிடாரி கன்று ஈன்றபோது ஜீவியின் வீட்டில் பாலும் தயிரும் மோரும் வெண்ணெயும் ஆறாகப் பெருகலாயின. அப்புறம் தன் மகன் வயிற்றையும் தன் வயிற்றையும் கழுவிக் கொள்ள அவள் கஷ்டப்பட வேண்டியிருக்கவில்லை. நல்லபடியாக வாழ்க்கை ஓடியது. அந்த எருமைக் கிடாரியின் அருள் பெருக்கினால்தான் ஜீவியின் மகன் தெம்பாக வளர்ந்து கரணை கரணையான காலும் கையும் பெற்று வலிமை மிகுந்த ஆஜானுபாகுவாக விளங்கினான். கடைசியில் ஜீவியின் ஆசை அவள் நினைத்ததைக் காட்டிலும் அதிகமாக நிறைவேறியது. ஆம். அவன் இராணுவத்தில் சேர்ந்தான். இராணுவ உடையில் அவனைப் பார்த்த ஜீவி உடல் பூரித்து ஒரு சுற்றுப் பருத்தே போனாள். இராணுவ உடையில் அவன் மாபெரும் அதிகாரியாகத் தோற்றம் அளித்தான். இப்பொழுது தன் மகன் 'லெப்டினென்ட்' ஆகியிருப்பதாகவும் கூடிய சீக்கிரத்திலேயே ஹவல்தார் ஆகிவிடப் போவதாகவும் ஜீவி சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்வாள்.

ஜீவியின் பாக்கியம் பளிச்சிட்டது. அவள் மகன் பணம் காசினால் அவள் மடியை நிரப்பலானான். ஒவ்வொரு மாதமும் அவ

னிடமிருந்து மணியார்டர் வரும். ஜீவி மகிழ்ச்சியில் மிதந்து போவாள். இப்படி ரூபாயாகக் கொண்டு வந்து கொட்டுகிறானே, இதில் மயங்கி நாம் ஒரு நாள் பைத்தியமாகப் போய்விடாமல் இருக்க வேண்டுமே என்றுகூட எண்ணுவாள் ஜீவி. ஒவ்வொரு மாதமும் இப்படி மணியார்டர் வருவதைப் பார்த்துவிட்டுக் கிராமத்தார்கள் பொருமையினால் பற்றி எரிவார்கள். ஜீவி அந்தப் பொருமையைப் போக்கி விட்டவள் போல் கிராமத்தில் தலைநிமிர்ந்து வளைய வருவாள்.

கொஞ்ச நாட்களில் ஜீவியின் குடிசை பக்கா வீடாகியது. பிறகு அவள் கொஞ்சம் நிலமும் விலைக்கு வாங்கினாள். அப்புறம் கொஞ்ச நாட்கள் போனதும் இன்னும் கொஞ்சம் வாங்கினாள். இப்படியே காலம் போனால் இன்னும் நிலங்கள் வாங்கிவிடலாம். அவள் மகன் இராணுவத்திலிருந்து திரும்பி வந்து சொந்தமாகச் சாகுபடி செய்து நாலு பேருக்கு மத்தியில் கௌரவமாக வாழலாம் என்று அவள் கணக்குப் போட்டாள்.

இதுமாதிரி நிலையில்தான் அவள் மகனைப் போர்முனைக்கு அனுப்பியிருப்பதாகச் செய்தி வந்தது. ஜீவியின் மனசு கிடந்து அடித்துக் கொண்டது. இராணுவத்தில் சேர்ந்தால் போர் புரியவேண்டி வரும் என்பது அவளுக்குத் தெரிந்ததே. ஆனால் இப்படிச் சண்டை ஒன்று வரும் என்ற எண்ணம்தான் ஏற்படவில்லை. அவள் மகனும் கூடத்தான் சண்டை கிண்டை ஒன்றும் வராது என்று சொல்லியிருந்தானே! பாகிஸ்தான் பயமுறுத்தல் எப்பொழுதும் இருக்கத்தான் இருக்கும். ஆனால் சண்டை வந்து விடாது என்றுகூடச் சொன்னானே! 'அம்மா! இராணுவத்தில் சுகமான வாழ்வு. உணவு இலவசம், உடை இலவசம்! மாதா மாதம் கிடைக்கும் சம்பளத்தை அப்படியே மிச்சப்படுத்திவிடலாம் என்றெல்லாம் அளந்தானே! ஆனால் யாருக்குத் தெரியும், பாகிஸ்தான் இப்படித் திடுதிப்பென்று போர் தொடுத்துவிடும், போர்க்களத்துக்குப் போக வேண்டியிருக்கும் என்று!

போர்க் களத்துக்குப் போய் ஒரு மாதம் ஆகவில்லை; அவன் கொலையுண்டுவிட்டான். இரண்டு தனித் தனி முகாம்களில் அவன் வீராவேசத்தோடு போர் புரிந்தாலும், கடைசியில் மூன்றும் தடவையாக அவன் பிரிவைத் தாக்கியபோது தாக்குப் பிடிக்க முடியவில்லை. மூன்று குண்டுகள் அவன் மார்பைத் துளைத்தன. அப்படியே உருண்டு விட்டான். அந்தக் கணமே அவன் உயிர் பிரிந்துவிட்டது.

மகனின் சாவைப் பற்றித் தந்தி வரவே, ஜீவி படீர் படீரென்று தலையிலும் மார்பிலும் போட்டுக் கொண்டு அலறி அழுது தீர்த்து விட்டாள். தன் மகனைக் காலன் வாயில் கொண்டு தள்ளியது 'தான்தான்' என்று தன்னையே திட்டித் தீர்த்துக் கொண்டாள். உண்மையிலேயே அவள்தானே அவன் உயிருக்குச் சத்துரு! அவள்தானே அவனை இராணுவத்தில் சேர்க்க ஆசைப்பட்டாள்! தன் மகன் லெப்டினண்ட் ஆகவேண்டும், தான் லெப்டினெண்டுக்குத் தாயார் என்று பெயர் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டாளே! இப்படிக் கல் வீடு கட்ட அவள் ஆசைப்படப் போய் அவள் மகன் கல்லையல்லவா தூக்கிப் போட்டு விட்டான்! கூரையோ குச்சிலோ இருப்பது போதும் என்று எண்ணி வாழ்ந்திருக்க முடியாதா? இந்த வீட்டுக்கும் நிலத்துக்கும் வேண்டித் தன் இரத்தத்தையே இப்படிச் சிந்த வேண்டியிருக்கும் என்று யார் கண்டார்கள்?...

ஜீவி அழுகையை ஒய்த்துச் சற்று அமைதியுற்றதும், 'அவள் மகன் நாட்டுக்காகப் போரிட்டு வீர மரணம் அடைந்திருக்கிறான். அவள் ஒரு வீரனின் தாய். அசாத்திய ஆற்றலுடன் போராடி உயிர் துறந்த மாவீரனின் தாய். நம் ஊருக்கு மட்டும் அல்ல; நம் நாட்டுக்கே அவனால் பெருமை!' என்று எடுத்துக் கூறினார்கள்.

ஜீவியின் கண்ணீர் வறண்டு விட்டது. அல்லது ஒருவேளை தீர்ந்து விட்டதோ என்னவோ?

அதற்கு மூன்றும் நாள் ராஜ்ய மந்திரி அவ்வூருக்கு வந்தார். ஊரே அவரைச் சுற்றிக் கூடியது. அக்கம் பக்கத்துக் கிராமத்து மக்களும் கூட அங்கு வந்து கூடினர். அந்தச் சின்னஞ் சிறு ஊரில் ராஜ்ய மந்திரி வருவது என்பது சின்னஞ் சிறு விஷயம் அல்ல. அமைச்சர் முதலில் ஜீவியின் வீட்டுக்குச் சென்றார். அவளுக்கு ஆறுதல் கூறினார். வீரப் புதல்வனைப் பெற்றெடுத்து நாட்டுக்கு நல்கியதற்காக அவளை வாழ்த்தினார். மிகப் பெருமையுடன் வீரனின் தாய் என்று கூறி வீர வணக்கம் தெரிவித்தார். அப்பொழுது ஜீவிக்கு அழவேண்டும் போலவும் இருந்தது; அழக் கூடாது என்றும் தோன்றியது. அவளுக்கு என்ன செய்வது, ஏது செய்வது என்று விளங்கவில்லை. மகனை இழந்து அவள் இப்பெருமை அனைத்தையும் பெற்றிருந்தாள். பின்னர் சிறிது நேரம் பொறுத்து அவள் தன் கண்ணீரின் வழியே பார்த்தாள். தான் பழைய ஜீவி இல்லை என்று தோன்றியது. ஒரு புத்துணர்வு அவளுள் எழுந்தது. அவளுக்குத் தன் நிலையே மாறிவிட்டது போலத் தோன்றியது. மூன்று நாட்களுக்கு முன்புதான் அவள் மகனின் சாவுக்காக அந்தக் கிராமமே அவளோடு சேர்ந்து அழுதது. இன்று அவளுக்குத் தன் மகனின் சாவுக்காக இன்னும் எத்தனையோ பல கிராமங்கள் கண்ணீர் சிந்துகின்றன என்னும் உண்மை தெரிய வந்தது. அமைச்சரின் விழிகளில் கூட அல்லவா கண்ணீர் குளமிட்டிருந்தது!

நாடு முழுதும் அவள் மகனை எண்ணிப் பெருமை கொள்ளுகிறது. அவ்வீரனைப் பெற்றெடுத்த தாயாரையும் வாழ்த்தி வணங்குகிறது! அவனைக் கண்டு எத்தனையோ அன்னைகள் ஊக்கம் பெறுவார்கள். அவள் மகனின் வீரத்தைப் பாடி மகிழ்வார்கள் என்று அமைச்சர் சொன்னார்.

ஜீவியின் விழிகளில் கண்ணீர் திரையிட்டது. அவள் எதிரே மங்கல் அடித்தது. ஆனால் ஜீவி தனக்கு மங்காத இரு கண்கள் இருப்பது போலவும் எல்லாவற்றையும் தெளிவாகக் கண்கூடாகக் கண்டு உணர்வது போலவும் மெய் விதிர்த்தாள்.

அவளைக் கண்டு வணக்கம், வாழ்த்துத் தெரிவித்த பின் அமைச்சர் அந்த ஊரில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுவதற்கு ஏற்

பாடாகி யிருந்தது. அக்கம் பக்கத்துக் கிராமத்து மக்களும் அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். எல்லோரும் தனக்காகவே வந்திருப்பதாக ஜீவிக்குப் பட்டது. அவள் மகனின் சாவுக்கு வருத்தம் தெரிவிக்க, வீரனைப் பெற்ற அன்னைக்கு வணக்கம் தெரிவிக்க அவர்கள் கூடியிருப்பதாக உணர்ந்தாள்.

அமைச்சர் சொற்பெருக்கு ஆற்றத் தொடங்கினார்.

ஜீவி அமைச்சருக்கு அருகில் அமர்ந்திருந்தாள். நூற்றுக்கணக்கான கண்கள் தன்னையே பார்ப்பது போல் தோன்றியது அவளுக்கு. அது வியப்பை அளித்தது அவளுக்கு. உள்ளத்திலே துயரம் கட்டியிருந்தது. உடலிலே ஒரு பதைப்பு உதைத்துக் கொண்டிருந்தது. அவளுக்கு அங்கே அமர்ந்திருப்பது என்னவோ போல் இருந்தது. சொல்ல முடியாது வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். எத்தனை பேர் எதிரே உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் அவள் மகன் இல்லையே! நூற்றுக்கணக்கான கண்கள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தன. ஆனால் அவற்றில் தன் மகனின் இரு கண்களைக் காணோம். இன்று அவன் இங்கிருந்தால் எத்தனை மகிழ்ச்சி அடைவான்?

அந்த நேரத்தில் அவள் மனத்தில் ஆறாத்துயரம் பீறிக் கொண்டு வந்தது. அடித்துப் புரண்டு அழுதால் என்ன என்றே நினைத்தாள். நல்ல வேளையாகச் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்டாள். இன்று அவள் மகன் இங்கு இருந்திருந்தால், இவையெல்லாம் நடைபெற்றிருக்குமா? இவையெல்லாம் நடைபெறுவதே அவள் மகன் இல்லாததால் தானே? அவன் ஒருவன் இல்லை. அதனால் தான் இன்று இத்தனை முகங்களை இங்கே ஒன்றாகக் காண முடிகிறது! இத்தனை விழிகள் அவளையே பார்த்துக் கொண்டிருக்கின்றன! அந்தக் கண்கள் அனைத்தும் தன் மகனின் கண்களாகவே ஜீவிக்குத் தோன்றின.

"நாட்டுக்கு இத்தகைய அன்னைமார்களும், இத்தகைய வீரப் புதல்வர்களும் தேவை. இத்தகைய அன்னைமார்களும் புதல்வர்களும் இருக்கும்வரையில் நம் நாட்டை எந்தப் பகைவராலும் பிடிக்க முடியாது..."

தமது சொற்பொழிவின் முடிவில் அமைச்சர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்:

"இந்த இக்கட்டான நிலையில் உங்களால் இயன்ற உதவியை நாட்டுக்குப் புரியுங்கள். எத்தகைய உதவி செய்ய முடிந்தாலும் செய்யுங்கள். நாட்டுக்கு உதவுவது நமக்கு நாமே உதவிக் கொள்வதாகும்."


மக்களிடம் உற்சாகம் பீறிக்கொண்டு எழுந்தது. அமைச்சரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து அப்போதே அவரவரும் தங்களால் இயன்றதைத் தரச் சித்தமாயினர்.

ஜீவி வியப்புடன் இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இப்பொழுது அவள் மனத்தில் மகனின் மரணத் துயரோடு ஒரு பெருமையும் உறவாடியது. எல்லோரும் தான் இறக்கிறார்கள். ஆனால் யாரும் இவனைப் போல் இறக்கவில்லை என்று தோன்றியது அவளுக்கு. இவனைப் போல் என்றால் அவள் மகனைப் போல்! ஒரு மகனை இழந்தாலும் இழந்தாள்! எத்தனை பெற்று விட்டாள்! ஆம், எத்தனை பெறற்கரிய பெயரைப் பெற்றுவிட்டாள் அவள்!

அவள் தன் மகன் மீது என்னென்னவெல்லாம் நம்பிக்கை வைத்திருந்தாள்! அவள் வைத்த நம்பிக்கை அத்தனையும் நிறைவேறி விட்டது! கல் கட்டடம் கட்டியாகிவிட்டது! நிலபுலன் வாங்கியாகி விட்டது! கஷ்டங்களை மறந்து நல்ல நாட்களையும் கண்டாகிவிட்டது. இன்னும் என்ன என்னமோ கண்டு மகிழ்ந்து விட்டாள் அவள்!



ஆனால் இன்று நடைபெறுகிறதே, இதை அவள் எதிர்பார்த்திருந்தாளா? இல்லை; இல்லவே இல்லை! ஒரு மகனை இழந்து அவள் எத்தனை பேர்களைத் தன் மக்களாகப் பெற்றுவிட்டாள்! இவர்களில் எத்தனை இளைஞர்கள்



அதைக் கேட்ட ஜீவி மெய் சிலிர்த்தாள். தன் மகன் மரிக்கவில்லை என்று அவளுக்குத் தோன்றியது.

மக்கள் இன்னும் பணம் — காசு, நகை— நட்டு, துணி — மணி என்று வழங்கிக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது ஜீவி எழுந்தாள். அமைச்சர் அருகில் சென்று "நானும் ஏதாவது தர விரும்புகிறேன்!" என்றாள்.

"இனியும் நீ என்ன கொடுப்பாய்?" அமைச்சர் கண்களில் நீர் திரை யிடக் கேட்டார்: "நீதான் அனைத்தையுமே கொடுத்து விட்டாயே!"

"ஆம், அனைத்தையும் கொடுத்து விட்டேன். இருந்தாலும் இன்னும் கொஞ்சம் மிருந்திருக்கிறது!" என்றாள் ஜீவி.

"என்ன?" அமைச்சர் கேட்டார்.

"என் வீடு, இரண்டு வயல்கள், ஒரு எருமை, கொஞ்சம் ரொக்கப் பணம்..."

"இவை எல்லாவற்றையும் கொடுத்து விட்டால் நீ வாழ்வது எப்படி?"

ஜீவி கண்களில் நீர் குளம் கட்டப் பனிச்சென்று இலேசாகச் சிரித்தாள். "அதோ, பாருங்கள்!" எதிரே உட்கார்ந்திருந்த இளைஞனைச் சுட்டிக் காட்டினாள்: "என் மகன் உட்கார்ந்திருக்கிறான். இப்பொழுதுதானே உங்களிடம் வந்து நான் அவனுடைய அன்னை என்று சொன்னான். அதனால் என்னை அவன் பார்த்துக் கொள்ளுவான். அதோடு, எனக்கு இன்னும் கைகால்கள் நன்றாக இருக்கின்றன. என் பாட்டை நானே பார்த்துக் கொள்ளுவேன். பிறர் உதவி — மகனாகவே இருந்தாலும் எனக்கு எதற்குத் தேவை? பல வருஷங்களுக்கு முன்பு நான் இப்படித்தானே வாழ்க்கையை நடத்தி யிருக்கிறேன். இன்றைக்கும் அப்படியே நடத்த முடியும். மீண்டும் என் வாழ்க்கையைப் புதிதாகத் தொடர எனக்குத் தெம்பு இருக்கிறது. கவலைப்படாதீர்கள்!" என்றாள்.

அவனுடைய புதல்வர்களாகவே ஆகி விட்டார்கள்! அதோ எதிரே உட்கார்ந்திருக்கிறானே, அந்த இளைஞன் கூட உண்மையில் அவள் மகனாகி விட்டான்! ஜீவி தனக்கு எதிரே உட்கார்ந்திருந்த சிவப்புத் தலைப்பாகை கட்டிய ஓர் இளைஞனைப் பார்க்கலானாள். அவன் சிறிது நேரம் முன்பு அமைச்சரின் அருகில் வந்தான். 'ஜீவியம்மா தனக்கு மகன் இல்லையே என்று எண்ண வேண்டாம். இன்று முதல் என்னையே தன் மகனாகக் கொள்ளட்டும்! நான் அவளுக்கு மகனுக்கு மகனாக இருந்து பணியாற்றுவேன். என் வீட்டில் வந்து அவள் என் அன்னையாக இருக்கட்டும். எவ்விதக் கஷ்டமும் ஏற்படாமல் அவளை நான் கவனித்துக் கொள்வேன். மகன் இல்லாக் குறையை ஒரு கண நேரமும் உணர விட வேமாட்டேன்!' என்றான்.

தமிழாக்கம்: ரா. வீ.

மகாதேவியைச் சந்தித்தேன்!



ஸ்ரீமதி மகாதேவி வர்மா இந்நாளைய ஹிந்திக் கவிஞர்களுள் தலைமையிடம் வகிப்பவர். அறுபத்துநான்கு வயது நிரம்பிய இவரது தாய்மொழி அவதி. பிரயாகைப் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர். ரிக் வேதத்தில் ஆராய்ச்சி செய்திருக்கிறார். அடுத்து பிரயாகைப் பெண்கள் கல்லூரியில் முதல்வராகவும் பணி புரிந்துள்ளார். தற்போது அவர் அந்த நிறுவனத்தின் துணை வேந்தர்.

ஏழாவது வயதிலேயே ஸ்ரீமதி வர்மாவின் உள்ளத்தில் கவிதைத் தீ கனன்றது. நிஹார் என்ற கவிதையை அவர் எழுதியபோது அவர் ஏழாம் வகுப்பு மாணவி. நீரஜ், ரஷ்மி ஆகியவை இவருடைய பின்னுளைப் படைப்புக்கள். நிலவு (சாந்த்) என்ற மாதப் பத்திரிகை வெகுகாலம் இவருடைய ஆசிரியப் பொறுப்பில் நடைபெற்றது. 'தீபசிகா', 'மாயா', 'ஹிமாலயம்' ஆகிய கவிதைத் தொகுப்புக்களையும் இவர் வெளியிட்டிருக்கிறார்.

அன்னை வர்மாவுக்கு இசையிலும் ஓவியத்திலும் தீவிரமான ஈடுபாடு உண்டு. பாவம் நிறைந்த ஓவியங்களுடன் வெளிவந்த இவரது 'நினைவின் கோடுகள்', 'வழித் துணை' ஆகிய நூல்கள் ஹிந்தி மொழியில் புதிய முயற்சி. நாட்டுப் பாடல்களிலும் மிகுந்த ஈர்ப்பு உள்ளவர். அவைகளுக்கு இசை அமைத்து ஸ்வரப்படுத்தியிருக்கிறார். கட்டுரைத் தொகுதிகளும் வெளியிட்டுள்ளார்.

கவிதைகளில் கருணைரசம், விரக தாபம், வேதனை ஆகியவைகளை விரவுவதில் நிகரற்றவர். கவிஞர் துவேதிக்குப்பின் சாயாவாத (நிழல் மரபு)த் துறையிலும், அதன் முதிர்ச்சியான ரகசிய வாதத்திலும் இவர் முழுமையைக் கண்டவர். (தமிழ்க் கவிதைத் துறையில் இந்த மரபுப் பெயர்கள் புதியவை.)

கவிஞர் பிராட்டி ஒரு காந்தியவாதி. தூய வெள்ளைக் கதராடைதான் தரிக்கிறார். இந்திய ஒருமைப்பாட்டில் எல்லையற்ற நம்பிக்கை உடையவர். சாகித்திய அகாதமியின் ஸ்தாபன உறுப்பினர். பிறமொழி அன்பர்களிடம் பெருமதிப்புக் கொண்டவர். அன்று காலை எட்டு மணி அளவில் நான் அவரைச் சந்திப்பதாக இருந்தது. அதற்கு முன்பு இரண்டு தடவை என் வருகை குறித்து விசாரித்து விட்டார்.

அலகாபாத்தில் அசோக நகரில் வசிக்கிறார். இயற்கையின் சூழலில் பல வகைவிலங்குகளையும் பறவைகளையும் வளர்க்கிறார். அவருக்குக் குழந்தைகள் கிடையாது. ஒரே ஒரு வளர்ப்பு மகன் மட்டும் உண்டு.

அந்த வாரம்தான் அவர் பத்ரிநாத் யாத்திரை முடிந்து வந்திருந்தார். அவரது உள்ளத்தில் பனி மூடிய சிகரங்களின் தோற்றம் திரும்பத் திரும்பக் காட்சி தந்து கொண்டிருந்தது. தென்னாட்டைச் சேர்ந்தவர் அங்கு அர்ச்சகராக நியமனம் செய்யப்பட்டிருப்பது, ஒரே நீர்க் குளத்தில் மக்கள் இனமொழி பேதங்களை மறந்து மூழ்குவது, ஒரே தியின் சுவாலையால் அட்டிக்கப்பட்ட அன்னத்தைப் பரவசத்துடன் பகிர்ந்து கொண்டது, ஆகாயத்தில் இறைவனின் நாமம் நிரம்பி நின்றது ஆகியவை அவருக்குச் சதா காட்சி அளித்துக் கொண்டிருந்தன. உரையாடலின் இடையே அவர் அங்கே சுவைத்த காட்சிகளைப் பல முறை அசை போட்டார்.

தொடக்க அறிமுகத்துக்குப் பிறகு நான் அவரைச் சில கேள்விகள் கேட்க விழைந்தேன். பேசும்போது குறிப்பெடுத்துக்கொள்

பூச்சியைக் கொல்லப் பூண்டு!

உணவுப் பயிர்களுக்கு என்றுமே பூச்சிகள் எமனாக இருந்து வந்திருக்கின்றன. அவைகளை அழிக்க விஞ்ஞானிகள் எத்தனையோ பூச்சிக் கொல்லிகளைக் கண்டுபிடித்து விவசாயிகளுக்கு உதவியிருக்கின்றனர். ஆனால் பம்பாய், அணு ஆராய்ச்சி நிலையத்திலுள்ள இந்திய விஞ்ஞானிகள் இருவர் நூதனமான பூச்சிக் கொல்லிகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர். மக்கள் சர்வசாதாரணமாக உணவு வகைகளில் உபயோகிக்கும் வெள்ளைப் பூண்டிலிருந்து அவை தயாரிக்கப்பட்டிருக்கின்றன. மேற்படி ரசாயனப் பொருள்களைச் செயற்கையாகவும் தயாரிக்க வழி கண்டுபிடித்திருக்கின்றனர். அவை, ''டயலில் டைஸல்பீடைடு'' ''டயலில் ட்ரை ஸல்பீடைடு'' என்பவையாகும். ''இம்மருந்துகளின் சக்தி மிகவும் திருப்தியளிப்பதாயுள்ளது'' என்கிறார் டாக்டர் சங்கர் வாசுதேவ் அமங்கர். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் அமங்கர் இந்த ஆராய்ச்சியை அசோக் பானர்ஜியின் ஒத்துழைப்புடன் தொடங்கினார்.

மற்ற பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கும் இதற்கும் முக்கியமான வித்தியாசம் என்னவெனில் வெள்ளைப் பூண்டுத் தைலம் விலங்கினங்களுக்கு நஞ்சாகாது. ஆகவே, இதைத் தைரியமாகப் பயிர்ப் பச்சைகளைப் பாதுகாக்க உபயோகிக்கலாம்.

ஆதாரம்: ''ஸயன்ஸ் டுடே'' தகவல்: விஜயம்

ளக் கூடாது என்ற நிபந்தனையுடன் அவர் மறுமொழி கூற இசைந்தார்! எங்களிடையே உரையாடல் ஹிந்தியிலேயே நிகழ்ந்தது. அவர் உதிர்த்த கருத்துக்களுக்கு இடையே ஒலித்த கிண்கிணிச் சிரிப்பை மட்டும் என்னால் இங்கு மொழிபெயர்க்க முடியவில்லை.

'ஹிந்திக் கவிதைகளில் சாயாவாதம், (நிழல் மரபு) ரகசியவாதம் ஆகியவை குறித்துப் பல கூறக் கேட்டிருக்கிறேன். அந்த மரபுகளைக் கடைப்பிடித்தவரும், உண்டாக்கியவருமான உங்களிடமிருந்தே அவை குறித்து அறிய விரும்புகிறேன்.'

அன்னையின் கண்களில் ஒரு மின்னல். அனுபவத்தின் கோடுகள் நிறைந்த முகத்தில் ஒரு தெளிவு. ஓவியத்தில் விவரிக்கப்படும் முத்திரைகளைப் போல் அவரது கைகள் உயர்கின்றன. சொற்களில் ஒரு வகைக் கனம் மிகுந்து நிற்கிறது. 'கவிதை என்பது வெறும் நிகழ்ச்சிகளின் தொகுப்பல்ல. இடைநாட்களில் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருந்தார்கள். இந்தத் துறையில் அண்மையில் எங்களுக்கு முன்னோடியாக விளங்கியவர் ஸ்ரீதர் பாடக். நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியில் நிற்கும் இயற்கையின் சூழலில் அதற்கு ஆதாரமான கருப்பொருளைக் கவிதையில் விவரிப்பது சாயாவாதம். (நிழல் மரபு). நான் இன்னும் ஒரு படி முன்னேற விரும்பினேன். இந்த இயற்கைப் படைப்பு நிரந்தரமானது என்றாலும் கணத்துக்குக் கணம் மாறுதலுக்கும் உட்படுவது. கடல் அலைகள், பனிபடர் மலைத் தொடர், நீரோடை அனைத்தும் இதற்கு உதாரணம். இவையனைத்திலும் தன்னையே — விராட சொரூபத்தையே காண விழைந்து அந்தத் தாபத்தை வெளியிட முயல்வது ரகசிய வாதம்' — விஷயம் கனமானது. என்றாலும், அவர் விளக்கும் முறையினால் சிறிது தெளிவு பெறுகிறது. நான் சற்றுத் துணிவு கொள்கிறேன்.

'பாணபட்டரின் காதம்பரியிலோ, பவபூதியின் உத்தர ராமசரித்திரத்திலோ இல்லாத எந்தத் தத்துவத்தை இந்த நிழல் மரபு வாதிகள் புதிதாகச் சொல்லி விட்டார்கள்?'

கவிஞர் பிராட்டியின் கிண்கிணிச் சிரிப்பு. 'நீங்கள் இன்னும் பல படிகள் பின்னால் போகலாம். ரிக் வேதத்தில் இல்லாத எந்தக் கருத்தை இந்தப் பிற்காலக் கவிஞர்கள் கூறினார்கள்? அந்த முனிவர்கள் தொட்ட எல்லையின் விளிம்பைக்கூட இவர்களால் அணுக இயலவில்லை. கவிஞனுக்குத் 'தர்ஷக்' (பார்ப்பவன்) என்று ஒரு பெயர் உண்டு. முனிவர்கள் கண்ட காட்சிகள் பரம சத்தியங்கள். அவர்களுக்கு அவற்றைக் காண உறுதுணையாக நின்றது பிரகிருதி — இயற்கை. அதன் தலைவனை புருஷனை வேதங்கள் வழிபடுகின்றன.'

'நீங்கள் இயற்றும் இந்தக் கவிதைகள் பாமரனுக்குப் புரிகிறதா?'

'இது என்ன கேள்வி? நான் அவனுக்காகத்தான் எழுதுகிறேன்.' அவருடைய தன்னம்பிக்கை என்னைப் பிரமிக்க வைக்கிறது. 'இந்தத் தத்துவம் இந்தியனின் பரம்பரைச் சொத்து. அதை அறிந்துகொள்ள அவனுக்கு எழுத்தறிவுகூடத் தேவையில்லை. வழி வழியாக அவனுடைய செவிகளில் இந்தச் செய்தி ஓதப்பட்டிருக்கிறது. வடநாட்டுக் கபீரும் தென்னாட்டு வேமன்னாவும் இவற்றையே தங்கள் மக்கள் பேசும் மொழியில் கூறினார்கள்.' இதை வலியுறுத்தும் போது அவர் சிறிது உணர்ச்சி வசப்பட்டு விட்டார். 'இன்றைய நவீன சித்தாந்தங்கள் மனிதனைப் பூஜ்யமாக்க முயலுகின்றன. நம்மைப் பொறுத்த வரையில் அவன்தான் தொடக்கம். எல்லையற்ற பேரருளின் துணுக்கு அவன். எந்தக் கொள்கை அந்தத் தனிமனிதனின் சுதந்திரத்தைப் பறிக்கிறதோ, அவனுடைய பரநலத்துக்கு ஊறு விளைவிக்கிறதோ அது இந்திய மரபுக்கு ஏற்றதே இல்லை.'

அடுத்த கேள்வியைத் தொடங்கும் முன்பு சிற்றுண்டியும் தேநீரும் வந்தன. என்னால் எதையும் உண்ண இயலவில்லை. 'இந்த வெற்றிலையையாவது போட்டுக் கொள்ளுங்கள். இது உத்தரப் பிரதேசத்தின் சிறப்புப் பொருள்' என்று அவர் வலியுறுத்தினார். 'எங்கள் காவிரி வெற்றிலையை நீங்கள் சுவைத்ததில்லையே!' என்று அவரை வேடிக்கையாகக் கேட்டேன்.

'உங்கள் விருந்தோம்பலைப் பூரணமாக அனுபவித்திருக்கிறேன். தமிழ்நாடு ஹிந்தி மொழிக்கு எதிரி என்று சொல்லுகிறார்கள். அங்கேதான் எனக்குப் பெரிய வரவேற்புக் கிடைத்தது. ஒரு கவியைப் பாராட்ட அத்தனை மக்கள் இந்தியாவில் எங்குமே குழுமியதில்லை. என் மேல் அன்பைப் பொழிந்தார்கள். அமைச்சர்களும் அந்தக் கூட்டத்துக்கு வந்தார்கள். அவர்களது எளிமை

என்னைப் பரவசப்படுத்திற்று. அவர்கள் அமைச்சர்கள் என்பது கூட்டம் முடிந்த பின்பு அறிமுகப்படுத்திய பிறகுதான் எனக்குத் தெரிந்தது. பாரதத்தின் உண்மையான கலாசாரம் தென்னாட்டில்தான் தங்கியிருக்கிறது. வடநாடு ஒரு நாற்சந்தி. நேரில் கண்ட பிறகுதான் இதை உணர முடிந்தது.'

'ஸ்ரீ ஸ்ரீ பிரகாசாவும் இதைத்தான் சொன்னார்.'

'அவர் உங்கள் ஊரில் பல காலம் தங்கியிருந்தார். அதனால்தான் அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடிந்தது. உங்கள் நாட்டில் ஒரு டாக்டரோ எஞ்சினீயரோ தினமும் தமது பணியைத் தொடங்குமுன் சமய அநுஷ்டானங்களை முடித்துக் கொள்கிறார். தமது சமய ஆசாரங்களைப் பற்றிய அறிவு அவருக்கு இருக்கிறது. இங்கே ஒரு பேராசிரியர் வெறுங் காலுடன் பிரயாகைக்குச் சென்றாரானால் அவரைப் பரிகசிக்க ஒரு கூட்டம் பின்தொடரும்' என்றார்.

உரையாடலைப் பழைய பாதையில் திருப்பினேன்.

'எனது பல்லாண்டு எழுத்து அனுபவத்தில் ஒன்றை உணர்ந்திருக்கிறேன். என் எழுத்துக்களைப் பெண்கள் தாம் அதிகம் ரசிக்கிறார்கள், பாராட்டுகிறார்கள். உங்களுடைய அனுபவம் என்ன? என் கூற்று உண்மையானால் அதற்கு என்ன காரணம்?'

பிராட்டி நடைமுறை உலகத்துக்கு வந்தார். மேஜையின் மேலிருந்த பூக்கிண்ணத்திலிருந்து மலர் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டார். அதிலே ஓர் ஒளிய அழகு இருந்தது. 'இந்த மலரின் மென்மை, நிறம், அது விளைவிக்கும் கிளர்ச்சி ஆகியவை உள்ளத்தைப் பற்றுபவை. அதன் காம்பு, இதழ், மகரந்தப் பை, தூள், பிறப்பு, முதிர்ச்சி, விலை, பயன் ஆகியவை குறித்து விளக்கினால் அவை அறிவைப் பற்றுபவை. மாதர்களின் வாழ்வு பெரும்பாலும் உள்ளத்தைச் சார்ந்தது. பெண்களின் உள்ளத்தைக் கவரும் தந்திரம் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது...' அவர் கிண்கிணிச் சிரிப்பை உதிர்க்கிறார். அது என்னையும் பீடிக்கிறது. தொடர்ந்து அவருடைய முகத் தோற்றத்தில் ஒரு கிளர்ச்சி. 'இன்றைய சமுதாயத்தில் நமது அடிப்படைப் பண்புகள் பெண்களிடம்தான் உள்ளன. அவர்கள்தான் அவற்றின் காவலர்கள். ஒருவேளை நீங்கள் அந்தக் கொள்கைகளையே உங்கள் எழுத்தில் வலியுறுத்துகிறீர்களோ ?'

'அது ஒரு வியாபார தந்திரம் அன்னையே!' இப்போது இருவரும் சிரிக்கிறோம்.

'தமிழ்க் கவிதை உலகில் ஒரு புதிய கட்சி. மரபை மீறிய கவிதைகள் பரவ வேண்டும் என்று பலர் கூறுகிறார்கள். ஹிந்தி மொழியிலும் இவ்வாறு கவிதை இயற்றுகிறார்கள். இது குறித்து உங்கள் கருத்தை அறியலாமா ?'

'மொழி என்பது கருத்தைச் சுமந்து செல்லும் ஒரு வண்டி. அதற்குப் பாதுகாப்பளிக்கும் பொருட்டு இலக்கணம் ஏற்பட்டது. மரபை மீறினால்தான் கருத்துக்களைப் புரியும்

வரிக்கு வரி சிரி!



முதல் வகுப்பு டிக்கெட் கௌண்டரில் ஒருவர் கேட்டார்: "சார், முதல் வகுப்பில் 'ஸிட்டிங்'கில் இல்லிக்கு டிக்கெட் கொடுங்கள்."

ரயில்வே சிப்பந்தி விழித்தார். "ஸிட்டிங் மட்டுமா, படுத்துக் கொள்ள 'பெர்த்' வேண்டாம்? "

"வேண்டாம், டிக்கெட் பணத்தை நினைத்தால் யாருக்குத் தூக்கம் வருகிறது ?"

★



"டேய், சிகரெட் குடித்தால் 'கான்ஸர்' வரும் என்று தானே டாக்டர் சொன்னார்?"

"ஆமாம்."

"விலையைக் கேட்டால் 'ஹார்ட் அட்டாக்'கே வரும் போலிருக்கிறதே !"

★



"என்ன ஸார் இது, வரியை இப்படி ஏற்றி விட்டார்களே?"

"வசதியாக வாழ அது தான் வழி."

"யார் வசதியாக வாழ ?"

"வரி விதித்தவர்கள் !"

★



"என்னங்க இது, இத்தனை விலை கொடுத்து வாங்கியும் மண்ணெண்ணெய் எரிய மாட்டேனென்கிறதே!"

"வயிறு எரிகிறதல்லவா ? அது போதும் !"

★




மந்திரி: இந்த முறை வரியைப் பற்றிப் புலம்புபவர்கள் இரண்டே சாரார்தான் !

மனைவி: அப்படியா? யார் அவர்கள் ?

மந்திரி: ஆண்களும், பெண்களும்....!

★



மந்திரியின் மகன்: அப்பா, டீச்சர் காப்பி எழுதிண்டு வரச் சொல்லியிருக்காங்க நீங்க ரொம்ப நல்லா வரி போடறீங்களாம். இந்த நோட்டிலே கொஞ்சம் போட்டுத் தாங்களேன் !

-முரளி



காதலன்: கண்ணே! நாம் யாருக்கும் தெரியாமல் ரிஜிஸ்தர் மேரேஜ் பண்ணிக்கலாம்.
காதலி: அதெப்படி, ரிஜிஸ்திரார் ஆபீஸ் அதிகாரியே என் அப்பாதானே!

- சுந்தரவேலன்

படி சொல்ல முடியும் என்றால் அதில் தவறு ஏதுமில்லை. ஆனால் அதற்கு உரைகல் ஏது? கருத்தைச் சரிவர வண்டியில் ஏற்றியிருக்கிறோமா என்பதுதான்.'

அடுத்ததாக நான் கேட்டது மொழியைப் பற்றியது.

'ஹிந்தியைப் பரப்புவதில் ஒரு காலத்தில் தமிழ் நாடு முன்னணியில் நின்றது. இன்று அந்தப் பிரச்னை ஓர் அரசாங்கத்தையே கவிழ்த்துவிட்டது. அதற்குத் தாங்கள் கூறும் காரணம்?'

'பிரிவினைச் சக்தி. அழுக்கு அரசியல். இன்று இந்தியன் பெரிய சுயநலமி ஆகிவிட்டான். ஹிந்தி மொழியையே எடுத்துக் கொள்ளுங்கள். மைதிலி தனி மொழி ஆகிவிட்டது. ராஜஸ்தானி, அவதி, பிஹாரி, போஜ்புரி, ப்ரஜ் என்று மேலும் மேலும் அதைத் துண்டாட விரும்புகிறார்கள். இந்த வியாதி தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, எல்லா மாநிலத்திலும் பரவிவிட்டது. வெள்ளையர்கள் இருந்த வரை நமது ஆற்றல் ஒருமுகப்பட்டுக் கொண்டிருந்தது — அவர்களை வெளியேற்ற. ஆனால் இன்று நம்மிடையே காந்தியடிகளைப் போன்ற ஒரு வலிமை மிக்க மகான் தோன்றவில்லை.'

'அதை நீக்க என்ன வழி?'

'நீங்களும் நானும் இன்று ஒன்றுகூடி விவாதிப்பது போல் இந்தப் பிரச்னை குறித்துப் பேசவும் எழுதவும் வேண்டும். இந்த நற்பணியை இந்த ஊரிலேயே தொடங்குவோம். தெலுங்கு, மலையாளம் ஆகியவை பேசும் அறிவாளிகள் இந்த ஊரில் இருந்தால் அவர்களையும் இங்கு அழைத்து வாருங்கள். அனைவரும் நமது கருத்துக்களை எழுதிப் படிப்போம். அவைகளை அச்சிட்டுப் பரப்புவோம். பங்களா தேஷ் உதாரணம் நமக்குக் கண் திறப்பாக அமைய வேண்டும். நமது சிந்தனை, செயல் அனைத்தும் ஒருமைப்பாட்டுத் துறையில் இயங்க வேண்டும்.'

'கடைசியாக ஒன்று. வடநாட்டினர்கள், தென்மொழி, கலை ஆகியவை குறித்துச் சிரத்தைகொள்ளுவதாகத் தெரியவில்லையே. 'இந்தியாவைக் கண்டுபிடித்த' நேரு தமது நூலில் எங்கள் திருக்குறளைப் பற்றி ஒரு வரிகூட எழுதவில்லை என்பதை அறிவீர்களா?'


மறுபடியும் சிரிக்கிறார் வர்மா. 'நேருவுக்கு இந்தியைப் பற்றியே தெரியாதே. அவர் தமிழின் பெருமையை எங்ஙனம் உணரக் கூடும்? அவருக்கு இந்த நாட்டைக் கண்டுபிடிக்க வேண்டிய (Discover) அவசியம் இருந்தது. நமக்கு அது வேண்டாம். ஏனென்றால் முழுக்க முழுக்க நாம் இந்தியர்கள். நாம் நமது பரம்பரையை மறக்காமல் இருந்தால் போதும். ஒரு வேடிக்கையான நிகழ்ச்சியைக் கேளுங்கள். சில நாட்களுக்கு முன்பு ஒரு கவி சம்மேளனத்துக்கு அமைச்சர் ஒருவர் தலைமை வகித்தார். கடைசியில் என்னுடன் பேசிக் கொண்டிருந்த போது, 'கவிஞர் நிராலாவையும் இங்கு அழைத்திருக்க வேண்டும், அவரை ஏன் கூப்பிடவில்லை' என்று கேட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நிராலாஜீ மறைந்து அவருடைய சிலையைக்கூட நாற்சந்தியில் நிறுவியிருக்கிறோம். அமைச்சருக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் விழித்தேன்'... கவிஞர் நிராலாவைப் பற்றிப் பேசும்போது அன்னையின் கண்கள் பனித்தன. 'அவர் எனக்கு உடன்பிறப்பைப்போல. ரக்ஷாபந்தனத்தன்று அவருடைய கையில் ராக்கி அணிவிப்பேன். எனக்கு அன்பளிப்பாக ஏதும் தருவதற்குக்கூட அவரிடம் காசு இராது. ஒரு ரூபாய் கடன் கொடேன் என்று கேட்டு வாங்கி அதை மலரில் பொதிந்து என்னிடம் தருவார். அவருடைய மனைவி நோய் வாய்ப்பட்ட போது மருந்து வாங்குவதற்குக் கூட அவரிடம் வசதி இல்லை. சிகிச்சைக்கு வசதியில்லாமலே அவளைப் பலி கொடுக்க நேரிட்டது. கவிஞர்கள் இறந்த பிறகுதான் இந்த நாட்டில் அவர்களுக்குக் கௌரவம் கிடைக்கும்.' சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்த பிறகு அவர் தொடர்ந்து பேசினார்... 'எனக்கு அரசியல்வாதிகளிடம் நம்பிக்கையே போய்விட்டது. அவர்களுடைய இன்றைய கவலை, எதையாவது செய்து தங்கள் நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ளுவதுதான். கவர்னர்களும் அமைச்சர்களும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதையே இப்போது நான் நிறுத்திவிட்டேன். இந்த நாட்டின் வழி வழிச் செல்வத்தை நம்மைப் போன்றவர்கள்தாம் தழைக்கச் செய்ய வேண்டும். அதன் மூலம்தான் நன்மை பிறக்கக்கூடும்.'

* * *

தாம்பூலம் பெற்று அவரை வணங்கி விடைபெற்றுக் கொள்கிறேன். அவர் வாசல் வரை வந்து வழி அனுப்புகிறார். இன்னும் நெடுநாளைக்கு மனத்தில் எதிரொலிக்கும், அவருடைய கிண்கிணிச் சிரிப்பு.

— இ. சா. ராஜு

கோடை அசதியை நொடிப் பொழுதில் விரட்டுவது க்ளாக்ஸோஸ்-D®



அருந்துவீர் க்ளாக்ஸோஸ்-D.
அருந்துவதற்கினிய வழிகள் பல.

கோடைச் சூடு ஏற ஏற, வாடிச் சோர்ந்து விடுகிறீர்கள் விரைவிலே. தென்பு போன இடமே தெரிவதில்லை.

எடுத்திடுவீர் குளுமையூட்டும் க்ளாக்ஸோஸ்-D. இனிதே கலந்திடுவீர் ஒரு தம்ளரிலே இரண்டு ஸ்பூன்கள்.

அருந்தும்போதே, அடடா, புதுத் தென்பு துடித்தெழ வைக்குது க்ளாக்ஸோஸ்-D, நொடிப் பொழுதிலே.

அதுவன்றோ உச்சிகுளிரும் உணர்வு.



குடிநீரிலே | நேரடியாக வாயிலே | எலுமிச்சம் சாற்றிலே | காப்பியிலோ, தேநீரிலோ

இலவசம்!


ரூ. 1.25 பெறுமானமுள்ள

3-தம்ளர் அடுக்கு செட்:

ஒவ்வொரு 700 கிராம் **க்ளாக்ஸோஸ்-D®** டப்பாவுடனும் கிடைக்கும்.

முந்துங்கள்! சரக்குகள் இருப்பிலுள்ள வரையே சலுகை!





ஊக்க சக்தி உடனடி: அதற்கே
க்ளாக்ஸோஸ்-D®

dCP/GL/27 tam

அம்மா

ரா. கணபதி



27. தாரகேசன் உபதேசம்!

''உன் மனைவி என்பது யார்? உன் பிள்ளை என்பது யார்? நீ யார்? எங்கிருந்து வந்தாய்? சம்சாரம் என்பது வெகு விசித்திரம். சோதரா, இந்த உண்மைகளை உள்ளிப் பார்ப்பாயாக.''

— ஆதி சங்கரரின் 'பஜகோவிந்தம்.'

திரிகால ஞானியான ராமகிருஷ்ணர் தமது முடிவுக்கு இன்னொரு சூசகம் தெரிவித்தார். ''எப்போ பக்தான் ஸ்வாமிக்குச் செய்யற மாதிரி இதுக்கு (தம் சரீரத்தைத் தொட்டு) பூஜை பண்ணுறாளோ அப்போ இதனுடைய மரணம் நெருங்கி வந்துடுத்துன்னு அர்த்தம்'' என்றார்.

சாரதையின் முகத்தில் கலவரம் பரவியது. ஏதும் பேசாமலே அகன்றாள்.

மறு நாள் அவள் நஹவத் மூலையில் உள்ள தெய்வத் திருஉருவப் படங்களுக்குப் பூஜை புரிகையில், மாடிப் படிக்குக் கீழேயிருந்து நிவேதனம் எடுத்து வரப் போன போது நஹவத்துக்குள் ராமகிருஷ்ணர் வந்து நின்றார் — பொருள் பொதிந்த புன்முறுவலுடன்.

இங்கே அன்னத்தை அடுப்பிலிருந்து எடுத்த சாரதை நீர் திரையிட்ட கண்களைத் தாழ்த்திக் கொண்டாள். தெய்வங்களின் சித்திரங்களுக்கு இடையில் சாட்சாத் ராமகிருஷ்ணரின் புகைப்படமும் உள்ளே இருந்தது! தினமும் பூ வழிபாடும், நிவேதனமும் அவருக்கும் செய்யப்பட்டு வந்தன. 'ஆனால் இந்தப் பூஜை அவரது இறுதியைக் குறிக்குமாமே! நான் பூஜிப்பதும் ஒரு குற்றமாச்சா? அந்தக் குற்றத்தைக் கையும் மெய்யுமாகக் காண வந்து விட்டாரே!' என வேதனை உற்றாள் தேவி.

அதுதான் அவரது புகைப்படங்களில் முதன் முதலாகப் போடப்பட்ட பிரதி. அது அழுக்குப் படிந்து கறுத்துப் போய் விட்டது. தக்ஷிணேசுவரத்துப் பிராமணர் ஒருவருக்கு அந்தப் பழைய பிரதி கொடுக்கப்பட்டது. அந்த மனிதர் சில காலத்துக்குப் பின் சொந்தக் கிராமத்துக்குப் போகும்போது அம்மாவிடம் இப்படத்தைக் கொடுத்தார். அவள் அதைத் தெய்வங்களின் இடையில் வைத்து வழிபடலானாள்.

நஹவத் உள்ளிருந்து ராமகிருஷ்ணரின் மதுர மோகனக் குரல் கேட்டது. ''ஓஹோ, இங்கே இப்படியாம்மா பண்ணிண்டிருக்கே!'' என்றார். எட்டிப் பார்த்த சாரதை, அவரே ஆனந்த மயமாகத் தமது படத்துக்கு வில்வார்ச்சனை செய்வதைக் கண்டாள்!

சாரதைக்குத் தெளிவு வந்தது. அவளோ அவரோ அந்தப் படத்தைப் பூஜிப்பதில் அவசூசகம் ஏதுமில்லை. மற்றவர்கள் வழிபடுவதைப் பற்றித்தான்



அவர் குறிப்பிட்டார் என்று புரிந்து கொண்டாள்.

இந்தப் புகைப்படமே அம்மாவின் வாழ்நாளில் அவளது முதல் பெரும் சொத்தாக இருந்தது. நாளாவட்டத்தில் ஏதோ ஓர் அற்புத முறையில் அந்தப் படத்தின் கருமை நீங்கி அது சுத்தமாகிவிட்டது!

சைதன்ய மகா பிரபுவை அவரது மனையாள் விஷ்ணுப் பிரியாவே முதன் முதலாகப் பூஜித்தது போல், ராமகிருஷ்ணரையும் முதலில் தெய்வமாகப் பூஜித்தவள் சாரதைதான். இதிலே ஒரு பெரிய உண்மை அடங்கிக் கிடக்கிறது. எந்த மதத்திலுமே தத்துவங்கள், சடங்குகள் ஆகிய இரண்டு உண்டு. ஞானம், பக்தி என்ற இரண்டு உண்டு. இன்று ராமகிருஷ்ண மடங்களில் அறிவு போதனை, தத்துவப் பிரசாரம் ஆகியன நடைபெறுவது போலவே பரமஹம்ஸ குருமஹாராஜுக்குப் பூஜையும் நடக்கிறது. தத்துவ ஞானத்துக்குக் குறிப்பாக அவரது சீடர்கள் மூல புருஷராயினர்; பூஜைக்கு அம்மா மூல காரணமானாள். தத்துவத்தில் ஆண்மையின் அழுத்தமும் கண்டிப்பும் அதிகம், பூஜையில் பெண்மையின் குழைவும் இனிமையும் அதிகம் என்பதைக் கவனிக்குமிடத்து இது ஓர் அற்புதப் பொருத்த மன்றோ?

சின்னச் சின்ன விஷயங்கள் அமங்கலத்துக்குக் கட்டியம் கூறின. ஒருநாள் கோலாப் — மா சாரதையிடம் வந்து "டாகூர் இத்தனை வைராக்கியத்தோட இருக்கச்சே அம்மா ஏகப்பட்ட நகையும் நட்டும் போட்டுண்டு இருக்கறது நன்னா இல்லேன்னு மனோமோகனுடைய அம்மா குறை சொல்லறா" என்றாள். அந்த விஷயத்தை கோலாப் அம்மை முடிந்து கொண்டு வந்து சொல்லியிருக்க வேண்டியதே யில்லை. சாரதையின் மன நுட்பத்தைப் புரிந்து கொள்ளாமல் பலமுறை கோலாப் இவ்விதம் அவளுக்குத் துன்பம் தந்ததுண்டு.

இந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் சாரதை கையிலிருந்த ஜோடி வளையல்களைத் தவிர மீத நகைகள் அனைத்தையும் கழற்றி விட்டாள்.

மறுநாள் யோகின்—மா நம் அம்மாவைப் பார்த்ததும் அவளுக்குத் துணுக்குற்றது. சர்வமங்கள மூர்த்தியாக — சர்வாபரணபூஷிதையாக இருந்த அம்மா ஏன் இப்படி மூளி போல் நிற்கிறாள்! யோகின் மிகவும் பிடிவாதம் பிடித்ததன் மீது அம்மா ஒருசில நகைகளை

அணிந்து கொண்டாள். ஆனால் எல்லா ஆபரணங்களையும் அணியவில்லை.

அதன்பின் என்றுமே அணியவில்லை.

ஆம், இது நடந்து சில நாட்களில் 1885ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ராமகிருஷ்ணர் தொண்டை வலி என்று படுத்தார். அதுவே அவரது உயிரைக் குடித்த புற்றுநோயாக மாறியது.

தேவியின் உயிரையும் அரித்தெடுக்கலாயிற்று அந்தக் கொடூர நோய்.

'ஆகா! என் பிரபு விளையாட்டை முடித்துக் கொள்ளத் தீர்மானித்து விட்டாரா?' என்று அடிக்கடி எண்ணி நடைப்பிணமானாள் அம்மா.

அவள் அவரிடம் கொண்டிருந்த அன்பு எந்தப் பத்தினிக்கும் எந்தப் பதியிடமும் உள்ள பிரியம் மட்டும்தானா? அவள் அன்பே உருவானவள். அவர் அன்பே உருவானவர். அன்பே அன்பிடம் கொண்டிருந்த அன்பு அல்லவா அவரிடம் அவள் கொண்டிருந்த அன்பு?

தக்ஷிணேசுவரத்தில் அந்தக் கொடூர நோய்க்கான வைத்தியம் செய்யச் சௌகரியப்பட்டவில்லை. எனவே 1885 அக்டோபரில் ராமகிருஷ்ணரை கல்கத்தாவில் சியாம்புகூர் சாலையில் ஓர் இடத்துக்கு ஜாகை மாற்றினார்கள். புகழ் பெற்ற ஹோமியோபதி நிபுணர் மஹேந்திரலால் சர்க்கார் வைத்தியம் செய்யலானார்.

சாரதையை தக்ஷிணேசுவரத்திலேயே விட்டு ராமகிருஷ்ணரும், சீடர்களும் சியாம்புகூர் சென்றனர். எந்தச் சமயத்தில் அவள் அவருக்கு மிகவும் அணுக்கத்தில் இருக்க வேண்டுமோ, அந்தச் சமயத்திலே பிரித்து வைக்கப்பட்டாள்.

காரணம் இதுதான்: சியாம்புகூர் வீட்டில் கோஷாப் பெண்டுகளுக்கான தனி இடம் ஏதுமில்லை. நீண்ட நெடுங்காலம் கோஷாவாகவே வாழ்ந்துவிட்ட அம்மா பரபுருஷர்களின் பார்வையில் தத்தளிப்பாள் என்றே அவளை விட்டுச் சென்றார் ராமகிருஷ்ணர்.

அவள் மரக்கட்டையாகி விட்டாள். தக்ஷிணேசுவரத்திலே ராமகிருஷ்ணரும் இல்லை, அன்புக் குழந்தைகளும் இல்லை. அவள் மட்டும் வெட்டு வெட்டென்று பொழுதை நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தாள். கணவர் உயிருக்குப் போராடும்போது மனைவிக்குக் கோஷா முறையா முக்கியம் என்று தோன்றலாம். ஆனால் அவளுக்கு அவரிடமிருந்த அன்பை விடவா நமக்கு அவரிடம் அதிக பக்தி! பதி சுசுருஷை, அடக்கம் இரண்டுமே அவளது பிறவிப் பணிகள். அடக்கத்தை விசேஷமாகக் கொண்டிராத நவயுகப் பெண்களும் கூடப் பதியிடம் சிறந்த அன்பு பூண்டு பணி செய்யக் கூடும். எனவே இக்காலப் பெண்களுக்கு வழி காட்டவே அம்மா, பதி சுசுருஷையையும் இரண்டாவதாக வைத்து, அடக்கத்துக்கு முதலிடம் தந்தாளோ?

கோலாப் அம்மாகூட அம்மாவைப் பற்றித் தவறாக எண்ணி விட்டாள். "அம்மாவுக்குத் தான் மகாபட்ட கோஷான்னு ஒரு பெருமை. வரவாளுக்கெல்லாம் வாரி வழங்கிண்டு தர்பார் நடத்தறதிலேயும் அம்மாவுக்கு ஒரு குதூகலம். இதெல்லாம் பிடிக்காமல், அம்மாவிடம் கோவிச்சுண்டுதான் டாகூர் அவளை விட்டுட்டு சியாம்புகுருக்குப் போய்விட்டார்" என்று யோகினம்மையிடம் கூறினாள் கோலாப்.

அம்மாவிடம் வந்தாள் யோகின்.

துயரில் ஆழ்ந்திருந்த அம்மா யோகினைப் பார்த்ததும் ஆனந்தம் கொண்டாள். "நீங்க அன்னிக்கு எனக்குப் போட்ட பிச்சோடாவை அவிழ்க்கப் பிடிக்காமே, அப்புறம் இரண்டு நாள் தலைக்கு ஸ்நானம் பண்ணாமலே இருந்தேன். என் யோகின் கொண்டை போட்டா அதுக்குத் தனி மவுசுதான்" என்றாள் புன்சிரிப்புடன்.

'அடடா, அம்மா குழந்தை போல் பேசுகிறாளே! அங்கே டாகூர் உயிரோடு போராடுகிறார். இந்தக் கூந்தல் அலங்காரம் என் மங்கள மாதாவுக்கு இன்னும் எத்தனை நாள் தக்குமோ?' என்று உள்ளூற அழுது கொண்டாள் யோகின்.

பேச்சுவாக்கில் கோலாப்பின் குற்றப் பத்திரிகையையும் அம்மாவிடம் பிரஸ்தாவித்தாள் யோகின்மா.

அம்மா அதைக் கேட்டதும் அனலில் விழுந்த புழுவாகக் காய்ந்து சுருங்கி விட்டாள். "டாகூர் என்கிட்ட கோவிச்சுண்டு போய்விட்டாரா? அப்படியா, ஹா... ஹா" என்று கேவிக் கேவி அழுதாள்.

உடனே ஒரு வண்டி அமர்த்திக் கொண்டு சியாம்புகுருக்கு விரைந்தாள்.

படுக்கையோடு அஸ்தி பஞ்சரமாக ஒட்டிக் கிடந்த பதியிடம் வந்து விசித்தாள்.

"ஏனம்மா? ஏதுக்கு அழுறே?" என்று பிரேமை மயமாகக் கேட்டார் அவர்.

அந்தக் கேள்வியின் இனிமையிலேயே கோலாப் சொன்னது அபத்தம் என்று ருசுவாகி விட்டது. இருப்பினும் அவர் வாயாலேயே அதைக் கேட்க விரும்பிய தேவி, விஷயத்தைச் சொன்னாள். "எங்கிட்ட... உங்களுக்கு.... கோபமான்னு? கோலாப்.... சொன்னாளே!" கண்ணீரிடையே திணறினாள்.

"உங்கிட்ட எனக்குக் கோபம்! நடக்கிற காரியமா அது? அப்படியா சொன்னாள் அந்த கோலாப்? உன்னை அழ விட்

டாளே அந்த அசடி! உன்னை யார்னு தெரிஞ்சுக்கலை போலிருக்கு? எங்கே அவள்? எங்கிட்ட அனுப்பு'' என்று தமது புண்ணுண்ட தொண்டையால் பேசி அம்மாவின் புண்ணை ஆற்றி அவளைத் திருப்பி அனுப்பினார் புனிதர்.

பிறகு கோலாப்-மா அவரிடம் வந்தபோது அவளை வன்மையாகக் கடிந்து கொண்டார். ''அம்மா யாருன்னு உனக்குத் தெரியலை? அவ ஆதி சாரதாம்பிகையே தெரியுமா? லோகத்துக்கு ஞானம் தரத்துக்காக அவ வந்திருக்கா. அவ ஞானமயீ. அவளை ஏதோ மனுஷின்னு நினைக்கிறே? அவ என்னோட சக்தி, தெரிஞ்சுக்கோ! சாம்பல் நிறப் பூனை சாம்பலுக்குள்ளே அடையாளம் தெரியாமல் பதுங்கிண்டிருக்கிற மாதிரி அவ தன்னைத் தானே ஒளிச்சுண்டிருக்கா. அவளைப் போய் அழவிட்டயே! முதல் காரியமா அவ கிட்டப் போய் மன்னிப்புக் கேட்டுக்கோ!'' என்றார்.

கோலாப் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து அம்மாவிடம் மன்னிப்புக் கேட்டாள். ''அம்மா, டாகூர் என்னை ரொம்பக் கோவிச்சுண்டுட்டார். நான் யோசனையே இல்லாமல்தான் அப்படி உளறிவிட்டேன்'' என்று அழுதாள்.

அம்மா மறுமொழி ஏதும் சொல்லவில்லை. சிரித்துக் கொண்டே கோலாப் மாவின் முதுகை மும்முறை தட்டிக் கொடுத்தாள். ''பிரிய கோலாப்'' என்று மும்முறை கூறினாள். கோலாப்பின் இதயம் குளிர்ந்தது.

ஆதியில் கோலாப் தன் ஒரே மகளைப் பறி கொடுத்துவிட்டு தக்ஷிணேசுவரம் வந்தாள். அவளுக்கு மல்லுக்கட்டி வயிறு புடைக்க உணவு படைத்தே, அதிலுள்ள உப்பினால் புத்திர சோக உணர்வைக் குறைத்தவள் சாரதை. சோகத்துக்கு ஆளாக இருந்த அந்தத் தேவியிடமே இப்போது குழந்தையாக ஒட்டிக் கொண்டாள் கோலாப்.

கோலாப் ராமகிருஷ்ணருக்கு உணவு பரிமாறிய காலங்களில் இரவு வெகு நேரம் வரையில் அவருடன் உரையாடிவிட்டே நஹவத்துக்குத் திரும்புவாள். நஹவத் மாடிப் படிக்கட்டுக்குக் கீழேதானே சமையலும் சாப்பாடும் நடந்தன? அங்கே பாதுகாப்புக் கிடையாது. எனவே அம்மா விழித்திருந்து கோலாப்பின் உணவுக்குக் காவலிருப்பாள். ஓர் இரவு அம்மாவாலேயே தாங்க முடியவில்லை. ''என்னாலே முடியவில்லை. பூனையோ நாயோ எதுவேணாலும் தின்னுட்டுப் போகட்டும்'' என்று வாய்விட்டுச் சொன்னாள். அவள் 'ம்' என்றால்கூட எவ்வாறோ கிரகித்துக் கொள்ளும் ராமகிருஷ்ணரின் செவியில் இந்த வார்த்தைகள் விழுந்து விட்டன. கோலாப்பை மிகவும் கடிந்து கொண்டார். அப்படியும் கோலாப்போ, ''நீங்கதான் அம்மா அலுத்துக்கறான்னு சொல்றேளே தவிர, வாஸ்தவத்திலே அம்மா என் விஷயமா சலிச்சுக்கவே மாட்டா. பெற்ற பெண்ணுக்கு மேலே என்னைப் பிரியமா வைச்சுண்டிருக்கா'' என்று சொல்லிவிட்டு, தனது வழக்கத்தைத் தொடர்ந்தாள்.

அம்மாவே அதிசயமாகக் கோபம் கொண்டாலும் கூட அவளது அரிய குழந்தைகள் அந்த அதிசயத்தை லட்சியம் செய்யக் காணோம்!

ராமகிருஷ்ணர் சியாம்புகுரிலிருக்க, தக்ஷிணேசுவரத்தில் கொட்டுக் கொட்டு என்று தனித்திருந்த தேவி, பவ முகர்ஜி என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தியிடம் பாடம் சொல்லிக் கொள்ளத் தொடங்கினாள். நீண்ட நெடுங் காலமாகப் படிப்பை விட்டிருந்த சரஸ்வதி தேவி மீண்டும் மிகுந்த சிரத்தையோடு ஆரம்ப பாட புத்தகங்களைப் படிக்கலானாள். அந்தச் சிறிய பெண் நம் சரஸ்வதி தேவிக்குப் பரீட்சை வைத்து 'பாஸ்' கொடுத்தாள்! ஆயினும் அம்மாவுக்குக் கடைசிவரை படிக்கத்தான் தெரியுமே தவிர, எழுதுவதில் பயிற்சியே இல்லை. வெகு காலத்துக்குப் பின் பக்தர் ஒருவருக்குத் தன் கையெழுத்துப் போட்டுத் தருவதற்காகப் படாத பாடு பட்டாள் தேவி. ஆனால் எழுத்து வந்தால்தானே! கிறுக்கிக் கிறுக்கிப் பார்த்தாள். ''அடியம்மா! என்னாலே முடியலை'' என்று கடைசியில் தோல்வியை ஒப்புக் கொண்டாள் சரஸ்வதி! புத்தகத்திலும் எழுத்திலுமா ஞானம் இருக்கிறது?

சியாம்புகுரில் அம்மா இல்லாமல் ராமகிருஷ்ணரும் சீடர்களும் அவதிப் பட்டார்கள். குறிப்பாக, ரணமுண்ட அவரது தொண்டைக்கு இதமாக யார் சமைப்பது?



''அம்மாவை அழைத்து வரவா?'' என்று சீடப்பிள்ளைகள் கேட்டார்கள்.

''இங்கே கோஷா அநுஷ்டிக்க முடியாதே! இருந்தாலும் இங்கே வரதில் அவளுக்கு ஆட்சேபமில்லாவிட்டால் எனக்கு ஆட்சேபம் இல்லை'' என்றார்.

சீடப் பிள்ளைகள் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து விஷயத்தைச் சொன்னவுடனே அம்மா அவர்களோடு புறப்பட்டு விட்டாள். அதன் பின் அவளால் கோஷா விரதத்தைப் பெரிதாக எண்ண முடியவில்லை.

ஆயினும் சியாம்புகூர் வந்த பின், சூழ்நிலை பாதகமாக இருக்கிறது என்பதால் கோஷா முறையை அடியோடு விட்டு விட்டு அவள் மனம் போனபடியிருக்கவில்லை. இங்கேதான் அவளது பெருமை பொதிந்திருக்கிறது. சூழ்நிலை முற்றிலும் பாதகமாக இருந்தபோதிலும், கணவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டு, தன் கோஷா விரதத்தையும் காத்துக்கொண்டாள். அங்கு ஒரே ஒரு குளியலிடம்தான் உண்டு. எனவே இரவு இரண்டு மணிக்கே எழுந்து ஜபம் செய்துவிட்டு, மூன்று மணிக்குக் குளியலை முடித்துக் கொண்டாள். இரண்டாவது மாடியில் மற்றவர் பார்வை படாமல் ஒரு தாழ்வரை இருப்பதைப் பார்த்து, அங்கேயே தனக்கு 'ஜாகை' வைத்துக் கொண்டாள். அங்குதான் சமையலும் செய்தாள். அவருக்கு உணவு தயாரித்ததும் மூத்த கோபாலையோ லாடுவையோ கீழே அனுப்பி அவருடன் இருப்பவர்களை வெளியே அனுப்பி வைப்பாள். பிறகு கீழிறங்கி வந்து அவருக்குப் பரிமாறுவாள். மீண்டும் மாடிக்குப் போய் விடுவாள். இரவு பதினொரு மணிக்குச் சந்தடி ஓய்ந்த பின், ராமகிருஷ்ணர் படுத்திருந்த ஹாலுக்கு அருகேயிருந்த சிறிய அறைக்கு வந்து முடங்கிக் கொள்வாள்.

இப்படி இரண்டு மாதங்கள் ஓடின. பகவானின் நோய் முற்றியது. வைத்தியரின் ஆலோசனைப்படி காசிப்பூர் சாலையில் இருந்த காற்றோட்டமுள்ள ஒரு விஸ்தாரமான வீட்டுக்கு அவரை இடம் மாற்றினர். இங்கே அன்னைக்கு அதிக சிரமம் இருக்கவில்லை. சரீர சிரமம் குறைந்தது. மனத்துக்குச் சிரமம் அதிகரித்தது, எலும்பும் தோலுமாகிவரும் பதிதேவரைக் கண்டு!

தமது மரணத்தின் நெருக்கத்தைப் பற்றி அவர் குறிப்பிட்ட சூசகங்களில் இதுவரை நிறைவேறாதிருந்த இன்னொன்றும் இப்போது நடந்து விட்டது. ராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரத்திலேயே இருப்பதாக எண்ணிக் கொண்டு சில அடியார்கள் இனிப்புப் பணியாரங்களுடன் அங்கு சென்றனர். அவர் சுகவீனமுற்று கல்கத்தாவுக்குச் சென்றுவிட்டார் என்று தெரிந்து கொண்டனர். உடனே அவர்களுக்கு என்ன தோன்றியதோ, அங்கிருந்த ராமகிருஷ்ணரின் திரு உருவப் படத்தின் முன் பட்சணங்களை வைத்து இறைவனுக்கு நிவேதிப்பது போல் அதனை நிவேதனம் செய்தனர். பிறகு 'டாகூரின் பிரசாதம்' அனைவருக்கும் வழங்கப்பட்டது. இந்தச் செய்தி ராமகிருஷ்ணரின் காதுகளை எட்டியதும் அவர், ''அவா ஏன் அப்படிப் பண்ணினா? தக்ஷிணேசுவரத்திலே அம்மா (காளி பவதாரிணி) இருக்கச்சே அவளுக்கு நைவேத்தியம் பண்ணாமே ஏன் இதனுடைய (தமது) படத்துக்கு நிவேதிச்சா?'' என்றார்.

சாரதைக்குப் பூர்வத்தில் அவர் சொன்னது நினைவு வந்தது. அவளது உயிர்நாடிக்குள் அமங்கலிய பீதி குடைந்து சென்றது.

'பொதுவாகவே உயிரும் உடலும் கொண்டு ஒருவர் வாழ்ந்து வரும்போது அவரது படத்துக்கு நிவேதிப்பது அச்சானியம் என்பார்களே!' — பேயறைந்தாற்போல் உட்கார்ந்திருந்த அம்மாவின் எண்ணங்களைப் புரிந்து கொண்டார் ராமகிருஷ்ணர். ''பிரியே, கலங்காதே! இனிமேல் என் படத்தை வீடு வீடா வைச்சு இந்தமாதிரி பூஜை பண்ணப் போறா! ஆமாம், இதை நான் சத்தியப் பிரமாணமாகச் சொல்றேன்'' என்றார்.

தம்மைப் பற்றி 'இந்தக் கட்டை' என்றோ, அல்லது தமது உடலைத் தொட்டு, 'இது' என்றோ சொல்லும் ராமகிருஷ்ணர், 'என்' என்றும் 'நான்' என்றும் இத்தனை அழுத்தமாகச் சொன்னது சாரதைக்கு அதிசயமாயிருந்தது. அந்த அதிசயம் அவளை இனம் புரியாமல் ஆட்டியும் வைத்துவிட்டது.

பக்கத்திலிருந்த ராமலாலைப் பார்த்து ''பவதாரிணிக்கு நீ பணி பண்ணிண்டு இருக்கப் போறே! அதனாலே உனக்கு

> எத்தனை காலம் வாழ்கிறோமோ அத்தனைக் காலம், எத்தனை மக்களுக்கு முடியுமோ அத்தனை மக்களுக்கு, எத்தனை நேரம் முடியுமோ அத்தனை நேரம், எத்தனை இடங்களில் முடியுமோ அத்தனை இடங்களில், எத்தனை விதங்களில் முடியுமோ அத்தனை விதங்களில், எத்தனை உபகரணம் உண்டோ அத்தனையும் கொண்டு — உன்னால் எத்தனை நல்லது செய்ய முடியுமோ அத்தனையும் செய்வாயாக!
>
> ஜான் வெஸ்லி : ''அவனது ஆணை''

ஒரு குறைவும் இருக்காது'' எனக் கூறிய ராமகிருஷ்ணர், சாரதையின் புறம் திரும்பி, ''அதுக்கு அப்புறம் நீ காமார் புகுரிலே போய் இரு. லக்ஷ்மியையும் கொஞ்ச நாளைக்கு உன் கவனத்திலேயே வைச்சுக்கோ. அவளுக்கு அன்ன வஸ்திரத்துக்கு வசதி இருக்கு. நீ ஒண்ணும் செய்யணும்கிறது இல்லே. ஆனால் அவ ஊரை விட்டு எங்கேயும் போயிடாமப் பார்த்துக்கோ!'' என்றார்.

குடும்ப விஷயங்களுக்கு இவ்விதம் அறிவுரை கூறிய கடமை வீரர், மீளவும் ராமலாலைப் பார்த்து, ''சித்தி காமார் புகுரிலேயே இருந்துண்டு இருக்கணும். நீதான் கவனிச்சுக்கணும்'' என்றார்.

அந்த உருக்கமான சூழலில் கூடப் பாறுங்கல் இதயத்துடன் பேசினார் ராமலால்: ''சித்திக்கு எங்கே இஷ்டமோ அங்கே இருந்துப்பா. எனக்கென்ன வந்தது?''

சித்தப்பாவின் மறைவுக்குப் பின் சித்தி தனது பிறந்தகமாகிய ஜயராம்பாடியில் வசிக்கத்தான் பிரியப்படுவாள் என்று ராமலால் எண்ணினார் — அப்படிச் செய்தால் தமக்கும் ஒரு பொறுப்புக் கழிந்ததாகும் என்ற நிம்மதியில் இப்படிப் பேசினார்.

''ஏண்டா கொழந்தே! உனக்கு என்னமா இப்படிப் பேசத் தோணறது? நீ ஒரு புருஷப் பிரஜையாப் பிறந்திருக்கிறது எதுக்காக?'' என்று கேட்டு ராமகிருஷ்ணர் பேச்சை முடித்தார்.

நிரந்தரமாக விடை கொள்ள அவர் தீர்மானித்து விட்டார் என்று சாரதைக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது. அவர் தீர்மானித்தாரோ அல்லது அம்பாள் தீர்மானித்ததைத் தமது வழக்கப்படி அவர் எதிர் நீச்சே போடாமல் ஏற்றுவிட்டாரோ? 'இந்தச் சமயத்தில் நான் எதிர்நீச்சல் போட்டால் மட்டும் பலன் இருக்குமா? இருந்தாலும் மூச்சைக் கையில் பிடித்துக் கொண்டு ஒரு முயற்சி செய்து வைப்போமே! முன்பு நான் நேர்ந்து கொண்டபோது பிரத்தியட்ச வரப்பிரஸாதினியாக வந்து காத்தாளே சிம்மவாஹினி! இப்போது, இவரை மிருத்யு வந்து தீண்டாதபடி மிருத்யுஞ்ஜயனை தாரகேசுவரனிடம் போய் தவமிருந்து பார்க்கிறேன்.'

சாரதை தாரகேசுவரத்துக்குப் போவதை அவரும் ஆட்சேபிக்கவில்லை.

தாரகேசன் சந்நிதியில் போய் விழுந்தாள் சாரதை, மாங்கல்யப் பிச்சை கோரி. இரண்டு நாட்கள் எழுந்தாளில்லை. அன்னமும் தண்ணீரும் இன்றி பிராயோபவேசம் இருந்தாள். 'கால ரூபிணியான காளியின் சங்கற்பத்தைக் காலகாலன் மாற்ற மாட்டானா? அதற்கு ஒரு சமிக்ஞை தனக்குத் தெரிவிக்க மாட்டானா?' என்று ஒவ்வொரு விநாடியும் எதிர்பார்த்தபடி இரண்டு நாட்களைக் கடத்தினாள். 'ஒன்று அவர் பிழைக்க வரம் பெறுவேன்; அல்லது என் உயிரை ஈசுவரன் சந்நிதியில் விடுவேன்' என்ற உறுதியுடன் வயிறு காய, நாக்கு உலரக் கிடந்தாள்.

இரண்டு நாட்கள் ஓடின. நள்ளிரவு. திடுமென ஒரு பேரொலி கேட்டது. ஏராளமான பானைகளை ஒருசேர உடைத்தால் உண்டாகும் ஒலிபோல் இருந்தது. மண்பானையா, அல்லது மாயக் குயவனார் மண்ணால் புனைந்த மனிதப் பிண்டம் என்ற பானையா? பிண்டப் பானைதான், அண்டப் பானையும் கூடத்தான். காலகாலனே சம்ஹார ருத்ரனாகி அண்ட பிண்டங்களை உடைத்தெறிவது போல் சாரதைக்குத் தோன்றியது. எங்கேயோ ருத்திரன் ஊதும் கொம்பொலி அவள் செவிகளில் வந்து புகுந்து பேசியது: ''சாரதே! இந்த உலகில் கணவன் என்பது உண்மையில் யார்? அவன் யாருக்குக் கணவன் அல்லது எதற்குக் கணவன்? மனைவி எனப்படுபவள் யார்? இந்த உலகில் யாருக்கு யார் உறவு? யாருக்காக யார் உயிரை விடுவது?''

தாரகேசன் அவள் விருப்பத்தை நிறைவேற்றவில்லை. ஆயினும் அவளை அவன் அலட்சியம் செய்யவில்லை. அவளிடம் அந்தராத்மாவாகப் பேசி விட்டான். பரம வைராக்கியத்தை உபதேசித்து விட்டான்.

பகவத் சங்கற்பத்துக்கு மாறாகத் தான் எதுவுமே செய்வதற்கில்லை என்று சாரதைக்குத் தெள்ளத் தெளிவாகிவிட்டது. ஆண்டவனை நிர்ப்பந்தித்து வரம் பெறத் தனக்கு எந்த உரிமையும் இல்லை என்று உணர்ந்தாள். 'நீ விட்ட வழி அப்பனே' என்று கண்ணீருடன் கூறிக் கொண்டு, தான் கிடந்த இடத்திலிருந்து எழுந்தாள். சந்நிதானத்துக்குப் பின்புறம் தேங்கியிருந்த அபிஷேக தீர்த்தத்தை அள்ளிக் குடித்து உண்ணா விரதத்தை முடித்தாள். தோல்வியோடு காசிப்பூருக்குத் திரும்பினாள். **(தொடரும்)**



ஒவ்வொருவரின்
மேனிக்கும்
பாதுகாப்பு தேவை
CINTHOL
DEODORANT LUXURY
TOILET POWDER
வியர்வை துர்நாற்றத்-
திலிருந்தும், அதனால்
நுண்ணிய கிருமிகளிட
மிருந்தும் உங்களுக்கும்,
மற்றவர்களுக்கும் ஏற்படும்
சங்கடத்திலிருந்தும் பாது
காப் பளிக்கிறது.
ஜி-11 கலந்த
சிந்தால் டாய்லெட் பவுடர்
இந்தப் பாதுகாப்பைத்
தருகிறது. அதோடு...
அன்றலர்ந்த மலரின்
நறுமணத்தையும் தருகிறது.
சிந்தால்—
துர்நாற்றத்தை அறவே
போக்கிப் பாதுகாப்பளிக்
கும் டாய்லெட் பவுடர்.
Interpub/GSP-4/72 R Tam

சபாஷ், சஞ்சீவி!

எம்.எஸ்.பெருமாள்



(நான்கு குடித்தனங்கள் கொண்ட ஒரு வீடு. கீழே இரண்டு பெரிய போர்ஷன்கள். முதல் போர்ஷனில் வீட்டுச் சொந்தக்காரர் கனக சபை, அவர் மனைவி வள்ளியம்மை. இரண்டாவது போர்ஷனில் நடுத்தர வர்க்கத்தினரான பட்டாபி, அவர் மனைவி வைதேகி; அவர்கள் மகள் பத்து வயதுச் சிறுமி பானு, கைக் குழந்தை சுந்தர். மாடியில் இரண்டு தனித் தனி சிறு போர்ஷன்கள். ஒன்றில் சோப்புக் கம்பெனி ரஞ்சிதம் குடியிருக்கிறாள். மற்றொன்றில் தனிக்கட்டை சஞ்சீவி)

காட்சி ஒன்று

(இடம்: பட்டாபி வீட்டுப் போர்ஷன்.)
(நேரம்: மாலை ஆறு மணி சுமார்.)

வைதேகி (பரபரப்பாக வீட்டினுள்ளிருந்தபடியே): பானு... ஏ... பானு... வெளையாடினது போதும். சுருக்கா வந்து ஸ்கூல் பாடம் எழுதனும்னு எழுதி முடிச்சுக்கோ. ராத்திரிலே வந்து லேட்டைப் போடுடேன்னு பிராணனை வாங்காதே.

பானு (மாடியில் நின்றபடியே): கொஞ்ச நேரம் வெளையாடட்டு வர்றேம்மா.

வைதேகி: வெளையாட்டு போதும்... வெளக்கு வைக்கறதுக்குள்ளே பாடத்தைப் படிச்சுட்டுப் போயேன்டி.

பானு: 'வெளக்கு வெச்சாச்சு, பாடம் படி'ன்னுதான் சொல்லுவா... நீதான் அதிசயமா வெளக்கு வைக்கறதுக்குள்ள படிக்கச் சொல்லிப் பிராணனை வாங்கறே.

வைதேகி: ஊம்... சுகவரா, இருட்டறதுக்குள்ள சமையலே முடிச்சாகனும். கொழுந்தைக்குச் சாதம் போடணும். எப்படிப் பண்ணப் போறேனோ....?

(சஞ்சீவி வருகிறான்)

வைதேகி: பானு! சஞ்சீவி மாமா அறைச் சாவியை எடுத்துக் குடு.

சஞ்சீவி: பானு! லெட்டர் எதினாச்சும் வந்திச்சாம்மா?

பானு: ஒண்ணும் வரலே மாமா.

(சாவியைக் கொடுக்கிறாள்)

வைதேகி: சஞ்சீவி சார்! சாயந்தரமா எங்கியானும் வெளியிலே போகப் போறேளா?

சஞ்சீவி: இல்லேம்மா. ஆபீஸ்லே எனக்கு ஏகப்பட்ட வேலே. அப்படியும் பாக்கி கெடந்து போச்சு. இன்னிக்கு விடிய விடியக் கண் முழிச்சாகனும்.

வைதேகி: அந்த ஆபீஸ் வேலையெல்லாத்தையும் வெளக்கு வைக்கறதுக்குள்ள பார்த்துட முடியாதா?...

சஞ்சீவி: ஏன்...?

வைதேகி: இன்னிக்கு விளக்கு வராது. கார்த்தாலே எலக்ட்ரிஸிடி போர்டுலேர்ந்து வந்து கரண்டை 'கட்' பண்ணிட்டுப் போய்ட்டாங்க.

சஞ்சீவி: கரெண்டைக் கட் பண்ணிட்டாங்களா?.... ஏன்?

வைதேகி: எலெக்ட்ரிக் பில் கட்டலேன்னு 'கட்' பண்ண மாட்டாளா?

சஞ்சீவி: ஒரு மாசம் 'கிரேஸ் டைம்' உண்டே.....?

வைதேகி: போன மாசம் கட்டலேன்னு இந்த மாசப் பில்லோட சேர்த்துக் கட்டணு மோல்லியோ?

சஞ்சீவி: ஆமாம், கட்டணும். அதுவும் பில் வந்து ஒரு வாரத்துக்குள்ளே கட்டணும்.

வைதேகி: இன்னைக்கு பில் வந்து எத்தனை நாளாச்சு?

சஞ்சீவி: என்னைக் கேட்டா? இன்னும் நீங்க கட்டலையா?

வைதேகி: போன மாசம் புது டியூப் லைட் வாங்கிப் போட்டேன். பணம் செலவா யிடுத்து, எலெக்ட்ரிக் பில் கட்ட முடியலே... இந்த மாசம் பழம் பாக்கி இருக்குன்றதையே மறந்து இருந்து விட்டேன்.

சஞ்சீவி: எம். இ. எஸ். காரங்க மறக்காம வந்து கட் பண்ணிட்டுப் போயிட்டாங்க. இது யார் தப்பு?

வைதேகி: என் தப்புத்தான். இன்னும் மணி ஆறடிக்கல்லே. ஆறடிச்சதுன்னு வீட்டுக்காரம்மா வெளக்கைப் போட்டுப் பார்ப்பாங்க. விஷயம் தெரிஞ்சுடப் போறது... 'லோ லோ லோ'ன்னு வந்து வையப் போறாங்க.

சஞ்சீவி: ஏன் வையப் போறாங்க? 'ப்யூஸ்' போயிடுச்சுன்னு சொல்லிச் சமாளிச்சு வைங்க.

(உள்ளே சென்று மின்சார விசிறியைப் போடுகிறாள். விளக்கையும் போடுகிறாள்.)

என்ன இது... ஃபேன் சுத்தலே... லைட்டும் வரலே! பானு... பானு... ஒங்க போர்ஷன்லே லைட் வருதா பாரும்மா.

பானு: வரலே அக்கா.

ரஞ்சிதம்: எதிர் வீட்டிலெல்லாம் லைட் எரியுது! மாமீ... வைதேகி மாமீ....



வைதேகி: அவங்க வாயைக் கட்டிடலாம். ஆனால், மாடியிலே இருக்காளே, ராங்கி ரஞ்சிதம்!

சஞ்சீவி: சோப்புக் கம்பெனி சுந்தரி!

வைதேகி: ஆமாம், அவளுக்கு என்ன பதில்? கலகத்துக்கு யார் காரணம்னு காதைத் தீட்டிண்டு அலைவாளே!

சஞ்சீவி: அவங்களை நான் சமாளிக்கறேன். நாளைக்குப் பணத்தைக் கட்டிட்டால் போச்சு!

வைதேகி: நாளைக்கா... மொத்தமா அறுபத்தேழு ரூபாய் வேணுமே... நான் எங்க போறது?....

சஞ்சீவி: அந்தக் கவலை நாளைக்கு! நீங்க வேலையைப் பாருங்க. போங்கம்மா.

(காட்சி மாற்றம்)

காட்சி இரண்டு

(மாடி: ரஞ்சிதத்தின் போர்ஷன். மாடி திறந்த வெளியில் பானு படித்துக் கொண்டிருக்கிறாள். வேலையிலிருந்து திரும்பும் ரஞ்சிதம் அலுப்புடன் வந்து கதவைத் திறக்கிறாள்.)

ரஞ்சிதம்: உஸ்.... அப்பாடா! வேலைக்குப் போக ஆரம்பிச்சாலும் ஆரம்பிச்சோம், ஒரு நிமிஷம்கூட நம்ம ஒடம்பைக் கவனிக்க முடியாமப் போகுது.

(ரஞ்சிதம் பானுவுடன் வைதேகி வீட்டுப் போர்ஷனுக்கு வருகிறாள்.)

வைதேகி: ரஞ்சிதம் வந்துட்டாளே! நான் பணம் கட்டாததினாலே கனெக்ஷனை 'கட்' பண்ணிட்டுப் போயிட்டான்னு தெரிஞ்சா பிலுபிலுன்னு பிடிச்சுப்பாளே!

சஞ்சீவி (திடீரென்று குரலை உயர்த்தி): அட ஆமாம்மா... ஆயிரம் வேலையோட வெளியே போற மனுஷனுக்கு மறதி வரத்தான் செய்யும்... இது ஒரு தப்பா?

வைதேகி (குழம்பி): நீங்க என்ன சொல்றேள்?

சஞ்சீவி (குரலைத் தணித்து): நீங்க பேசாமல் இருங்க.... ரஞ்சிதம் வராளே.. (குரலை உயர்த்தி) இந்தா பாருங்கம்மா வைதேகியம்மா... நீங்க ரெண்டு மாச பில் பணத்தை எங்கிட்ட குடுத்ததென்னவோ வாஸ்தவம்தான். நானும் வர்ற வழியிலே கட்டீட்டு வர்றேன்னு சொன்னதும் உண்மைதான்... கட்டல்லே, கட்ட முடியல்லே.... கட்ட மறந்திட்டேன். இப்ப அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றீங்க...?

ரஞ்சிதம்: ஓஹோ, மிஸ்டர் சஞ்சீவி! உங்களாலே வந்த வெனைதானா இது?

சஞ்சீவி: வாங்கம்மா, சடபுடா குச்சி!...

ரஞ்சிதம்: ஷட் அப்! வைதேகி மாமீ...எப்பவும் நீங்கதானே போய்ப் பணத்தைக் கட்டுவீங்க...?

சஞ்சீவி (குறுக்கிட்டு): எனக்கு அவசரமா பணம் தேவைப்பட்டதும்மா. ஒரு வாரத்திலே நானே பணத்தைக் கட்டறேன்னு வாங்கிக் கொண்டேன், செலவழிச்சேன்.

ரஞ்சிதம்: எந்தத் தைரியத்திலே செலவழிச்சீங்க?

சஞ்சீவி: பணம் வந்திடுமேங்கற தைரியத்திலே வாங்கினேன். செலவழிச்சேன். பணம் வரலே...வரப் போறதுமில்லே. அப்புறம்?

ரஞ்சிதம்: ரொம்ப அழகா இருக்கே ஒங்க கோபம்... வீட்டுக்காரம்மா... வீட்டுக்கார அம்மா....

(அழைத்தபடி போகிறாள்)

வைதேகி: சஞ்சீவி சார்....! நான் பண்ணின தப்புக்கு நீங்க எல்லாரண்டையும் வசவு வாங்கறேளே!...

சஞ்சீவி: இன்னும் வாங்கலியே!...

வைதேகி: வாங்குவேன்! உண்மையை நானே சொல்லிடறேனே....

சஞ்சீவி: பேசாமல் உள்ளே போங்கம்மா... இது ஒங்க தப்புன்னு தெரிஞ்சா ரஞ்சிதம் அநியாயத்துக்கு ஆர்ப்பாட்டம் பண்ணுவாள்.

(ரஞ்சிதம் வள்ளியம்மையை அழைத்து வருகிறாள்)

வள்ளி: என்ன சஞ்சீவித் தம்பி! ஒங்களுக்கே இது நல்லாயிருக்கா? லச்சிமிகரமா வெளக்கெரியற வீட்டுலே இப்படி இருளடிச்சுப் போக வச்சிட்டியளே...

சஞ்சீவி: என்ன செய்யறது... என்மேலே தப்புத்தான்!

காட்சி மூன்று

(மாடி: சஞ்சீவியின் போர்ஷனுக்கு முன்னால் உள்ள திறந்தவெளி. தெரு விளக்கின் வெளிச்சம் விழுகிறது. சிறிய ஜமுக்காளத்தை விரித்து உட்கார்ந்து கை மேஜையை வைத்துக் கொண்டு சஞ்சீவி அலுவலக பைல் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். கீழ்ப் போர்ஷன்காரன் பட்டாபி கையில் ஒரு பத்திரிகைக் கட்டுடன் வருகிறான்.)

சஞ்சீவி: வாங்க பட்டாபி சார்.. அது என்ன கையிலே பேப்பர் கட்டு?

பட்டாபி: பெரிய இக்கட்டு! உம்மால் வந்த வெனே!

சஞ்சீவி: இப்படிக் காத்தாட உக்காருங்க.

பட்டாபி: என்ன விடிய விடிய இப்படியே உட்கார்ந்துண்டு எழுதப் போறதா உத்தேசமா?

சஞ்சீவி: வேற வழி? எத்தனை நாட்கள் ஆபீஸ் நேரத்திலே தூங்கியிருக்கோம். அதுக்குத் தண்டனை வேண்டாமா?... தூக்கத்தைக் கெடுத்துக்கிட்டு ஆபீஸ் வேலையைப் பார்க்கணும். நாளைக்கு ஆபீஸ்லே ஆடிட் இன்ஸ்பெக்ஷன்.

பட்டாபி: அதெல்லாம் என்ன பண்ணுவீரோ — இன்னிக்கு நான் பார்க்க வேண்டிய வேலையை நீர்தான் பார்க்கிறீர். புரியறதா?

சஞ்சீவி: என்னது?

பட்டாபி: 'வாரா வாரம்' பத்திரிகை நடத்துகிற சிறுகதைப் போட்டிக்குக் கதை அனுப்ப நாளைக்குத்தான் கடைசி நாள்.

சஞ்சீவி: பேஷ்... பேஷ்... அப்ப உட்காருங்க.... எனக்கும் துணையாச்சு. இப்படி வெளிச்சத்திலே வந்து உக்காந்து வசதியா எழுதுங்க....

பட்டாபி: வெளையாடறீரா? என் அறையிலே உட்கார்ந்து ஜம்னு ஃபேனைப் போட்டுண்டு எழுதலாம்னு வீட்டுக்கு வந்தா... கனெக்ஷனைக் 'கட்' பண்ணி வச்சிருக்கீர்.

சஞ்சீவி: ஐயய்யோ, நான் கட் பண்ணலே... எம். இ. எஸ்.காரங்கதான் 'கட்' பண்ணினாங்க.

பட்டாபி: நீர் பணத்தை ஒழுங்கா கட்டப் போயிருந்தீர்னா அவன் ஏன்யா வந்து 'கட்' பண்ணப் போறான்?

சஞ்சீவி (அதிர்ச்சியுடன்): நான் பணங் கட்டலையா...?

பட்டாபி: வைதேகி சொன்னாளே!

சஞ்சீவி (முணு முணுப்பாக): ஒங்ககிட்டக் கூட உண்மையைச் சொல்லியிருக்கப்படாதா?

பட்டாபி: என்ன முணு முணுக்கிறீர்?

சஞ்சீவி: ஒலகம்னா என்னன்னு புரிஞ்சுக்கறேன்.... வேற ஒண்ணுமில்லே!...

பட்டாபி: நீர் பண்ணின தப்புக்கு நான் தர்ற தண்டனை—

சஞ்சீவி: ஒங்க கதையைப் படிக்கணும்!

பட்டாபி: ஆமாம்; காப்பியும் எடுக்கணும் —அதுவும் அழகா எடுக்கணும்.

சஞ்சீவி: ஒங்க கதையை விட நல்லா இருக்கும்... ஆமா, இந்த 'வாரா வாரம்' பத்திரிகை சிறுகதைப் போட்டி மட்டும்தான் நடத்தறாங்களா?

பட்டாபி: ஆமாம்... ஆனா 'மாதாமாதம்' பத்திரிகையில் நாவல்போட்டி வச்சிருக்காங்க. நான் அதுலேயும் கலந்துக்கப் போறேன்.

சஞ்சீவி: அதுக்குள்ளே நான் வீட்டைக் காலி பண்ணிட்டுப் போயிடுவேன்.

(வள்ளியம்மை வருகிறாள்)

வள்ளி: தம்பி, சஞ்சீவித் தம்பி! பேரேட்டைக் கூட்டிப் போட்டுட்டியளா?

சஞ்சீவி: இப்பத்தான் மாடியைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் பண்ணிட்டு உட்கார்ந்திருக்கேன்... இனிமேல்தான் பேரேட்டைக் கூட்டணும்.

வள்ளி: செத்த சீக்கிரம் கூட்டித் தரப்படாதா? தூக்கம் கண்களைச் சுத்துது. ஒங்கிட்டேயிருந்து வாங்கிப் பொட்டிக்குள்ள வச்சுப் பூட்டிட்டு உறங்கப் போகணுமில்லே...?

சஞ்சீவி: அது சரி... ஒங்க தூக்கம் ஒங்களுக்குப் பெரிசு. நீங்க போய்த் தூங்குங்க. நான் காலையிலே தர்றேன்.


வள்ளி: ஆஹாங்! அதை வாங்கிப் பொட்டிக்குள்ளே வைக்கலேன்னா எனக்கு எங்கே ஒறக்கம் வரும்?

சஞ்சீவி: ஏம்மா... புண்ணியத்துக்கு எழுதித் தரேன்னு ஒத்துக்கிட்டா...

வள்ளி: என்னத்தெ புண்ணியத்தைக் கட்டிக்கப் போறீய... நீங்க பண்ணின குத்தத்துக்கு அனுபவிக்கிறீய...

சஞ்சீவி: என்ன பெரிசாக் குத்தம் பண்ணிட்டேன்...

வள்ளி: ...ன....! குரலே உசத்திட்டாப்பில குத்தம் மறைஞ்சு போயிருமோ? ஐயா!



டிவிஎஸ் ரீடிரெட் எப்பொழுதும் பத்திரமானது

டிவிஎஸ் ரீடிரெடிங் செய்யும் டயர்கள் புதிய டயர்களைப் போலவே தோன்றுகின்றன. ஆனால், ரீடிரெடிங் செய்யும்போது, ஒவ்வொரு அம்சத்தையும் ஊன்றிக் கவனித்துக் கண்ணும் கருத்துமாகச் செய்யும் வேலை, டயர்களுக்குப் புதிய தோற்றத்தைக் கொடுப்பதற்காக மட்டும் அன்றி, அவை சாலைகளில் நன்கு பதிந்து செல்லவும், நீண்ட காலம் உழைக்கவும் துணை புரிகின்றது.

ஒவ்வொரு டயரையும் ஒரு முறைக்கு இரு முறையாகப் பரிசோதிக்கின்றனர். டயரில் ஆணி, கண்ணாடித் துண்டு முதலியவை அணுவளவு இருந்தாலும், டயர் பழுதாகிவிடும். ஆகையால் நவீன இயந்திரங்களில் அனுபவமுள்ள நிபுணர்கள் செம்மையாகப் பணியாற்றுகின்றனர். உறுதியாக இருக்கவேண்டும் என்பதற்காக டிவிஎஸ் ஸ்தாபனம் காமெல்பாக் ரப்பரைத் தானே சொந்தமாகத் தயாரிக்கின்றது.

டிவிஎஸ் ரீடிரெட் டயர்கள் வேறு எந்த ரீடிரெட் டயர்களைக் காட்டிலும் அதிக நாள் உழைக்கின்றன.

இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் ரீடிரெட் செய்வது டிவிஎஸ்.

TVS

உங்கள்
நம்பிக்கைக்கு
உரியது
டிவிஎஸ்

**சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்,**

பங்களூர் - கோயமுத்தூர் - களமசேரி - மதராஸ் - புதுக்கோட்டை - சேலம் - செகந்திராபாத் - திருநெல்வேலி - விஜயவாடா

ςι-4073

நீங்க எனக்காக எளுத வேண்டாம், சாமீ! நீங்க என்ன பண்ணுவியளோ எனக்கு இப்பம் லேட்டு வந்தாகணும்.... கொண்டு வாங்க... விடிய விடிய ராக்கண் முழிச்சாவது நான் கணக்கைக் கூட்டிப் போட்டுக்கிடுவேன். காலே யிலே அவுக வந்து நிப்பாகளே!... பொட் டியைக் கிளே வைக்கறதுக்குள்ளே பேரேட் டைக் கொண்டாடீன்னு குதிப்பாகளே...! ஆத்தீ.... நான் என்ன பண்ணப் போறேன்... பொறுப்பில்லாதவுகளைக் குடித்தனம் வைக் காதேன்னு சொன்னேனே? இப்படிச் சமயத் திலே பொசுக்குனு காலே வாரி விட்டுடுவாக ளேன்னு.... அதுக்குஞ் சேர்த்து என்னைத் திட்டப் போறாகளே... நான் என்னன்னு தாங்கப் போறேன்......

(அழ ஆரம்பிக்கிறாள்.)

சஞ்சீவி: ஐயையோ... அழாதீங்கம்மா... இன்னும் பத்து நிமிஷத்திலே கணக்கைக் கூட்டிக் கீழே கொண்டு வந்து வைக்கிறேன். நீங்க போங்க... நீங்க போங்க...

வள்ளி: வாரேன்... ரொம்ப நேரம் வெளக்கெரிக்காதீங்க— (சட்டென்று திரும் பிப் பார்க்கிறாள்; தெரு விளக்குத்தான் எரி கிறது) தெரு வெளக்குத்தான் எரியுதோ...? நான் ஒரு புத்தி கெட்ட செம்மம்... வாரேன்.

சஞ்சீவி: ஐயோ.. பானுக்குட்டியோட பள்ளிக்கூடப் பாடத்திலேர்ந்து அவங்க அப்பா எழுதிய சிறுகதை, ஆச்சியம்மா வீட் டுப் பேரேட்டுக் கணக்கு — இதையும் முடிச் சிட்டு நான் எப்ப என் ஆபீஸ் வேலையைத் தொடங்கறதோ — ஒண்ணும் புரியலையே!...

(ரஞ்சிதம் கையில் ஒரு மூட்டையுடன் வரு கிறாள்.)

ரஞ்சிதம் (வந்தபடியே): மிஸ்டர் தொண தொணப்பு! மாடியிலே இன்னொரு மனுஷன் தூங்கணும்னு நெனைப்பில்லே! இந்தாங்க. இதிலே ஐந்நூறு அட்ரஸ் இருக்கு...

(ஒரு டயரியைத் தருகிறாள்.)

சஞ்சீவி: இந்த விலாசங்களிலே ஒங்க கம்பெனி 'சாம்பின்' சோப்பை ஒங்களோடு சேர்ந்து நானும் வந்து விநியோகம் பண்ண வேணுமா? சேர்ந்தே செய்வோம்.

ரஞ்சிதம்: இல்லே சார்... இந்த வாரத் துக்குள்ளே ஐந்நூறு சாம்பின் சோப்புக்களை யும் விநியோகம் பண்ணியாகணும்...போன வாரமே போய்ப் பக்கத்துத் தெரு காலனி யிலே சொல்லி வச்சிட்டு வந்திருக்கோம்.


சஞ்சீவி (குறுக்கிட்டு): என்ன சொல்லீட்டு வந்தீங்க? அடுத்த வாரம் வரைக்கும் குளிக் காம இருங்கன்னு?

ரஞ்சிதம்: அதேதான் சார்! கரெக்டாச் சொல்லிட்டீங்களே! இந்த டயரியிலே ஐந்நூறு விலாசங்கள் இருக்கு. அடுத்த வாரத்துக்கு நாங்க போக வேண்டிய வீடு, பேரு, விலாசம் எல்லாம் விவரமா இருக்கு... இதை மூணு காப்பி எடுக்கணும்.... கார்பன் பேப்பர் இதோ இருக்கு... பேப்பர்—பின்—பென்ஸில் எல்லாம் இங்கே இருக்கு.

(எல்லாவற்றையும் கீழே வைக்கிறாள்.)

சஞ்சீவி: ஆக, ஒங்க பங்குக்கும் வேலையை என் தலையிலே சுமத்திட்டுப் போறீங்க...

மாணவர்களுக்குச் சமய நூல்கள்



இந்த ஆண்டு இறுதிப் பள்ளிப் படிப்பை முடித் துக் கொண்டு எஸ். எஸ். எல். ஸி பரீட்சை எழுதும் தியாகராய நகர் ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி யைச் சேர்ந்த சுமார் 500 மாணவர்களுக்கு அவர்கள் என்றும் இந்து தர்மத்தையும் ஒழுக்க நெறியையும் கடைப்பிடிக்கும் வகையில், அன்பளிப்புகள் வழங்கப் பட்டன. ஒவ்வொரு மாணவனுக்கும் ஸ்ரீ அண்ணா அவர்கள் விளக்கம் எழுதிய பகவத் கீதை, விவேகா னந்தர் ஆற்றிய சிறு சொற்பொழிவுத் தொகுப்பு, ராஜாஜி எழுதிய துறவி லாரென்ஸின் தோழமை யோகம் ஆகிய நூல்களைத் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தமது திருக்கரங்களால் 13-3-72 அன்று வழங்கினார். வாரியார் குருநாதரிய ரின் அறநெறிகளை விளக்கி, மாணவர்களுக்குச் சமயப் பற்று உண்டாகும் வகையில் அரிய சொற் பொழிவு நிகழ்த்தினார்.

ரஞ்சிதம்: நீங்க பணத்தை ஒழுங்கா கட்டி யிருந்தீங்கன்னு இந்த வேலைகளை நாங்களே பார்த்திருப்பமே... எழுதி வைங்க சார்.

(போகிறாள்.)

சஞ்சீவி: சரி, போங்க. ஸ்கூல் பாடம், பேரேட்டுக் கணக்கு, பத்திரிகைக் கதை, அட்ரஸ் லிஸ்ட்... இத்தனையும் போக ஆபீஸ் வேலை!

ரஞ்சிதம் (போய்க்கொண்டே): மிஸ்டர்! முணு முணுக்காம வேலையைப் பாருங்க... தூக்கம் கெட்டுப் போகுது.

சஞ்சீவி: வேண்டியதுதாம்மா! நான் எந்தன்னு பார்த்துத் தொலைப்பேன்... வைதேகியம்மா பாட்டு வாங்கப் போறாங்க ளேன்னு பரிதாபப்பட்டுப் பழியை எம் பேர்லே போட்டுக்கிட்டா, மத்தவங்க பாவத் தையும் சேர்த்துச் சுமக்கிறேன்... என்ன கணக்கு இது... நாலாங் கிளாசுக்கு ஏண்டா காலமும், தூரமும்! ஒரு மைல் தூரமுள்ள தெருவைக் கடக்க ஒரு மணி நேரமானால்...சீ!

(பானுவின் நோட்டை நகர்த்திவிட்டுப் பேரேட் டுப் புத்தகத்தை எடுக்கிறாள்.)

சஞ்சீவி (தொடர்ந்து): சீ...ஆயிரத்து நூத்தி எழு... நூத்தேழு... நூத்தேழும் பதி

னும்... நூத்தி இருபத்தொன்னு....121, 121... சரி. அதை விடு!

(பத்திரிகைக் கதையை எடுக்கிறான்)

'அமாவாசை இரவு... நல்ல இருள்!... பின்னே நிலாவா காயும்? ஏண்டா இவன்லாம் கதை எழுத வந்து என் பிராணனை வாங்குறான், காப்பி எடுத்துத் தாடான்னு? தூக்கம் வேறே கண்ணைச் சுத்துது. ஹாவ்... யப்பா..

(அடுத்து அட்ரஸ் லிஸ்ட்)

'மிஸஸ் ரங்கா ராமரத்னம்... ஆபீஸர் காலனி, தொழிலாளர் பேட்டை' அட சத்... ஒரு அட்ரஸ்தான் எழுதி முடிச்சேன்.... அதுக்குள்ளே தடுமாறுது...என்னய்யா இது, தான வாத்தியக் கச்சேரி மாதிரி ஒவ்வொண்ணுலேயும் கொஞ்சம் கொஞ்சமா....

(கண்ணயர்ந்து தூங்கி இலேசாகக் குறட்டைச் சத்தம் கிளம்புகிறது. அதே நேரத்தில் மொட்டை மாடியின் வலது கோடியில் ஓர் உருவம் ஏறிக் குதிக்கும் சத்தம் கேட்கிறது.)

(திடுக்கிட்டு): டேய்... டேய்.... யார்ரா அது.... அடேய்.... விட்டேனு பார்...டேய் ஏ.....ஏ.....ஏய்.....

ரஞ்சிதம் (பதறியடித்து வெளியே வந்து): ஐயையோ..... திருடன்... திருடன்...

வள்ளி (கீழே இருந்தபடியே): அடி ஆத்தீ.. எங்க வீட்டு ஐயா இல்லாத நேரமா பார்த்து.

சஞ்சீவி: ஒங்க பேரேட்டைக் கொள்ளையடிக்க வந்தான்...... !

வைதேகி (கீழிருந்தபடி): என்ன சத்தம்...?

பட்டாபி: இதோ வந்துட்டேன்.

ரஞ்சிதம்: லைட்டைப் போட்டுப் பாருங்க. ஐயோ, லைட் வராதுன்னு தெரிஞ்சேதான் துணிஞ்சு வந்திருக்கான்.

சஞ்சீவி: நல்ல காலம் நான் ஒடனே முழிச்சுக்கிட்டேன். தண்ணிக் குழாயைப் பிடிச்சுகிட்டுச் சரேல்னு எறங்கிப் போயிட்டான்.....

பட்டாபி (மேலே வந்து): என்ன சஞ்சீவி.. திருடன் யாரு, ஒங்க கிளாஸ்மேட்டா....?

சஞ்சீவி: ஆமாம் சார், ஒங்க தம்பி !

ரஞ்சிதம்: பட்டாபி சார்.... டார்ச்சை இப்படிக் குடுங்க.... என் அறையிலே எதெது போச்சுன்னு பார்க்கணுமே.....

பட்டாபி: பாருங்கோ, பாருங்கோ....

(பட்டாபி தண்ணீர்த் தொட்டி அருகே வந்து நின்று எட்டிப் பார்க்கிறான்.)

அடடே.... வாட்டர் டாங்க் பக்கத்தில் பர்ஸ் கெடக்குதே.....

(குனிந்து எடுக்கிறான்.)

ஒங்க பர்ஸ்ஸா இது ரஞ்சிதம்?

ரஞ்சிதம்: என் பர்ஸ் இல்லே சார்.....!

பட்டாபி: சஞ்சீவி, இது உம்ம பர்ஸ்ஸா ?

சஞ்சீவி: எங்கிட்டே பர்ஸே இல்லையே, பட்டாபி சார் !

பட்டாபி: யாரு பர்ஸ்ஸா இருக்கும்!

சஞ்சீவி: தெரியலியே.... குடுங்க இப்படி!

(வாங்கிப் பார்க்கிறான்)

பட்டாபி: ரஞ்சிதம், ஒங்க ரூம்லே வேற என்னென்ன போச்சுன்னு பாருங்க.

ரஞ்சிதம் (அறையில் இருந்தபடியே) : அப்பாடா.... நல்ல காலம் ஒண்ணும் திருட்டுப் போகலே சார்..... எம் பர்ஸ்... பை.... கடிகாரம்... எல்லாம் அப்படியே இருக்கு....

பட்டாபி: அப்போ இது யாரோட பர்ஸ்?

சஞ்சீவி: திருட்டுப் பய பர்ஸ்தான்! எறங்கி ஓடறதுக்குள்ளே அவனே இழுத்துப் பிடிச்சுச் சண்டை போட்டேனு ? அப்ப விழுந்திருக்கு. பாவம் வசதியற்ற திருடன் போல இருக்கு. நூறு ரூபாய் சொச்சம்தான் வச்சிருக்கான்.

ரஞ்சிதம்: பரவாயில்லே சஞ்சீவி சார்..... அந்தப் பணத்தை என்ன பண்ணப்போறீங்க?

(பட்டாபி பர்ஸை வாங்கி அதிலுள்ள ரூபாய்களை வெளியில் எடுத்துப் பாகம் பிரிக்கிறான்)

பட்டாபி: சஞ்சீவி ! வைதேகியண்டே நீர் வாங்கின எலெக்ட்ரிக் பில் பணம் அறுபத்தேழு ரூபாய் எடுத்துனுட்டேன்.

சஞ்சீவி (அதிர்ச்சியுடன்): சார்....!

பட்டாபி: ஏன் அலர்றீர்? எந்த ஜன்மத்திலே நீர் மொத்தமா 67 ரூபாய் தரப் போறீர்? ஆண்டவனைப் பார்த்துத் திருடன் கிட்டே கொடுத்தனுப்பிச்சிருக்கான்னு சந்தோஷப்படாமே......

ரஞ்சிதம்: சரி.... மிச்சப் பணத்தையாவது அவர்கிட்ட.....

பட்டாபி: ஏன்.... சஞ்சீவி அறைக்கு மட்டுந்தான் திருடன் வந்தானு ? நாம மூணு குடித்தனக்காரரா இருக்கமே.... நம்ம வீட்டுக்கும் திருடன் வந்ததாத்தான் கணக்கு..... ஆளுக்குப் பத்து ரூபா ஷேர்.......!

சஞ்சீவி: நாம என்ன கோ—ஆபரேடிவ் சொஸைட்டியா நடத்தறோம்...?

பட்டாபி: ஹாஸ்யம் வேறயா.... இந்தாரும், சஞ்சீவி..... என் ஷேர் பதினேஞ்சு ரூபா—நான் பெரிய போர்ஷனுக்கியோ.....!—வீட்டுக்காரம்மா ஷேர் பத்து ரூபா எடுத்துனுட்டேன்...... மிஸ் ரஞ்சிதம், இந்தாங்கோ, ஒங்க பத்து ரூபா......

(கொடுக்கிறார்)

ரஞ்சிதம்: சஞ்சீவி சாருக்கு.....?

பட்டாபி: மிச்சம் மூணு.... கொடுத்துட்டேனே.....

(பர்ஸைப் போடுகிறான்)


சஞ்சீவி: கையிலேயும் மூணு.... நெத்தியிலேயும் மூணு !

காட்சி நான்கு


நேரம்: மறுநாள் காலை.

(கையில் டயரி, பைல் கட்டுகள், பேரேட்டுப் புத்தகம் காகிதக் கத்தை சகிதம் சஞ்சீவி அறையை விட்டு வெளியேறுகிறான்.)

சஞ்சீவி: பானுக்கண்ணு.... ஒன் ஸ்கூல் பாடம் தயார்.... பட்டாபி சார்... இதோ, ஒங்க போட்டிக் கதை.... மிஸ் ரஞ்சிதம் அட்ரஸ் லிஸ்ட் மூணு செட், மிச்சம் பேப்பர், பின், கார்பன் இதில் இருக்கு..... வீட்டுக்காரம்மா பேரேட்டுக் கணக்கு முழுக்கக் கூட்டிப் போட்டாச்சு... லாபத்தை வெளியே சொல்ல மாட்டேன் — வைதேகியம்மா, எலெக்ட்ரிக் பில் பணம் 67 ரூபாயைப் பட்டாபி சார்கிட்டே குடுத்திட்டேன்.... மறந்திடாமல் போய்க் கட்டிட்டு வந்திடுங்க... இந்தாங்க, அறைச் சாவி.. எனக்கு ஆபீசுக்கு நேரமாச்சு... நான் வர்றேன்!



GUVAN/ULL/7113



ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து நின்றவுடனேயே நிர்மலா கணவனைப் பார்த்து, ''இங்கிருந்து நாற்பது மைல் தூரம்தான் அந்த ஆஸ்பத்திரி!'' என்றாள். அவள் கண்களில் ஏக்கமும் சோகமும் தேங்கி நிற்பதைக் கண்டு கிருஷ்ணன் ஆதரவோடு அவள் கையைப்பற்றிக் கொண்டான். பின் மென்மையான குரலில், ''அதை மறந்துவிடு, நிர்மலா. அது தீர்ந்து போன விஷயம்!'' என்றான்.

அவள் கண்களில் மட்டும் அந்தச் சோகம் மாறவில்லை. ''அஞ்சு வருஷம் ஆயிடுத்து !'' என்றவள் சூனியத்தை வெறித்துப் பார்க்கலானாள்.

கிருஷ்ணன் ஒரு கணம் அவளுடைய சோகத்தில் தானும் தோய்ந்து நின்றுவிட்டான். குழந்தைகளின் உற்சாக மயமான குரல்கள் அவனைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்தன.

''அப்பா ! டாக்ஸி எங்கே? டாக்ஸியிலே போகலாமா?'' என்று கண்கள் மலரத் தன் பிஞ்சுக் குரலை அமுதமாக வர்ஷித்தாள், மூன்று வயதுக் குழந்தை கல்பனா. ஓராண்டே நிறைந்த பாலகன் ராஜாவோ தாயாரின் புடவையைப் பற்றியவாறே சந்தோஷ மிகுதியில் ஸ்பஷ்டமில்லாமல் கூச்சலிட்டான்.

''குழந்தையைத் தூக்கு, நிர்மலா ! நான் டாக்ஸி பிடிக்க வேண்டாமா ?'' என்று மிருதுவாகச் சொன்னான் கிருஷ்ணன். நிர்மலா தன் நினைவுகளை உதறிவிட்டுச் சற்றே புன்னகை புரிந்தவாறே குழந்தையை வாரி அணைத்துக் கொண்டாள். ''நான் சாமான்களை யெல்லாம் பார்த்துக்கறேன். கூலிக்கு ஏற்பாடு செய்யுங்கள்!'' என்றாள்.

''சரி!'' கிருஷ்ணன் மகளைத் தூக்கிக் கொண்டு சென்றான்.

அரை மணி நேரத்துக்குள் அவர்கள் அந்தப் புது வீட்டில் அடி எடுத்து வைத்துவிட்டார்கள். இருவருக்குமே ஊர் புதிது. கிருஷ்ணன்


மாற்றலாகி வந்திருந்தான், மனைவி மக்களோடு. அவன் வேலை பார்க்கும் கம்பெனியில் 'குவார்ட்டர்ஸ்' கொடுத்திருந்தார்கள்.

இங்கிருந்து நாற்பது மைல் தூரத்திலுள்ள நகரத்திலும் அவன் வேலை செய்திருக்கிறான். அது சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்பு. ஆனால் கசப்பான அனுபவத்தைத் தந்துவிட்டனர் அது.... அதை அவன் மறந்துவிட்டான், ஞானிபோல்....அவளால் தான் மறக்க முடியவில்லை.

கிருஷ்ணன், நிர்மலா... கல்பனா, ராஜா... அழகே உருவான சிறு குடும்பம் அது. கிருஷ்ணன் உழைப்பாலேயே உயர்ந்து இப்போது கை நிறையச் சம்பளம் வாங்கும் பொறுப்புள்ள அதிகாரி. நேர்மையும் பண்பும் உடையவன். நிர்மலா அழகின் இலக்கணம். பொறுமையின் இருப்பிடம். கல்பனா, ராஜா இருவருமே நெஞ்சை அள்ளும் சித்திர வடிவங்கள்தாம்...

இன்ப மயமான வாழ்வில் கருநிழலென நினைவில் மோதும் அந்த அனுபவத்தில் யாருடைய குற்றமுமில்லை. துரதிர்ஷ்டத்தின் ஒரு சான்று. அவ்வளவுதான்.....

நிர்மலாவுக்குக் குவார்ட்டர்ஸ் மிகவும் பிடித்துப் போய்விட்டது. கச்சித



நாற்பது மைல்களுக்கப்பால்...

ருக்மிணி பார்த்தசாரதி

மான அறைகள், சிறு தோட்டம்... வீட்டுக்கெதிரே திறந்த வெளி..... காற்றில் நறுமணம், சுகாதாரம். வெகு அருகே மார்க்கெட், தபாலாபீஸ் போன்ற வசதிகள்

நாட்கள் வழுக்கிக் கொண்டு ஓடின. கல்பனா மான்டிஸொரியில் சேர்த்துவிட்டாள். அக்கம் பக்கத்துப் பெண்களோடு நிர்மலா ஸ்நேகம் பிடித்துக் கொண்டாள். வாழ்க்கை சிக்கலின்றி, பிரச்னையின்றிச் செல்லலாயிற்று.

சுமார் ஆறு மாதங்கள் கழிந்தபின் நிர்மலா ஓர் இரவு கணவனிடம், ''எனக்கோர் ஆசை'' என்றாள்.

பூரண சந்திரன் பொலிந்த அழகுமயமான இரவு. நிலாச் சாப்பாட்டுக்குப் பிறகு, குழந்தைகள் மேல் மாடியிலேயே பெற்றோரின் மடியில், உறங்கிப் போய்விட்டார்கள்.

''என்னதான் ஆசை?'' என்று கேட்டான் கிருஷ்ணன்.

''ஒரு தடவை, ஒரே ஒரு தடவை, அந்த மருத்துவக் கல்லூரிக்கு — ஆஸ்பத்திரி பக்கத்தில் — போக

னும் என்கிற ஆசை. நாற்பது மைல்தானே? அதிக தூரமில்லே....'' அவள் குரலில் ஆவலோடும் ஏக்கத்தோடும் இழைந்த துயரத்தை அவனால் உணர முடிந்தது.

அவன் மௌனமாக அவளைப் பார்த்தான். மறக்க வேண்டிய ஒன்றைத் திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டு வந்தது போக, நேரில் சென்று காண இவள் விரும்புவது எத்தகைய அறிவீனம் !

'' என்ன ? நான் சொன்னது கேட்கலியா ?'' என்றாள் நிர்மலா.

'' இது பைத்தியக்கார ஆசை நிர்மலா...! வாழ்க்கை இப்போது சந்தோஷமாய்ப் போகிறபோது, அந்தக் கசப்பை மறுபடியும் அனுபவிக்க நீ ஆசைப்படறது முட்டாள் தனம் இல்லேயா?''

'' இவ்வளவு கிட்டத்தில் வந்தப்புறம் அங்கே போகாமலிருப்பது மனசுக்குக் கஷ்டமாக இருக்கே!'' அவள் குரலிலிருந்த ஏதோ இனம் விளங்காத பாசம் அவன் மனத்தில் ஆழப் பதிந்தது.

''பார்க்கலாம்....'' என்றான் கிருஷ்ணன்.

அவன் அதற்கு மேல் அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை.

காலம் பறந்தோடியது....கோடை மாறி மழை காலம். பின் காற்றில் தண்மை. உடல் நடுக்கும் குளிர். நீண்ட துயிலுக்குப் பிறகு கண் விழிக்கும் தேவதை போல் இயற்கை பூத்துக் குலுங்கும் வசந்த காலம்.... மெள்ள மெள்ள மெள்ள வெம்மை ஏறும் கோடை.

ராஜா இப்போது மான்டிசோரி மாணவன். கல்பனா, 'யூனிபார்ம்' அணிந்து பள்ளி செல்லும் முதல் வகுப்பு மாணவி. கிருஷ்ணனின் பதவி உயர்வு. வாழ்க்கை வளத்தில் இன்னும் அதிகப் பொலிவு.

நாற்பது மைல்களுக்கப்பாலிருந்ததை நிர்மலா மறந்துவிட்டாளா? அதைப் பற்றி அவள் பிரஸ்தாபிக்கவேயில்லேயே ? ''அவள் மறந்து விட்டாள்!'' என்று நினைத்து நிம்மதியடைந்தான் கிருஷ்ணன்.

பின், வேலை மாற்ற உத்தரவு...அவர்கள் இந்த ஊரை விட்டுக் கிளம்பிவிட வேண்டும். ஆயிற்று.... இன்னும் இரண்டு நாட்களில் புறப்படப் போகிறார்கள்.

'' நாளைக்கு டாக்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள். நாற்பது மைல்தானே ? சாப்பாட்டுக்குப் பிறகு கிளம்பினால் பொழுது சாயறதுக்குமுன் திரும்பிடலாம்!'' என்றாள்நிர்மலா.

''வேண்டாம், நிர்மலா.... ஏன் இப்படித் தன்னைத் தானே வதைக்கக்கப் பார்க்கணும்? இது சுத்தப் பைத்தியக்காரத்தனம்.''

''அங்கே போகாவிட்டால் என் மனசில் குறை ஆயுசெல்லாம் தீராமல் வதைச்சுண்டே யிருக்கும்....'' அவள் குரல், கண்கள் எல்லாமே யாசித்தன.

'' குழந்தைகள் பார்க்கிற இடமா, அது?''

''அவர்களைப் பக்கத்து வீட்டில் விடலாம்.. நான் ஏற்பாடு செய்யறேன்....''

'' அங்கே போய் என்னன்னு சொல்ல முடியும் ?''

'' அந்த மருத்துவக் கல்லூரியைப் பார்க்க ஆசைப்படறதாய்ச் சொல்லுங்கள். முக்கியமாய், 'ஸ்பெஸிமன்' வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்.....''

'' உன் இஷ்டம்.....''

அன்று மாலை அவன் யார் யாரையோ சந்தித்துப் பேசி மறு நாள் தானும் தன் மனைவியும் அந்த மருத்துவக் கல்லூரியைப் பார்வையிட ஒப்புதல் வாங்கிக் கொண்டான்.

மறு நாள் குழந்தைகளை அடுத்த வீட்டுப் பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டு இருவரும் கிளம்பினார்கள். டாக்ஸி பறந்தது. அவர்கள் மனமும் கூடத்தான்.....

இதோ, மருத்துவக் கல்லூரி.... அதன் தலைவர் அவர்களை எதிர்கொண்டு அழைத்தார். கூடவே வந்து கல்லூரியின் பல பகுதிகளைக் காண்பித்தார்.

''இவை 'ரிஸர்ச் ஸ்காலர்'களின் அறைகள். இது பாடம் நடக்கும் அறை.... இது 'டிஸெக்ஷன்' அறை. எதிர்ப் பக்கம் இங்கு வேலை செய்யும் வைத்தியர்களின் விடுதிகள். அது, இந்தக் கல்லூரியோடு சம்பந்தப்பட்ட ஆஸ்பத்திரி.....''

அவர்கள் பார்த்துக் கொண்டே நடந்தார்கள். தேடி வந்தது இதையல்லவே !

''இது 'ஸ்பெஸிமன்'களின் அறை...... சாதாரணமாக, புற்றுநோய் போன்ற நோயினால் பீடிக்கப்பட்ட வெவ்வேறு உறுப்புக்களைப் பதப்படுத்தி வைத்திருக்கிறோம். மருத்துவ மாணவர்களின் கல்விக்கு இவை பயன்படுகின்றன.... இவற்றைப் பார்க்க வேண்டுமா ?''

''ஆமாம் !'' என்றான் கிருஷ்ணன்.

கொழுப்புச் சத்து அதிகமாகிவிட்ட 'லிவர்', நோயுற்ற இதயம்.... இப்படிப் பலப் பல.... இவற்றில் மனம் லயிக்காமல் நிர்மலா நடந்தாள்.... பின், சட்டென்று, கால்கள் நின்று விட்டன.

'' இந்தக் கல்லூரியோடு சம்பந்தப்பட்ட ஆஸ்பத்திரியில் பிறந்த 'ஃப்ரீக்' குழந்தைகள் இவை.... மான்ஸ்டர்ஸ் !''

அவள் பார்வை குத்திட்டு நின்றது. அதோ அந்தக் குழந்தைதான். அந்த ''மான்ஸ்டர்''.... உடல் வளராமல் தலை மட்டும் வளர்ந்திருந்த கோரம்....

அவள் நினைவு, காலத்தில் பின்நோக்கிப் பாய்ந்தது. இந்த ஆஸ்பத்திரிக்குத்தான் அவள் வந்திருந்தாள், தன் முதல் மகப்பேறுக்காக.... இரண்டு நாட்கள் நரக வேதனை அனுபவித்த பிறகு மங்கிய நிலையில் அவள் செவியுற்ற வார்த்தைகள்.....

''ஸ்டில் பார்ன்!''

'' என்ன பயங்கரம் ?''

''வாட் ஏ மான்ஸ்டர் !''

அவள் நினைவு தெளிந்து தன் குழந்தையைக் காண விரும்பியபோது நர்ஸ் எத்தனையோ சொல்லிப் பார்த்தாள். ''வேண்டாம் அம்மா.... குழந்தை சரியாக வளரவில்லே. நீ பார்த்தால் பயந்து போவாய். எப்படியும் இறந்தாயிற்று....''

கடைசியில் அவளுடைய பிடிவாதம்தான் வென்றது. தன் குழந்தையைக் கண்டவள் அதிர்ந்து விட்டாள். நற்குணங்களும் அழகும் கூடிய இருவருக்கு இப்படி ஒரு 'மான்ஸ்டர்' பிறந்த விஷயம்தான் எத்தகையது?

''இதை.... இதை.....'' அவள் குரல் ஒடிந்து விட்டது.

"ஸ்பெஸிமன் வார்டில் வைக்கலாம், அதாவது பெற்றோருக்கு ஆட்சேபணை இல்லையென்றால்......"

மருத்துவ மாணவர்களுக்கு மற்றொரு ஸ்பெஸிமன்......

கல்லூரித் தலைவருக்கு நன்றி சொல்லி விட்டு இருவரும் திரும்பினார்கள்.... டாக்ஸி பறந்து கொண்டிருந்தது. நிர்மலா ஒன்றும் பேசவில்லை.

"திருப்திதானே? இப்படித் தன்னைத் தானே வதைக்கக்கத்தானே நீ ஆசைப்பட்டாய்?" என்று கேட்டான் கிருஷ்ணன்.

"உங்களுக்குப் புரியாது...." அவள் சோகம் தெறிக்கும் கண்களால் அவனைப் பார்த்தாள். "மான்ஸ்டரோ, என்னவோ — அது என் குழந்தை. என் முதல் குழந்தை... அதைச் சுமந்தபோது நான் எத்தனை அழகழகாய்க் கனவு கண்டேன், தெரியுமா? என் உள்ளே அது வளர்ந்த காலத்தில் நான் அனுபவிச்ச சந்தோஷத்தைக் கல்பனாவையும் ராஜாவையும் சுமக்கறச்சே அனுபவிக்கவில்லே. இந்த இரண்டு பேரும் என்னுள் வளரச்சே நான் எப்படியெல்லாமோ பயந்து பயந்து நாட்களைக் கழிச்சேன். அழகே உருவாய்ப் பிறந்த இவர்கள் இரண்டு பேரும் எனக்கு உயிருக்கு மேலானவர்கள்தான். ஆனால் அது-அந்த மான்ஸ்டர் — என்னுடனேயே, ஒன்றிப் போன ஓர் அம்சம், அதை மறுபடியும் கண்ணால் கண்டதில் எனக்கு அதிர்ச்சியில்லே, நிம்மதிதான்......" அவள் குரல் தேய்ந்தது.

கிருஷ்ணன் அவள் கைகளை ஆதரவோடு பற்றிக்கொண்டான். "புரியறது!" என்றான்.

சிறிது நேரத்துக்குப்பின் நிர்மலா சொன்னாள். "பரவாயில்லே.... சீக்கிரமே திரும்பி விட்டோம். கல்பனாவுக்கும் ராஜாவுக்கும் பசிக்கும்." அவள் தாய்மையின் கனிவோடு கூறியதைக் கேட்டவன் ஒரு கணம் திக்குமுக்காடிப் போனான்.

படித்துப்பாருங்கள்

நமது பட்சிகள்

'நமது பட்சிகள்' என்ற நூலை ராஜேஸ்வர் பிரசாத் நாராயண் சின்ஹா சுவைபடத் தந்திருக்கிறார். பல பறவைகளைப் பற்றிய ருசிகரமான தகவல்களும், கதைகளும் இந்த நூலைப் படிக்கும் ஆவலைத் தூண்டுகின்றன.

எழுத்தாணிக் குருவியின் கொண்டை சம்பந்தமாக முஸ்லிம் நாடுகளில் ஒரு ரஸமான கதை வழங்குகிறது. அதி விவேகியான சாலமன் அரசர் ஒரு சமயம் பறக்கும் சிம்மாசனத்தில் அமர்ந்து வான வீதியில் போய்க் கொண்டிருந்தார். வெய்யில் கடுமையாக இருந்ததால் அவர் வாட்டமுற்றார். அப்போது கழுகு ராஜா அவ்வழியே போய்க் கொண்டிருந்தான். தம் மீது நிழல் விழும் விதத்தில் பறக்கும்படி அவனை ஸாலமன் கேட்டுக் கொண்டார். கழுகு ராஜா மறுத்தான். அவற்றின் கழுத்தில் இறகுகளே முளைக்கக் கூடாது என்று ஸாலமன் சபித்தார். எழுத்தாணிக் குருவிகளின் ராஜா ஸாலமன் விருப்பப்படி குடை பிடிப்பதுபோல் பறந்தது அவர் மனத்தைக் கவர்ந்தது. அதற்கு வரம் அளிக்க சாலமன் முன்வந்த போது எழுத்தாணிக் குருவிகளின் ராஜா "தங்கக் கொண்டை வேண்டும்!" என்று வரம் வேண்டியது. இந்த வரம் பெற்றதால் மனிதர்களின் துன்புறுத்தலுக்கு உள்ளாயிற்று. குலமே அழிந்துவிடும் நிலையில் எழுத்தாணிக் குருவி, ராஜா சாலமனிடம் வந்து குலத்தைக் காப்பாற்ற இறைஞ்சியது. தங்கத்துக்குப் பதில் இறகுக் கொண்டை முளைக்க சாலமன் அருளினார். எழுத்தாணிக் குருவிக்கு 'ஷா சுலேமான்' என்ற பெயருண்டு.

இப்படி பல சுவையான தகவல்களைத் தரும் இந்நூலுக்குக் கண்ணைக் கவரும் பறவைகளின் வண்ணப்படங்கள் அழகூட்டுகின்றன. குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்து அறிய வேண்டிய விஷயங்கள் இந்நூலில் இருக்கின்றன.

பிரசுரம்: பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், டில்லி; விலை: ரூ. 3.


தெய்வப் புலவர் திருவள்ளுவர்

"ஜீவா" என்கிற நாரண துரைக்கண்ணன் திருவள்ளுவரின் ஜீவ சரிதம் பற்றி ஜீவனுள்ள ஒரு நாடகத்தை ஆக்கித் தந்திருக்கிறார். இறைவன் ஊர்த்துவ நடனம் ஆடியதன் உட்பொருளைத் திருவள்ளுவரிடம் கேட்டறியுமாறு தேவர்களை அனுப்பியது உட்பட பல கர்ண பரம்பரைக் கதைகளை — 'பகுத்தறிவு'க்குள் வராத அற்புதங்களையும் கோத்து ஆக்கியுள்ள இந்த நூலுக்கு திரு கருணாநிதியிடம் சிறப்புரை வாங்கியிருப்பது ஆசிரியரின் தைரியத்துக்குச் சான்று எனலாம். ஆங்காங்கே திருவள்ளுவரின் வாழ்வோடு வாழ்வாகக் குறட் பாக்களை இழைத்துத் தந்திருப்பது பாராட்டுக்குரியது. நாடகச் சுவை குன்றாமலே நிகழ்ச்சிகள் ஓடுகின்றன.

திருவள்ளுவர் சம தரிசனம் வாய்த்த மகான். சந்தேகமேயில்லை. அதை அவரது ஜீவிய சரித்திரத்தில் விளக்க வேண்டியது அவசியம்தான். அதற்காக, சமத்துவத்தின் விரோதிகளாகத் தங்களை ஒரு சமூகம் உயர்த்திக்கொண்டதாகக் காட்டி, அவர்களிடம் ஆத்திரத்தைக் கொட்டி அந்தச் சமூகத்தை மற்றவர்களுக்குச் சமதையாகக் கூட வைக்காமல் கீழே இறக்குவது என்ன சமத்துவமோ? பானகத் துரும்பு போன்ற இப்படிப்பட்ட கட்டங்களை இந்த நாடகத்தில் சேர்க்காமலே இருந்திருக்கலாம். அன்புருவாம் திருவள்ளுவரைப் பற்றிய விஷயத்தில் துவேஷத்துக்கும் காழ்ப்புக்கும் தூண்டுதல் இருக்கலாமோ?

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சரிதையில், இன்று வழக்கில் உள்ள அராபிய, பெர்சிய வார்த்தைகள் உட்படப் பல பொருந்தாத வசனங்கள் காணப்படுவது ஒரு குறை.

வெளியீடு: ஜீவோதயம் பிரசுரம், சூளைமேடு, சென்னை—24; விலை: ரூ. 4.00.





குறைதீரப்பா! குருவாயூரப்பா!

சாலக்குடி சேகரன் நாயர் வம்புதும்புக்குப் போகாத ஒழுங்கான ஆசாமி என்று பெயர் எடுத்தவர். ஊருக்கு ஒதுப்புறத்தில் சொந்த வீடு. ரயில் நிலையத்துக்குப் பக்கத்தில் ஒரு டீக்கடை. சுமாரான வியாபாரம். நாயருக்குக் குடும்பச் சுமை அதிகம் இல்லாததால் தேவைகளும் ஆசைகளும் குறைவு. ஒரே மகனும் பட்டாளத்தில் சேரப் போவதாகச் சொல்லி வீட்டை விட்டுக் கிளம்பிப் போய், பட்டாளத்திலும் சேராமல் வீட்டுக்கும் திரும்பாமல் காணாமலே போய்விட்டான். நாயர் இந்தத் துக்கத்தையும் ஏமாற்றத்தையும் மறக்க, மாதந்தோறும் குருவாயூரப்பனைப் போய்த் தரிசனம் செய்து வரும் நியதியை மேற்கொண்டிருந்தார்.

மகன் பிறந்து பத்து வருஷங்கள் கழித்துப் பிறந்தவள் ஒரே மகள் அம்முக்குட்டி. வாக இல்லாத குறையைத் தவிர்க்க நாயர் தம் மகளை ஒரு மகன் போலவே வளர்க்கத் தொடங்கினார். அம்முக்குட்டி நல்ல அழகி. ஆனால் நளினத்துடன் நாயர் கொடுத்த செல்லத்தால் ஒருவித முரட்டுச் சுபாவமும் அவளுடன் கூடவே வளர்ந்து வந்தது. பிடிவாதமும் அவளுக்கு அதிகம்.

அம்முக்குட்டி பள்ளிப் படிப்பை முடித்தவுடன் ஆசிரியைப் பயிற்சிப் படிப்பையும் முடித்தாள். சாலக்குடியில் வேலை கிடைக்கவில்லை. இரண்டாவது மைலிலுள்ள ஒரு கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் வேலை கிடைத்தது. சாலக்குடியிலிருந்து இரண்டு மூன்று ஆசிரியைகள் அந்தப் பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்ததால் அம்முக் குட்டியும் அந்தக் கோஷ்டியில் சேர்ந்து கொண்டாள். ஒரு மகன் போலவே அம்முக்குட்டி சம்பாதிக்க ஆரம்பித்தது நாயருக்குப் பெருமையாகவே இருந்தது. அவள் கொண்டு வந்த ஊதியத்தை அப்படியே அவளுக்கென்று தனியாகச் சேமித்து வைக்க ஆரம்பித்தார். சேமிப்பு வளர்வதைக் கவனிக்க ஆரம்பித்த நாயர், அம்முக்குட்டியின் அழகும் கவர்ச்சியும் அதிகமாக வளர்வதைக் கவனிக்க மறந்துவிட்டார். இதனால் சிக்கல்கள் தோன்ற ஆரம்பித்தன.

அம்முக்குட்டி ஆசிரியை வேலை மேற்கொண்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு

கல்யாணக் கதைகள் - 13

கோமதி ஸ்வாமிநாதன்

நாள் மாலை வழக்கமான நேரத்துக்கு முன்னுலேயே தகப்பனாரின் டீக்கடைக்கு வந்தாள். அவள் கடைக்கு வருவது என்பது அபூர்வமான நிகழ்ச்சி. வீட்டுக்குப் போக வேண்டியவள் ஏன் இங்கு வந்தாள் என்று அவருக்குப் புரியவில்லை. அவள் முகத்தில் கடுமை பரவியிருந்தது புரிந்தது.

"அப்பா! இனிமேல் அந்தப் பள்ளிக்கூடத்துப் பக்கம் கால் எடுத்து வைக்கமாட்டேன். அந்தப் பாவி டிராயிங் மாஸ்டர் குட்டப்பன் இன்றைக்கு என்னிடம் நோட்டுப் புத்தகத்தை வாங்கும் சாக்கில் கையைப் பிடித்து இழுத்துவிட்டான். அவன் முகத்தில் காறித் துப்பினேன். ஆனால் அவன் பைத்தியக்காரன் மாதிரி சிரிக்கிறான். அயோக்கியன்" என்று சீறினாள் அம்மு.

நாயர் விழித்துக் கொண்டார். மகளுக்குத் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்ற



எண்ணம் அப்போதுதான் அவர் மனத்தில் பளிச்சிட்டது. "அம்மு! நீ வீட்டுக்குப் போ, அம்மா! அந்த ஸ்கூலுக்குத் தலையை முழுகிடு" என்று சமாதானப் படுத்தி அனுப்பி வைத்தார். அவருக்குக் குட்டப்பனைப் பற்றித் தெரியும். இதற்குமுன்னால் எத்தனையோ புகார்கள் இந்த ரகத்தில் வந்தும் பள்ளி நிர்வாகம் அவன்மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. தலைமை ஆசிரியரே அவனுக்கு உடந்தை. ஆகவே, நாயர் அம்முக்குட்டி வேலைக்குப் போகாமல் இருப்பதேமேல் என்று நிச்சயித்து விட்டார். அந்த மாதம் குருவாயூரப்பன் சந்நிதிக்குப் போனபோது மனமுருகிப் பிரார்த்தித்துக் கொண்டார். அவருக்கு உறவில் பையன்கள் யாரும் இல்லாததால் தெரிந்தவர்களிடம் எல்லாம் சொல்லி வைத்தார்.

அம்முக்குட்டி வீட்டில் இருந்தாலும் ஆபத்து நெருங்காமல் இல்லை. ஒருநாள் அவள் கடைத் தெருவில் சாமான் வாங்கிக் கொண்டிருந்த போது சாவக்குடியிலுள்ள மோட்டார்க் கம்பெனி முதலாளி மகன் கேசவன் திமிருடன் அவளை நெருங்கித் தன் உடலால் அவளை மோதித் தள்ளினான். அம்முக்குட்டி ஆத்திரத்தில் தன்னை மறந்து காலிலுள்ள சிங்கப்பூர் ரப்பர்ச் செருப்பைக் கழற்றிப் போடு போடு என்று போட்டு விட்டாள். கடைத்தெருவே கூடி விட்டது! கேசவன் ஒரு ரௌடிப் பையன். யாரும் மத்தியஸ்தத்துக்கு வரவில்லை. கேசவன் பற்களைக் கடித்துக் கொண்டு பழி வாங்கும் பார்வையை வீசி விட்டு நடந்தான்.

சில நிமிஷங்களில் டீக்கடைக்கு இந்தச் செய்தி எட்டிவிட்டது. சேகரன் நாயர் பதறியவாறு கடையை இழுத்துப் பூட்டிக் கொண்டு வீட்டுக்கு நடந்தார். அவருக்குக் கேசவனைப் பற்றி நன்கு தெரியும். அவனும் அவன் கூட்டாளிகளும் எந்தவித அயோக்கியத்தனத்துக்கும் துணிந்தவர்கள். எத்தனையோ பெண்களைக் கடத்திக் கொண்டு போன புகழ் அந்தக் கும்பலுக்கு உண்டு. ஆகவே, வீட்டுக்கு வருவதற்குள் அவர் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டார்.

அம்முக்குட்டி ஆவேசம் கலந்த புலம்பலில் ஈடுபட்டிருந்தாள். அவள் தாயார் என்ன சமாதானம் செய்தும் பிரயோசனமில்லை. நாயர் உள்ளே நுழைந்தார். "அம்மு! இனி



இந்த ஸ்தலத்தில் ஒரு விநாடி நீ இருக்கக் கூடாது. நாலு புடவை பிளவுசுகளை ஒரு பையிலே எடுத்துக் கொள். இப்பவே உன்னைத் திருச்சூரிலுள்ள பாஸ்கரன் நாயர் வீட்டிலே கொண்டு போய் விடப் போகிறேன். இரண்டு வாரம் அங்கே தாமசித்துவிட்டு நீ வரலாம். அதற்குள் இங்கே சந்தடி அடங்கிவிடும். நான் இன்றைக்கு ராத்திரியே திரும்பியாக வேண்டும். கடைக்குப் பாதுகாப்புத் தேவை" என்று ஜரூர்ப்படுத்தினார். நாயரது மனைவியும் இந்த யோசனையை ஆமோதித்தாள்.

அன்று இரவு எட்டு மணி பஸ்ஸில் நாயர் அம்முக்குட்டியுடன் திருச்சூருக்குப் புறப்பட்டு விட்டார். திருச்சூரிலுள்ள பாஸ்கரன் நாயர் சேகரன் நாயருக்குத் தந்தை வழி உறவு. வசதியான பெரிய குடும்பம். அந்த வீட்டில் அம்முக்குட்டிக்கு நல்ல பாதுகாப்புக் கிடைக்கும்.

எதிர்பாராத விருந்தாளிகளைப் பார்த்து, பாஸ்கரன் நாயர் மகிழ்ச்சியோடு வரவேற்றார். விஷயத்தைத் தெரிந்து கொண்டதும் யோசனை செய்ய ஆரம்பித்தார். சேகரன் நாயரைப் பார்த்து, ''சேட்டா ! நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். இங்கே பக்கத்திலே இருஞ்சாலக்குடாவிலே எனக்குத் தெரிந்த குடும்பம் ஒன்று இருக்கிறது. அந்தக் குடும்பத்துப் பையன் சுகுமாரன் ஒண்ணாங் கிளாஸ் ஆசாமி. மெட்ராஸிலே ஒரு கம்பெனியிலே வேலை பார்க்கிறான். நல்ல சம்பளம். பேசாமல் அம்முக் குட்டியை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிடு. அவன்கூட இப்போ லீவில் வந்திருக்கிறான். நாளைக்கு மறுநாள் உன் மனைவியையும் அழைத்துக் கொண்டு இங்கே வா ! நாம் இருவரும் இருஞ்சாலக்குடாவுக்குப் போய்ப் பையனை இங்கே அழைத்து வருவோம். இருவருக்கும் சம்மதம் என்றால் உடனே மோதிரம் போடச் சொல்லிவிடலாம்'' என்றார் பாஸ்கரன் நாயர்.

சேகரன் நாயருக்கு எவ்வளவோ மனப் பாரம் குறைந்தாற் போலிருந்தது. அன்று இரவு பாசஞ்சரிலேயே சாலக்குடிக்குத் திரும்பினார். கேசவன் குழாம் தங்கள் கோபத்தைக் காண்பிக்காமல் இல்லை. அவருடைய டீக்கடை கண்ணாடி ஜன்னல்களில் நான்கு நொறுங்கியிருந்தன. அதோடு அந்தக் கோபம் தணிந்தால் சரி என்று எண்ணிக் கொண்டார்.

மாப்பிள்ளைப் பையன் சுகுமாரன் ரவிவர்மாவின் ஓவியத்திலிருந்து உயிர் பெற்று வந்தவன் போலத் தோன்றினான். ராஜ களை. சென்னையில் மோட்டார் பாகங்கள் விற்பனை செய்யும் ஸ்தாபனத்தில் அவன் பணியாற்றி வந்தான்.

அம்முக்குட்டியின் சௌந்தரியம் அவனை வசீகரித்ததில் வியப்பு ஒன்றும் இல்லை. அதே போல் அம்முக் குட்டியும் அவன் கம்பீர லாவண்யத்தில் மனத்தைப் பறி கொடுத்து விட்டாள். சுகுமாரனைச் சேகரன் நாயருக்குப் பிடித்து விட்டது. இந்தச் சம்பந்தம் விட்டுப் போகக் கூடாது என்ற ஆவலில் சேகரன் நாயர் தம் சக்திக்கு மீறியே பிள்ளை வீட்டாருக்குத் தேவையானவற்றை அளிக்க முன் வந்தார்.

திருமணத்தை உடனடியாக வைத்துக் கொள்ள முடியாத நிலை. சுகுமாரனுக்கு இன்னும் நான்கு நாட்களில் லீவு முடிகிறது. அவசியம் வேலைக்குத் திரும்ப வேண்டும். இன்னும் இரண்டு மாதங்கள் கழித்துத்தான் திரும்ப முடியும். சேகரன் நாயருக்கு இன்னும் இரண்டு மாதங்கள் இந்தப் பெண்ணைக் கட்டிக் காப்பாற்ற வேண்டுமே என்ற கவலை. ஆனால் வேறு வழி ?

மறு நாளே அவர்கள் சம்பிரதாயப்படி, சுகுமாரன் தங்க மோதிரம் கொண்டு வந்து அம்முக்குட்டியின் விரலில் மாட்டித் திருமண ஏற்பாட்டை உறுதி செய்து கொண்டான். திருமணம் முடிந்து அம்முக்குட்டி சென்னைக்குப் போகும் வரை திருச்சூரிலேயே இருக்க வேண்டும் என்ற ஏற்பாடாயிற்று. இந்தத் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது என்பதைக் கூடச் சாலக்குடியில் யாருக்கும் சொல்லச் சேகரன் நாயர் விரும்பவில்லை. அவருக்கு அவ்வளவு பயம்.

சேகரன் நாயர் வெளியே சொல்லாவிட்டாலும், இருஞ்சாலக்குடாவுக்குப் போய்த் திரும்பிய டிராயிங் மாஸ்டர் குட்டப்பனுக்கு இந்த விஷயம் எப்படியோ தெரிந்துவிட்டது. அவன் சாலக்குடிக்கு வந்ததும் கேசவனிடம் இதைச் சொன்னான். இருவருக்குமே ஏமாற்றம். தாங்கள் கண்ணி வைத்த பறவையை எவனோ பிடித்துக் கொண்டு போகப் போகிறானே என்ற ஆத்திரம். திருச்சூரில் போய் வாலாட்டத் தைரியம் இல்லை. கேசவன் யோசித்தான். ''குட்டப்பா ! இந்தக் கல்யாணம் நடக்காதுடா ! ஒரு கை பார்க்கிறேன்'' என்று சபதம் செய்தான். இருவரும் ரகசியம் பேச ஆரம்பித்தார்கள்.

* * *

சுகுமாரன் சென்னைக்கு வந்து பதினைந்து நாட்கள் கழித்து ஒரு நாள் பிற்பகல் அவனைச் சந்திக்க ஒரு நபர் வந்து காத்திருப்பதாகக் காரியாலயச் சிப்பந்தி அறிவித்தான். வெளி ஹாலில் அவனுக்காகக் காத்திருந்த நபரைச் சுகுமாரன் இதற்கு முன் பார்த்ததில்லை. அவனும் இளைஞன்தான். நாகரிகமாக உடை அணிந்திருந்தான். ஆனால் அவன் முகத்தில் உற்சாகம் இல்லை; சோகம் ததும்பியிருந்தது.

''மிஸ்டர் சுகுமாரன்! நான் சாலக்குடியாக்கும். யாசகம் கேட்டோ சிபாரிசு கேட்டோ உங்களைச் சந்திக்க வரவில்லை. உங்களிடம் பிரைவேட்டாக ஒரு விஷயம் பேச வேண்டும். ஒதுப்புறமாக இப்படி வாருங்கள். நாம் பேசுவது மற்றவர் காதில் விழவேண்டாம்'' என்ற இளைஞனைத் தொடர்ந்து சுகுமாரன் அவ் வராந்தாவின் மூலைக்கு வந்தான்.

சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு அந்த இளைஞன் தன் சட்டைப் பையிலிருந்து நான்கைந்து கடிதங்களை எடுத்துச் சுகுமாரனிடம் கொடுத்தான். எல்லாம் காதல் பொங்கும் கடிதங்கள். அம்முக்குட்டி அச்சுதன் என்ற நபருக்கு எழுதிய உணர்ச்சி ஓவியங்கள்.

''மிஸ்டர் சுகுமாரன்! நான்தான் அந்த அச்சுதன். எனக்கும் அம்முக்குட்டிக்கும் இரண்டு வருடங்களாக அந்யோந்நியமுண்டு. அவள் மேலே நான் உயிரையே வைத்திருக்கிறேன். இடையே நான் கோட்டயத்தில் ஜோலியாக இருந்தபோது, மோட்டார் முதலாளி மகன் கேசவன் ஏதோ வம்பு செய்திருக்கிறான். அதற்குப் பயந்து சேகரன் நாயர் மகளைத் திருச்சூரில் கொண்டு வைத்து உங்களுக்குத் திருமணம் நிச்சயம் செய்திருக்கிறார். தயவுசெய்து நீங்கள் இந்த ஏற்பாட்டிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். எங்கள் திருமணம் எப்போதோ நிச்சயமானது. நீங்கள் மறுத்தால் நாங்கள் இருவரும் தற்கொலை செய்து கொள்ளத் தயாராக இருக்

இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

அவர்களின் விஜயம்



சந்திக்கும் விலாசங்கள்

10-ந் தேதி **திருப்பத்தூர்** (N. A.): சங்கர் கபே பகல் 1 மணி முதல் 2-30 மணி வரை.

10-ந் தேதி **ஆம்பூர்:** N. A. B. லாட்ஜ், மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை.

11ந் தேதி **வேலூர்** (N.A.): அஜீஸ் மேன்ஷன்ஸ் காலை 8 மணி முதல் 11 மணி வரை.

11-ந் தேதி **குடியாத்தம்:** அலங்கார் லாட்ஜ் பகல் 1 மணி முதல் 3 மணி வரை.

12-ந் தேதி **பெங்களூர் ஸிடி:** நியூ எவரெஸ்ட் ஹோட்டல், காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை.

13-ந் தேதி **கிருஷ்ணகிரி:** ஸ்ரீ ராம் லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.

13-ந் தேதி **தர்மபுரி:** சீனிவாசா லாட்ஜ் காலை 11 மணி முதல் 12 மணி வரை.

13-ந் தேதி **சேலம்:** லக்ஷ்மி ராஜபவன் லாட்ஜில், பகல் 2 முதல் 5 மணி வரை.

15-ந் தேதி **ஈரோடு:** நவபவனம் லாட்ஜ் காலை 8 மணி முதல் 12 மணி வரை.

15-ந் தேதி **திருப்பூர்:** ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜில் பகல் 2 மணி முதல் 4 மணி வரை.

15-ந் தேதி **பொள்ளாச்சி:** ஹோட்டல் கீதாஞ்சலி, மாலை 5-30 மணி முதல் 7-30 மணி வரை.

16-ந் தேதி **கோவை:** விஜயா லாட்ஜ், காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

20 & 21-ந் தேதி **பம்பாய்:** சாரதா பவன (மாதுங்கா), காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

22 & 23-ந் தேதி **சென்னை:** ஹோட்டல் ஸ்ரீலேகா காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை

போன்: 316] **பழனி** [தந்தி: சித்தர்

நினைத்த உடன் தயார்

— இனி, மேலே வாசியுங்கள்!

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

'திடீரெக்ஸ்'

Dhideerex
(FOR INSTANT PREPARATION)

777

திடீர்

(Registered)

திடீர் அரிசி இட்லி கேக்

—கொதிக்கும் தண்ணீரிலோ சாம்பாரிலோ ஒரு நிமிஷம் ஊற வைத்தால் இட்லி தயார்.

திடீர் சாதம்

(Instant Cooked Rice)

கொதிக்கும் தண்ணீரில் சில நிமிஷம் போட்டு வைத்தால் தயார்.

இந்த சாதத்தில் சிறிது புளியோதரை பவுடர், உப்பு, நல்லெண்ணெயும் கலந்தால் புளியோதரை ரெடி.

மேற்படி சாதத்தில் பருப்பு பொடியும் நெய்யும் கலந்தால் பருப்பு சாதம் தயார்.

தயிர் சேர்த்தால் தயிர் சாதம்.

திடீர் வெஜிடபிள் பிரிஞ்சி

—கொதிக்கும் தண்ணீரில் சிறிது நேரம் வைத்திருந்து, அதற்கு அளவான உடனிருக்கும் பவுடரையும் சிறிது நெய்யும் கலந்தால் ரெடி.

திடீர் அரிசி சேவை (சேமியா) மிக்ஸ்

கொதிக்கும் தண்ணீரில் கலந்தால் ரெடி.

குறிப்பு: மேற்சொன்ன தயாரிப்புகளனைத்தும் அசல் தயாரிப்புகளுக்கு ஈடான ருசியுடன் இருப்பது நிச்சயம்.

எமது முக்கிய ஸ்பெஷல் தயாரிப்பு
வெஜிடபிள் பிரிஞ்சி
தயாரிப்பது வெகு சுலபம்!

— தயாரிப்பாளர்கள் —

M/s. R. S. N. அய்யர் & R. S. G. அய்யர்

— உரிமையாளர்கள் —

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.

(போன்: 20401 — PBX. 3 லைன்கள்)

46, தம்பு செட்டித் தெரு, சென்னை-1

தயாரிப்பு முறைகளை உருவாக்கியவர்கள்:

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்
அனலிட்டிக்கல் லாபரட்டரீஸ், சென்னை-1

கிறோம்'' என்று சொல்லிவிட்டுச் கருமாரனின் பதிலுக்குக் காத்திராமல் போய்விட்டான்.

கருமாரனின் உள்ளத்தில் சந்தேக வித்து விழுந்து விட்டது. அந்த இளைஞனின் உருக்கமான வார்த்தைகளில் நம்பிக்கையும் தோன்ற ஆரம்பித்தது. வந்தவன் அம்முக்குட்டி மேல் பொல்லாப்பு சொல்லவில்லையே? அவளுக்காக வாதாட வந்தவன் போல் அல்லவா தோன்றினான்! கருமாரன் யோசிக்க ஆரம்பித்தான்.

வாக்குக் கொடுத்தபடி அவன் லீவு எடுத்துக்கொண்டு இருஞ்சாலக்குடாவுக்குக் கிளம்பவில்லை. 'இப்போது கிளம்ப வசதியில்லை' என்று ஊருக்குக் கடிதம் எழுதினான். நாலு மாதங்கள் கழித்துச் சேகரன் நாயரே அவனைத் தேடிக் கொண்டு பட்டினத்துக்கு வந்துவிட்டார். கருமாரன் பிடிகொடுக்காமல் மழுப்பி அனுப்பி விட்டான். இடையே, குட்டப்பன், கேசவன் வியவகாரங்களைப் பற்றிச் சாலக்குடி நபர்களை விசாரித்துத் தெரிந்து கொண்டு ஒரு முடிவுக்கு வந்தான். சுமார் ஒன்பது மாதங்கள் கழித்து ஊருக்குத் திரும்பி வந்து பாஸ்கரன் நாயர் வீட்டுக்குப் போனான். ''எனக்கு இந்தத் திருமணத்தில் இஷ்டமில்லை. மோதிரத்தைத் திருப்பிக் கொடுத்து விடச் சொல்லுங்கள்'' என்றான்.

அம்முக்குட்டி சீறி எழுந்தாள். ''என் ஆவி போனாலும் இந்த மோதிரம் என் விரலை விட்டுப் போகாது. இந்த ஜென்மத்தில் இந்தத் திருமணம் இல்லை என்றால் வேறு கிடையாது. மோதிரத்தைத் திருப்பிக் கேட்கச் சரியான முகாந்திரம் என்ன?'' என்று படபடத்தாள்.

கருமாரனின் கண்ணியம், அவளை நடத்தை கெட்டவள் என்று குற்றம் சாட்டவும் தடை செய்தது. அவன் சந்தேகம் அவளைத் திருமணம் செய்து கொள்ளவும் தடை செய்தது. வாயைத் திறக்காமல் பட்டினம் திரும்பி விட்டான். தன் கல்யாணத்தைப் பற்றி மறந்துவிடத் தீர்மானித்தான்.

ஒரு வருடம் ஓடி விட்டது. அம்முக்குட்டி இப்போது திருச்சூரிலேயே ஆசிரியை உத்தியோகம் பார்க்க ஆரம்பித்திருந்தாள். அவள் மனத்தில் உறைந்த ஏக்கம் அவள் வனப்பைப் பாதித்தது. வயது முதிர்ந்த மாது போல் ஆகியிருந்தாள்.

* * *

காரியாலய வேலை சம்பந்தமாகக் கருமாரன் எர்ணாகுளத்துக்குப் புறப்பட்டுப் போக வேண்டியிருந்தது. கொச்சி மெயிலில் புறப்பட்டான். அன்று அந்த ரயில் சற்றுத் தாமதமாக ஓடிக் கொண்டிருந்தது. ஒலவக்கோடு ஜங்ஷனுக்கு ஏழுமணிக்கு மேல்தான் வந்தது. தேநீர் குடிக்கலாம் என்று கருமாரன் வண்டியை விட்டு இறங்கி நடந்தான். சிற்றுண்டிச்சாலை அருகே ஏதோ ஒரு கலாட்டா. இரண்டு மூன்று நபர்களாகச் சேர்ந்து ஓர் ஆசாமியைச் சரமாரியாக அடித்து உதைத்துக் கொண்டிருந்தார்கள். அடி வாங்கும் ஆசாமி தப்பி ஓடத் துடித்தான்.

அந்த நபரை எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. ஆம்! அச்சுதன் என்ற பெயருடன் தன்னைச் சந்திக்க வந்தவன். இதற்குள் வேறு யாரோ வந்து விலக்கி விடவே அவன் 'தப்பினோம் பிழைத்தோம்' என்று ஓடி ஸ்டேஷன் இரும்புக் கிராதி மேல் ஏறிக் குதித்துத் தலை மறைந்தான். கருமாரனுக்கு வியப்பாக இருந்தது. அவனை அடித்தவர்களில் ஒருவனை அணுகிப் பேச்சுக் கொடுத்தான்.

''என்ன சாரே!... அந்தப் பையன் பரம அயோக்கியன். ஊரிலே இருக்கிற பெண்கள் பின்னாலே எல்லாம் போய்ப் பல்லைக் காட்டுவான். சாலக்குடிக்காரன். ஒரு பொண்ணு எழுதறாப்போலே ஒரு கடுதாசி பொய்க் கையெழுத்துப் போட்டு எழுதி அவள் அப்பன் கிட்டே காண்பித்து விலை பேசினான். அந்த அப்பன் என்கிட்டே ஒரு வார்த்தை சொன்னான். ஒரு தட்டுத் தட்டினேன். இனிமேல் வாலை ஆட்ட மாட்டான். இரண்டு வருஷங்கள் கம்பி எண்ணி வெளியே வந்தப்புறம் கூடப் புத்தி வரலே! சாலக்குடியிலே இவனுக்குப் பணக்காரச் சிநேகிதர்கள் உண்டு! அவங்களுக்கு இவன் அடிமை!...''

மேலும் கேட்டுக் கொண்டு கருமாரன் நிற்கவில்லை. கேசவன், குட்டப்பன் இவர்களோடு அச்சுதனை இணைத்துப் பார்க்க அதிக நேரம் பிடிக்கவில்லை. அன்று அவன் நேராக எர்ணாகுளம் போகாமல் திருச்சூரிலேயே இறங்கினான். நேராகப் பாஸ்கரன் நாயர் வீட்டுக்குப் போனான். வாசலில் யாரோ ஒரு மாது நின்று கொண்டிருந்தாள்.

''நான் அம்முக்குட்டி அம்மாவைச் சந்திக்க வேண்டும்'' என்றான் கருமாரன். ''நீங்கள் அந்த அம்மாவுடன்தான் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று பதில் வந்தது. கருமாரன் திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தான்.

''நான் நடத்தை கெட்டவள் என்று சந்தேகித்துத்தானே மோதிரத்தைத் திருப்பிக் கேட்டீர்கள்? வாய் விட்டு அதைக் கூறவும் மனமில்லாமல் போனீர்கள்? உண்மையில் நடத்தை கெட்டவளாக இருந்தால் உங்களுக்காக இப்படி உடல் உருகிப் போயிருக்க முடியுமா? அவசியமா?'' என்றாள் அம்முக்குட்டி.

''அம்மு! என்னை மன்னிக்கணும். நான் உன் ஊர்க்காரர்கள் சதிக்குப் பலியாகிவிட்டேன். இப்போதே அதற்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். இன்றைக்கு நல்ல தினம். வாசலில் டாக்ஸி நிற்கிறது. குருவாயூரப்பன் சந்நிதிக்குப் போய்த் திருமணம் செய்து கொண்டு விடுவோம்'' என்றான் கருமாரன் நாத் தழுதழுக்க. அம்முக்குட்டி அப்படியே வாசலுக்கு வந்து விட்டாள்.

வழக்கம்போல் மாதாந்திர தரிசனத்துக்காகச் சாலக்குடியிலிருந்து குருவாயூர் வந்திருந்த சேகரன் நாயர், சந்நிதியில் அம்முக்குட்டியும் கருமாரனும் திருமணக் கோலத்தில் நிற்பதைப் பார்த்துப் பிரமித்துப் போனார். அவருக்குப் பேசவே முடியவில்லை! குருவாயூரப்பனைப் பார்த்து நெடுஞ்சாண் கிடையாகக் கீழே விழுந்து நமஸ்கரித்தார். ஆனந்தக் கண்ணீர் அவர் கண்களைக் குளமாக்கியது.

(சம்பவங்கள் உண்மை; பெயர்கள் மாற்றப் பட்டுள்ளன.)



தர்மம் செய்வதற்கும் ஆபத்தா?

தேவகோட்டை நகரின் இருதயமான பகுதியில் கோயமுத்தூர் சோமசுந்தரா மில் அதிபரான சோமசுந்தரம் செட்டியார் 1919ம் வருடம் ஆஸ்பத்திரிக்குக் கட்டிடம் கட்டிக் கொடுத்தார். அதையும் சுற்றிலுமிருந்த காலி இடத்தையும் நகரசபைக்கு இனாமாக வழங்கினார். நகரசபையார் இக்கட்டிடத்தில் ஆஸ்பத்திரியை நடத்தி வந்தார்கள். நகர மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தது இந்த ஆஸ்பத்திரி. பிரசவத்துக்கு ஏராளமான தாய்மார்கள் வந்தபடியால் அடுத்தடுத்து, முத்து க.மா. நடேசன் செட்டியார் என்பார் ஒரு பிரசவ வார்டும், சென்னை வியாபாரி கனி இராவுத்தர் ஒரு பிரசவ வார்டும் மெ. வ. மா. மாணிக்கம் செட்டியார் ஒரு பிரசவ வார்டும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுக் கட்டிக் கொடுத்தார்கள். அன்றைய அமைச்சர்களாக இருந்த குட்டியம்மாளு அம்மாள், கோபால் ரெட்டி, முதல்வர் பக்தவத்சலம் ஆகியோர் திறப்பு விழா நடத்தி வைத்தனர். இப்பொழுது திடீரென ஆஸ்பத்திரியைக் காலி செய்துவிட்டு, நகரசபை அலுவலகத்தை மாற்றி, சட்ட மந்திரி மாதவனைக் கொண்டு 12–3–72ல் திறப்பு விழாவும் நடத்திவிட்டார்கள். ஆஸ்பத்திரி நடத்தக் கட்டிடம் கட்டி நன்கொடையாக வழங்கினார்கள். இன்று அந்தத் தர்மத்தை தி.மு.க. நிர்வாக நகர் மன்றம் நிறுத்தி விட்டது.

இதேபோல் நகரின் வெ. ஊரணிப் பகுதியில் நகர் சிதம்பர விநாயகர் தேவஸ்தானத்தார் இடம் இனாமாக வழங்கி, பூங்கா ஒன்று அமைத்துக் கொடுத்தார்கள். இப்பொழுது பூங்காவை அழித்து விட்டுக் கடைகள் கட்ட ஆரம்பித்து விட்டனர். வருங்காலத்தில் தர்மம் செய்தால் கொஞ்ச நாட்களுக்கு நடத்திவிட்டு வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தி விடுவார்கள், ஆகவே, 'தர்மம் செய்ய வேண்டாம்' என எண்ணும் அளவுக்குத் தேவகோட்டை தி.மு.க. நகரசபை செயல்பட்டு வருவது கண்டு நகர மக்கள் வருந்துகின்றனர்.

தேவகோட்டை
21–3–72 — எஸ். மீனாட்சிசுந்தரம்

எங்கே காவிரிப் பெருக்கு?

நெல்லை ஆ. கணபதியின் கடிதம் ஒன்று 19–3–72 இதழில் வெளியாயுள்ளது. ''ஐம்பது சிகரெட்டுள்ள டின்னையும் தீப்பெட்டியையும் காவிரியில் எறிந்ததாக எழுதியுள்ளார். அவர் குறிப்பிட்டபடி தஞ்சாவூருக்கும் திருச்சிக்கும் இடையே உள்ள ரயில் பாதையில் ''பெருக்கெடுத்து ஓடும் காவிரி'' எங்குள்ளது? செயல் நன்றாயினும் இத்தகைய வருணனைகள் படிப்போர் மனத்தில் ஐயங்களை எழுப்புவது ஆச்சரியமில்லை.

ஜக்கார்பாளையம்
17–3–72 — நா. கிருஷ்ணன்

இளைஞர் உலகம் கெடலாமா?

சமீப காலமாகத் தமிழ் நாட்டில் பல ஆபாசப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவை அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டு வெளிவருகின்றன. இவை இக்காலத்து இளைஞர்கள் மனத்தைக் கெடுத்து அவர்களைத் தீய வழியில் செல்லத் தூண்டுகின்றன. இவற்றை நம் அரசாங்கம் கவனித்து அவற்றைத் தடை செய்து இளைஞர் உலகம் கெடாமல் தடுக்க வேண்டும்.

காஞ்சி
15–3–72 — வி. ஆர். நடராஜன்

ஆசிரியர்கள் அவதி

கொடைக்கானல் ஒன்றியத்தின் கொடுமை தன்னைக்
கூறுதற்கு வாய்திறந்தால் குன்றும் மானும்
கடையிழிந்த ஊழியராய்க் கற்பிப்போரைக்
கழகத்தின் நல்லாட்சி கருத்தில் கொள்ள
நடைப்பிணம்போல் வாய்மூடி நற்றொண்டாற்றி
நாடுநலம் காக்கவிழை நல்லெண்ணத்தில்
படைப்பாற்றல் தொழில்புரியும் பள்ளிஆசான்
படுகின்ற துயர்தனையே பாராயம்மா!

கொடைக்கானலில் சுற்றுலா மாளிகை கட்ட ஆசிரியர்கள் ரூ. 25 வீதம் கொடுக்க நேர்ந்தது.

நூறு ரூபாய் பரிசுச் சீட்டுகள் பள்ளிக்கு 300, 400 என்று தரவாரியாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டன.

பத்து ரூபாய் ஐந்து ரூபாய் சீட்டுக்களைப் பள்ளிக்கு இருநூறு முந்நூறு ரூபாய்க்குக் கொடுத்து விற்று எடுத்துக் கொள்ளும்படி சொல்லி எங்கள் ஊதியத்தில் பிடித்துக் கொண்டார்கள்.

அண்ணா சிலை அமைக்க நபருக்கு ஐம்பது ரூபாய் என்பது தற்போதைய திட்டம். இனி எவ்வளவோ யாமறியோம்.

ஹில் அலவன்ஸ், (Hill Allowance) தனியார்த் துறைப் பள்ளிகளில் பணியாற்றுவோரும் இதர (மருத்துவமனை பணியாளர், கால்நடை வைத்திய) இலாகாவினரும் பெறுகின்றனர். ஆனால் எங்களுக்கு இல்லை.

குளிர்கால அலவன்ஸ், (Winter Allowance) சில பள்ளிகளுக்குக் கொடுத்தும் சில பள்ளிகளுக்குக் கொடுக்கப்படாமலும் இருக்கிறது.

பெரியூர்
14–3–72 — ''நல்லாசிரியன்''

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31.
Managing Editor: T. Sadasivam



GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

Registered No. M. 4394
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)